Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஒக். 06-13, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 480




## ரணில் போடும் கணக்கு

## புலிகளின் பிடி







## பட்டத்தை பறிகொடுத்த உலக அழகி

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## திருநீறு (விபூதி)

முடிவில் யாவரும் ஒரு பிடி சாம்பல் ஆவர் என்ற உண்மையைத் திருநீறு உணர்த்துகிறது. மேலும் தூய்மையும், வெண்மையுமான நீறுபோல் நமது உள்ளம் தூய்மையாகவும், ஞான ஒளியுடையதுமாக இருத்தல் வேண்டும் என்பதையும் காட்டுகிறது. பசுவின் (ஜீவனின்) மலம் (ஆணவம், கன்மம், மாயை) என்ற மும்மலங்கள், தீயில் (ஞானத்தீயில்) நீறுகிறது என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. இக் கருத்தையொட்டியே சம்பந்தர் பெருமானும் மந்திரமாவது நீறு ..... திருநீறே" என்று பாடியுள்ளார். நீறில்லா நெற்றி பாழ்- என்பதும் ஒரு பழமொழி. சாணம் அசுத்தத்தையும், நோய்க் கிருமிகளையும் அகற்றுவதை யாவரும் அறிவர். சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் திருநீறு தலையிலுள்ள நீர்க்கட்டு , தலைவலி, உடம்பிலுள்ள கிருமிகள் முதலியவற்றை அகற்ற வல்லது. ஆதலால் காலை, மாலை வேளைகளிலும், குளித்த உடனும், உணவுக்கு முன்னும், விபூதி அணிதல் வேண்டும். இந்துக்களின் முக்கிய சமய சின்னம் திருநீறாகும். எனவே இந்துக்கள் தயங்காது தவறாமல் விபூதி தரித்தல் வேண்டும்.

எம். வை. றஸ்வானா, கல்முனை-5.

# ஆன்மீகம்



## இனி ஒருவரும் மனச்சோர்வடையாத காலம்

கடைசி நாட்களில் பூமியின் மீது வரக்கூடிய பயங்கரமான காரியங்களை இயேசு விவரித்த போது, அவர் மேலும் இவ்விதமாகச் சொன்னார். "இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்." (லூக்கா 21:28) கடவுளுடைய நீதியுள்ள புதிய உலகிற்குள்ளான விடுதலையைப் பற்றி இயேசு பேசிக்கொண்டிருந்தார். அங்கு "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்."-

ரோமர் 8:20

கடந்த காலத்தின் பாரங்களிலிருந்து விடுதலையாக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் பளிங்கு போன்ற தெளிவான மனதுடன் விழித்தெழுந்து அந்த நாளின் வேலையைச் சமாளிப்பதற்கு ஆவலுள்ளவர்களாய் இருப்பது மனிதவர்க்கத்திற்கு என்னே ஒரு விடுதலையாய் இருக்கும்! இனிமேலும் அதிகமான மனச் சோர்வினால் எவரேனும் தடைசெய்யப்படமாட்டார். மனிதவர்க்கத்துக்கான நிச்சயமான வாக்குறுதியானது, "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்: இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின." என்பதாகும்- வெளிப்படுத்துதல் 21:3,4.

## இறையுணர்வு

ஒரு முஸ்லிமின் மிக உச்சக்கட்டப் பண்பு இறை நம்பிக்கையே என்று குர் ஆன் கூறுகிறது.

* உங்களில் யார் மிகவும் இறையச்சமுடையவராக இருக்கின்றாரோ அவனே அல்லாஹ்விடத்தில் மிகக் கண்ணியவான்! (49:13)

* "அவர்கள் வசதியுள்ள நிலையிலும், வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள். சினத்தை அடக்கிக் கொள்வார்கள். மேலும் மக்களை மன்னிப்பார்கள். இத்தகைய உயர் பண்பினரை இறைவன் நேசிக்கிறான். (3:133-134)

* "தொழுகையை நிலை நிறுத்துங்கள். நல்லவற்றை ஏவுங்கள், தீமைகளை விலக்குங்கள். சிரமங்களைச் சகித்துக் கொள்ளுங்கள். செயல்களில் இது சத்திய நிலைப்பாடாகும் மனிதர்களை விட்டு முகத்தைத் (பெருமை கொண்டு) திருப்பிக் கொள்ளாதீர்கள். பூமியில் பெருமையுடன் நடக்காதீர்கள். கர்வம் கொள்வோரை இறைவன் நேசிப்பதில்லை. நடத்தையில் நடுநிலையை விரும்புங்கள். குரலையும் தாழ்த்திக் கொள்ளுங்கள். நிச்சயமாக குரல்களிலெல்லாம் மிக அருவருக்கத் தக்கது கழுதையின் குரலே" (31:18-19)

எம். வை. றஸ்வானா, கல்முனை-5.

## கவிதைப் போட்டி இல. 477



பரிசுக்குரிய கவிதை

### ஏக்கம்

தாய் என்று நினைத்து
தலையினில் தஞ்சம் கோர
சேயான கன்றிங்கே
சேர்த்ததுவே இக்குஞ்சுதனை
சேர்த்தாலும் ஏங்குகின்றது
தனக்குமொரு
தாய் கிடைப்பாளா என்று.

சதீஸ்குமார் சகிலா, பண்டத்தரிப்பு.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### ஒன்றாகவே...

கசாப்புக் கடைக்காரனே எம்
கடைசி ஆசையிதுதான்
காலதாமதம் செய்யாமல்
இருவர் கழுத்தையும்
ஒன்றாகவே வெட்டிவிடு
அக் காட்சியைக் கண்டுகொள்ள
இராண்டாமறிவிற்கு இரும்பு
இதயமில்லையென்பதினால்.

யோ. ஜோதிகா-திருமலை.

### நாளைய விடியல்

என் தலையில் மட்டுமல்ல
மனதிலும் அனைவருக்கும் இடமுண்டு
மானிடரும் இதை உணர்ந்தால்
நேற்றைய கசப்பான நிஜங்களும்
உள்ளத்து ஊமைக் காயங்களும்
நாளைய விடியலில் காணாமல்
போகுமல்லவா!

பழனிவேல் குமாரி, சலங்கண்டியூர்.

### ஒற்றுமையின் உயர்ச்சி

இனத்தால் வேறுபட்ட
எங்களிடம் உள்ள ஒற்றுமை
குலத்தால் ஒன்று பட்ட
உங்களிடம் உள்ளதா?
காட்டுங்கள் பார்ப்போம்

கேக்கே டீன், ஏறாவூர்-03.

### இரு உயிர்களின் வேதனை..

யுத்தப் பசி நீங்கிவிட்டாலும்-உங்களுக்கு
எங்களின் இரத்தப் பசி நீங்குமோ?
பொத்திப் பொத்தி வளர்ப்பதெல்லாம்.
வெட்டிச் சாய்த்து ருசி (புசி)க்கவே
எங்களின் உணர்வுக்காக இங்கே
குரல் கொடுக்க யாரும் இல்லையே!

மூக்கன் புனிதன், பசறை.

### புரிந்துணர்வு

சாதி எனும் சாக்கடைக்குள்
புதையுண்ட மானிடர்க்கு
புதுப்பாடம் புகட்டவா...
இந்தப் புரிந்துணர்வு உனக்குள்.

வளலாய் செல்வகுமார்.

### வியப்பென்ன? விந்தை என்ன?

காக்கையின் கூட்டினிலே
கானக்குயில் முட்டையிடும்போது
கோமாதாவின் சிரசில்
கோழிக்குஞ்சார் குந்தியிருப்பதில்
வியப்பென்ன? விந்தையென்ன?

சி. ஐநூல்பாயிதா, ஏறாவூர்-03.

### நட்புறவு

அழிக்கும் அராஜகத்தில்
அடைக்கலம் கொடுத்துதவ
மனிதத்திடம் காணும் வஞ்சனை
மிருகத்திடம் இல்லையே

தே. லோஜனா, கொழும்பு-06.

## கவிதைப் போட்டி இல. 480



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.10.2002

கவிதைப் போட்டி இல.480
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### கிடைக்குமா வாழ்வு!

வானத்தில் நிலவு
வாழ்க்கையில் செலவு
தூரத்தில் கனவு
துணையில்லை உறவு
விடியவில்லை இரவு
விழியிரண்டில் கசிவு
கிடைத்ததெல்லாம் அழிவு
கிடைக்குமா வாழ்வு!?

ஏ. எம். மினா, நிந்தவூர்-02.

### காப்பாயா?

என்ன இது என்ன இது
என்று எண்ணத் தோன்றும்!
நெட்டில் இருந்து இன்ர நெட்டில் இருந்து
என்று மனம் எண்ணக் கூடும்!
உயிரும் மெய்யும் கவி வடிக்க
உயிரோடு உயிராய் போராடும்!
கன்றே பசும் கன்றே குஞ்சைக் காப்பாயா?
எம் நாட்டு அரசியல் போல்
நேரத்துக்கு நேரம் ஆட்டிக் கவுப்பாயா?

எஸ். கண்ணாளன், வன்னி.

# உங்கள் பக்கம்

## வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுங்கள்

நாடு முழுவதிலும் மோசமான வறட்சி நிலவுவது அனைவரும் அறிந்ததே. குறிப்பாக அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களில் வறட்சியின் பாதிப்பு மிக மோசமாகக் காணப்படுகிறது. மாதக் கணக்கில் விவசாய நிலங்கள் வறண்டு கிடப்பதால் மக்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளார்கள். அத்தியாவசியத் தேவைகளுக்கான குடிநீரைப் பெறுவதற்கே பல மைல் தூரம் நடக்க வேண்டியிருப்பதால் விவசாய ஜீவனோபாயம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந் நிலையில் வறட்சியால் மிக மோசமான பாதிப்பை எதிர்கொண்டு அன்றாடத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளச் சிரமப்படும் மக்கள், நாடு முழுவதும் உள்ள வசதி படைத்த வள்ளல்களின் உதவியை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இயற்கையின் சீற்றத்தால் உள்நாட்டுக்குள்ளேயே அவதிப்படும் மக்களுக்கான உதவிகள் மிகவும் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றன. தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி வறட்சி காரணமாகத் தமது ஜீவனோபாயத்தை இழந்து துன்புறும் அனைத்து மக்களுக்கும் வசதி படைத்தவர்கள் உதவ வேண்டும் எனத் தினமுரசு ஊடாக வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

அரசாங்கமோ, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளோ பிரசாரம் செய்யும் அளவுக்கு உதவிகள் எதனையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதில்லை. மக்கள் தொடர்ந்தும் கஷ்டத்தில்தான் இருக்கிறார்கள். ஆதலால் அவசர உதவி தேவைப்படும் மக்கள் இனிமேலும் அரசாங்க உதவியை எதிர்பார்த்திருப்பதில் பயனில்லை என்று நம்பிக்கை அற்றுப்போய்விட்டது. அதனால் ஆர்வமுள்ளவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு உரிய உதவிகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முகமட் ரசீன், மொனறாகலை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# வாசக[ர்] சாலை



பிரியமான முரசே,

கவிதை நெஞ்சங்களுக்குக் காத்திரமான கவிதைகளை அறிமுகப்படுத்தும் உன்னுடைய "சிறப்புக் கவிதை" என்னும் பகுதி வெளிவரத் தொடங்கியதில் இருந்து உன்னில் மேலும் பொலிவு தோன்றுகின்றது. வளரும் கவிஞர்களின் கவிதைகளைத் தேன்கிண்ணத்தில் பிரசுரித்து அவர்களை ஊக்கப்படுத்தும் அதேவேளை, வளர்ந்த கவிஞர்களின் சிறப்பான நவீன கவிதைகளை அதே பக்கத்தில் பிரசுரிப்பதன் மூலம் வளரும் கவிஞர்களுக்கு நவீன கவிதைகளையும் அறிமுகப்படுத்தி அவர்களை வளர்க்கும் உனது உத்தி வரவேற்கத் தக்கது. மேலும் "காற்று வாக்கில்" கலை ஊடகங்களில் நிகழும் திருகுதாளங்களை மெல்ல நெருடுவதும், "தகவல் பெட்டி" உலகின் வியப்புக்குரிய விடயங்களை எம் உள்ளங்கையில் செருகி விடுவதும் "நெட்டிலிருந்து" எம் புருவங்களை உயர்த்தும் அம்புகளை எய்தும்.... என்ன என்று சொல்வேன் உன் அழகுகளை.

ஷிபானா, கல்கின்னை.

அன்பின் தினமுரசுக்கு,

கடல் கடந்த நாடுகளில் வாழ்ந்தாலும் எம் சொந்த மண்ணில் வாழ்வது போன்ற உணர்வு, முரசை வாசிக்கும் போதுதான் எமக்குக் கிடைக்கின்றது. ஒரு பக்கக் கருத்தை மாத்திரம் திருப்பித் திருப்பிக் கூறிக்கொண்டிருக்கும் ஈழத்துத் தமிழ்த் தொடர்பூடக மரபிலிருந்து வேறுபட்டு, சகல தரப்புக் குறை நிறைகளையும் பக்கச்சார்பின்றிச் சுட்டிக் காட்டும் நேர்மையும், தனித்துவமான சேவையும் என்றும் தொடர வாழ்த்துக்கள்.

ஆர். பிரான்ஸிஸ், கனடா.

கவிதைப் போட்டியில் வெளிநாட்டில் உள்ளவர்கள் ஃபெக்ஸ் மூலம் பங்கு கொள்ள வசதி செய்திருப்பதையிட்டு முரசு ஆசிரியர் குழுவுக்கு நன்றி. ஈமெயில் மூலம் அனுப்பப்படும் ஆக்கங்களையும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

என். சதீஷ், மெல்பெர்ன், அவுஸ்திரேலியா.

முரசில் சில நேரங்களில், நெட்டிலிருந்து, சினிமா போன்ற பகுதிகளில் சற்றுப் பெரிய அளவிலான கட்டுரை வடிவுடைய தகவல்கள் வெளிவருகின்றன. கூடுமானவை சிறிய செய்திகளை அதிக அளவில் வழங்கினால் சிறப்பாக இருக்கும்.

எம். எஸ். எம். அஸ்லம், ஏறாவூர்.

முரசே, "மாயா, மாயா, சாயா, சாயா" என்பது போல் ஒரு வழிப்படுத்தப்பட்ட திசையில் மற்றெல்லாப் பத்திரிகைகளும் ஒரு மாயைக்குள் வீழ்ந்து கொண்டிருக்கையில் " என் வழி தனி வழி" என்று நடுநிலைமையான மாற்றுக் கருத்துக்களை அள்ளித் தரும் உனது பணியை, பாணியை மெச்சுகின்றேன். "எக்ஸ்ரே ரிப்போட்டாய் இருந்தால் என்ன, "காதில பூ கந்தசாமி"யாய் இருந்தால் என்ன, "அதிரடி அய்யாத்துரை"யாய் இருந்தால் என்ன யாவற்றிலுமே நாசூக்காகச் சொல்லப்படும் இன்றைய அரசியல் தன்மை படு யதார்த்தமானது. வாசகர்களின் விருப்பத்துக்குரிய செய்திகளை மட்டுமே தருவது ஒரு பத்திரிகையின் முழுக் கடமையாகாது என்பதை நீ நன்றாகவே உணர்ந்திருக்கின்றாய்.

சொல்லப்படாத, அல்லது சொல்ல விருப்பப்படாத செய்திகளையும் முன்கொண்டு வரும் முரசே தொடர்க உன் பணியை, பாணியை.

எஸ். சுரேஸ், யாழ்ப்பாணம்.

தினமுரசு ஆசிரியர் அவர்களுக்கு,

எமது அபிமான முரசில் அரசியல் விஷயங்கள் கூடிவிட்டது போல் உணர முடிகிறது. பொழுது போக்கு அம்சங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். குறுக்கெழுத்துப் போட்டி, நகைச் சுவைத் துணுக்குகள் என்று புதிய அம்சங்களைச் சேர்த்துக் கொண்டால் முரசு மேலும் மெருகேறும். உன் சேவை என்றும் தொடர வாழ்த்துக்கள்

என். புஷ்பா, மஹியங்கனை.

### முரசுக்கு மடல் அனுப்பியவர்களுள் இடமுள்ளவரை இடம் பிடித்தவர்கள்.

நிழ்வான்- மல்வானை
ரஞ்சனா- ஹப்புத்தளை
பிரியவதனி- மன்னார்
முஸம்மில்- மாத்தளை
ரகுவரன்- கல்லாறு
சத்தியவாணி - மட்டக்குளி
ரிஸ்னா- கல்முனை
முகமட்பெரோஸ்- சிலாபம்
வினிதா- நுவரெலியா

# வாழைச்சேனையில் வீதித் தடைகளை அகற்றுமாறு
## கோரி ஆர்ப்பாட்டம்! பொலிஸாருடன் கைகலப்பு!

மட்டக்களப்பு-கொழும்பு வீதியில் உள்ள வாழைச்சேனைச் சந்தி பொலிஸ் நிலையத்தையும் அதனோடு இணைந்த வீதித் தடைகளையும் அகற்றுமாறு கோரி கடந்த செவ்வாய்க்கிழமை பொது மக்கள் சிலரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின்போது பொலிஸாருடன் கைகலப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பொதுமக்கள் வீதித் தடைகளை அடித்து உடைத்ததுடன் பொலிஸ் ஜீப் ஒன்றையும் சேதத்துக்குள்ளாக்கினர்.

காலை வேளையில் ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. வாழைச்சேனை நகரிலும் அண்மித்தும் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பொலிஸ் நிலையச் சந்தியில் ஒன்று கூடி அரசு-புலி உடன்படிக்கைக்கு அமைவாக வீதித் தடையை அகற்றுமாறு வழியுறுத்தத் தொடங்கினர். ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் நிலையத்தின் பெயர்ப் பலகையை அடித்து நொருக்கியதோடு வீதியில் போடப்பட்டிருந்த தடைகளையும் உடைத்தெறிந்தனர்.

தங்களுக்கு மேலதிகாரிகளின் உத்தரவின்றி நினைத்த மாத்திரத்தில் வீதித் தடைகளை அகற்ற முடியாது என வாழைச்சேனைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் கூறியிருக்கிறார். இதற்கிடையில் நிலைமையைக் கட்டுப்படுத்தும் முகமாக அவசரக் கூட்டமொன்று வாழைச்சேனை பத்திரிகையாலையில் இடம்பெற்றது. இதில் இராணுவ அதிகாரிகளும் உள்ளூர் புலி உறுப்பினர்களும் மதத் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 7ம் திகதிக்குள் வீதித் தடைகளை நீக்குவது குறித்துச் சாதகமான முடிவு எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த இந்த வீதி கடந்த மாதம் பொதுப் போக்குவரத்துக்காக காலை 6மணி முதல் மாலை 6 மணிவரை திறக்கப்பட்டிருந்தது. அதனை நிரந்தரமாகத் திறந்துவிட்டுத் தடைகளை முற்றாக அகற்றுமாறே ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

# மேல் கொத்மலைத் திட்டம்
## மலையத்தில் அதிகரிக்கும் எதிர்ப்பலை

மேல் கொத்மலை நீர் மின் திட்டத்திற்கு மலையக மக்கள் மத்தியிலான எதிர்ப்பு வலுவாக அதிகரித்து வருகிறது.

**மேல் கொத்மலைத் திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகள் அதனை ஆதரிப்பவர்களின் அரசியல் பேரங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் அடங்கிய விசேட ஆய்வு அடுத்தவார முரசில் இடம்பெறும்.**

இந்தத் திட்டத்தினால் மலையகத்திற்கும் அதன் ஜீவநாடியான தேயிலைத் தொழிற் துறைக்கும் ஏற்படப்போகும் ஆபத்துக்கள் குறித்து மலையக மக்கள் மத்தியில் பரவலான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேவேளை இந்தத் திட்டத்திற்கு முழு அளவில் எதிர்ப்புத் தெரிவிக்குமாறு அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கத் தேரர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

விக்டோரியாத் திட்டத்தினால் இந்த நாட்டிற்கு ஏற்பட்ட இயற்கை மற்றும் சமூக சீர்கேடு லேசானதல்ல எனத் தெரிவித்திருக்கும் சங்கைக்குரிய தேரர் அதனைப் பார்த்துக் கொண்டு மேல் கொத்மலைத் திட்டத்துக்கும் ஆதரவு தெரிவிக்க முடியுமா எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

# விமானப் படையினரின் சம்பளப்பணத்தில்
## ரூ. 1000 கள்ளநோட்டுக்கள்

கட்டுநாயக்கா விமானப்படை உத்தியோகத்தர்களின் இந்த மாதச் சம்பளப் பணத்தில் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் கலந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விமானப் படையினருக்குச் சம்பளம் வழங்குவதற்கென சுமார் மூன்றரைக் கோடி ரூபா பணம் நீர்கொழும்பிலுள்ள அரச வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டுள்ளது.

விமானப் படையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தனது சம்பளப்பணத்தைப் பொத்துகர பிரதேசத்தில் உள்ள வங்கியொன்றில் வைப்புச் செய்யச் சென்றபோது இந்தக் கள்ள நோட்டுகள் பற்றிய விவரம் தெரிய வந்துள்ளது. இதனை அடுத்து அந்தப் பெண் உத்தியோகத்தர் கட்டுநாயக்கா விமானப்படை நிர்வாக அதிகாரிகளுக்கு இதுபற்றித் தகவல் தெரிவித்தார். போரதனையில் வசிக்கும் மற்றுமொரு விமானப் படை அதிகாரியின் சம்பளப் பணத்திலும் ஆயிரம் ரூபா கள்ள நோட்டுகள் இருந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமானப் படையினரின் சம்பளப் பணத்தில் கலக்கப்பட்டிருந்த 14 போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சம்பளப் பணத்துடன் கலக்கப்பட்டுள்ள நோட்டுக்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்குமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தக் கள்ள நோட்டுக்கள் சம்பள பணத்தில் எப்படிச் சேர்க்கப்பட்டது என்பது இதுவரை மர்மமாகவே உள்ளது.

# வல்லுறவுக்குள்ளான சிறுமி கொடூரமாகக் கொலை

அக்கரைப்பற்றில் சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சிறுமி, சுந்தரலிங்கம் சுதாமலர் (வயது 15) என்பவர் ஆவார். சம்பவம் தொடர்பாக கமல் (வயது 23) என்ற சந்தேக நபர் அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் ஏறாவூர் அரசியல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டார். புலிகள் சந்தேகநபரை விசாரணை செய்துவிட்டு பொலிஸில் ஒப்படைத்தனர். இறந்த சிறுமியின் கழுத்தில் கூரான ஆயுதம் ஒன்றினால் ஆழமாக வெட்டப்பட்டுள்ளது. இதனால் இரத்தக் குழாய்களும், சுவாசக் குழாயும் துண்டிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக ஏற்பட்ட இரத்தப் பெருக்கின் காரணமாக மூச்சுத் திணறி மரணம் சம்பவித்திருக்கிறது என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# அரச அதிகாரிகள் தினமும் 16 மணி நேரம் பணியாற்ற வேண்டுமாம்!
## இது மோனகுருசாமியின் வேண்டுகோள்!

“இதுவரை காலமும் நமது பிள்ளைகள் தியாகம் செய்ததைப் போல் இனிமேல் பெற்றோரும் தியாகம் செய்ய முன்வரவேண்டும்”. இவ்வாறு உணர்ச்சி மேலிட உரையாற்றினார் மூன்றாவது தடவையாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராகப் பொறுப் பேற்றுள்ள இ.மோனகுருசாமி.

புலிகள் இயக்கத்தினரால் இம்மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை பொருண்மிய மேம்பாட்டுக் கண்காட்சி மட்டக்களப்பில் நடாத்தப்படவுள்ளது. அது சம்பந்தமான புலிகளின் ஆலோசனைக் கூட்டம் மட்டு அரசடி தேவநாயகம் மண்டபத்தில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்தில் மோனகுரு சாமி உரையாற்றிய போது; “எமது பிரதேசத்தை மிக விரைவாக நாம் கட்டியெழுப்புவதற்குக் குறைந்த பட்சம் அரச அதிகாரிகள் தினமும் 16 மணித்தியாலங்களாவது பணி புரிய வேண்டும். விடுமுறை பெறுவதை முடிந்தளவு குறைத்துக் கொள்ள வேண்டும். அரச அதிகாரிகளுக்குரிய படிப்பு விடுமுறை, புலமைப் பரிசில் விடுமுறை என்பனவற்றை வழங்க வேண்டாமென நான் சிபார்சு செய்துள்ளேன்” என்றும் மோனகுருசாமி தெரிவித்தார்.

# மறுப்பறிக்கை விடுமாறு
## மேயர் மீது அழுத்தம்

புலிகளின் வரி அறவிட்டைக் கண்டித்து யாழ்.மாநகர சபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே.தற்போது இந்தத் தீர்மானம் தொடர்பாக மறுப்பு அறிக்கை விடுமாறு யாழ். மேயர் கந்தையா மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியால் நிர்வகிக்கப்படும் யாழ்.மாநகர சபையில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் புலிகளின் வரி அறவீடு கண்டிக்கப்பட்டதுடன் ஏகபிரதிநிதித்துவமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் அனைத்துக் கட்சிகளும் பங்கு கொள்ள வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தொடர்பாக புலிகளுக்கு அறியக் கிடைத்ததும் இதனை மறுத்து அறிக்கை விடுமாறு மேயர். கந்தையா வலியுறுத்தப்பட்டு வருகிறார்.

# ஆனந்தசங்கரியைப் பாதுகாப்பது யார் ?

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி புலிகளின் கோபத்துக்கு ஆளாகாமல் அவரைக் காப்பாற்றி வருவது தான்தான் எனக் கூட்டணி எம்.பி. ரவிராஜ், கட்சி உறுப்பினர்கள் மற்றும் சகபாடிகள் மத்தியில் பிரஸ்தாபித்து வருகிறார். ஆனந்த சங்கரி புலிகளின் தடையையும் மீறி ஐ.நா. சபை கூட்டத் தொடருக்குச் செல்லவில்லை என்றும், அவரது மகளின் திரு மண வைபவத்தில் கலந்து கொள்ளவே அவர் அங்கு சென்றதாகவும் தான் புலிகளிடம் கூறி ஆனந்தசங்கரியைப் புலிகளின் கோபத்திலிருந்து பாதுகாத்துள்ளதாக ரவிராஜ் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் கூறியிருக்கிறார்.

# குடாநாட்டில் மதுபான வியாபாரம் கூட்டிணைப்பு

யாழ்ப்பாணத்தில் பரவலாகக் காணப்படும் மதுபான விற்பனை நிலையங்களை முடிவிட்டு அவற்றுக்குப் பதிலாக ஒரு பிரதேசத்திற்கு ஒருவர் மாத்திரம் கடை திறக்க வேண்டும் எனப் புலிகளால் கேட்கப்பட்டுள்ளது. பல பிரதேசங்களில் சிறிய கடைகள் நிரம்பிக் காணப்படுவது நிர்வாக ரீதியில் சில அசௌகரியங்களைப் புலிகளுக்கு ஏற்படுத்தி இருப்பதால் ஒரு பிரதேசத்தில் ஒருவர் மாத்திரம் மதுபான விற்பனையில் ஈடுபட்டால் அது வசதியாக இருக்கும் எனப் புலிகள் கருதுவதனாலேயே இந்தப் புதிய ஏற்பாடு அமுலுக்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# “கடந்த எட்டு மாதங்களில் ஹக்கீம் பல தவறுகளைச் செய்திருக்கிறார்”
## —ஹிஸ்புல்லாஹ்—

அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த எட்டு மாதங்களில் பல தவறுகளைச் செய்திருப்பதாகக் கூறியிருக்கும் தேசிய ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஹக்கீம் தொடர்ந்தும் அந்தத் தவறுகளைச் செய்வாரானால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தமக்கான ஒரு தலைவரைத் தெரிவு செய்ய முயற்சிப்பர் என்றும் தெரிவித்துள்ளார்.

சிங்கள நாளிதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்திருக்கும் ஹிஸ்புல்லாஹ் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிங்கள மக்களிடையேயும் எமது பிரச்சனையை நேரடியாக எடுத்துச் செல்லவே தேசிய ஐக்கிய முன்னணியின் (நு.ஆ) தலைவி பேரியல் அஷ்ரப் ஜே.வி.பி. மேடைகளில் ஏறினார். ஆயினும், ஜே.வி.பி. யுடன் இணைந்து செயற்பட நாம் தயாராக இல்லை.

“வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முஸ்லிம்களுக்கெனத் தனியான ஓர் அலகு தேவை என்று கூறுகிறோம். அச் சபைக்கு ஜே.வி.பி. எதிர்ப்புக் காட்டியிருக்கிறது. அதன் உண்மை நிலையை அவர்களுக்கு உணர்த்தவே அந்த மேடைகளில் ஏறினோம். அந்த மேடைகள் ஜே.வி.பி. மேடைகளல்ல. பொதுவான மேடைகள்” என்று அவர் கேள்வியொன்றுக்குப் பதிலளித்திருக்கிறார்.

19ஆவது அரசமைப்புச் சட்ட திருத்தம் தொடர்பாக அரசுடன் பேச்சு நடத்தி வருகிறோம். எமது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தித் தனியான நிர்வாக அலகை வழங்கப் பிரதமர் இணங்கினால் 9 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்போம். ரவூப் ஹக்கீமின் தலைமையின் கீழ் செயற்பட நாம் தயாராக இருக்கிறோம். அவருக்கு எதிராகச் செயற்பட்டால் முஸ்லிம் மக்களுக்கே அதனால் பாதகம் ஏற்படும். கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் பிரச்சனையை அறிந்து அவர் செயற்படுவாரேயானால் அவர் தலைவராக இருப்பதில் பிரச்சனை இல்லை.

ஆயினும், கடந்த எட்டு மாதங்களில் அவர் பல தவறுகளைச் செய்திருக்கிறார். அத் தவறுகளை அவர் மேலும் செய்வாரேயானால் தமக்கென ஒரு தலைவரைத் தெரிவு செய்யக் கிழக்கு முஸ்லிம்கள் முயற்சிப்பார்கள். அரசு- புலிகள் உடன்படிக்கையை அவர் ஆதரித்தது தவறாகும். அந்த உடன்படிக்கையில் முஸ்லிம் மக்கள் குறித்த ஒரு சொல் கூட இல்லை. ஹக்கீம்- பிரபா உடன்படிக்கை குறித்துத் முஸ்லிம் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டுமாறு நூறு தடவைகள் கோரினேன். அவர் அவ்வாறான ஒரு கூட்டத்தைக் கூட்டவில்லை. முஸ்லிம் மக்களுக்காக எமது வேறுபாடுகளை மறந்து ஐக்கியப்படுவோம் என்ற அடிப் படையிலேயே ஐக்கியமாகச் செயற் பட முயலுகிறோம். இவ்வாறு அவர் பேட்டியில் கூறியிருக்கிறார்.

# முரசம்

## மேல் கொத்மலைத் திட்டம் மலையகத் தமிழரின் கதி என்ன?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இந் நாட்டின் வளத்துக்கு வலுச் சேர்த்த மக்கள் மலையகத் தமிழ் மக்கள். இலங்கையின் பொருளாதாரத்தை நீண்டகாலமாகத் தமது முதுகுகளில் சுமந்து வருபவர்கள் இம் மக்கள். இருந்த போதிலும் அவர்கள் வாழ்வில் சுபீட்சம் என்பது இதுவரை எட்டிப் பார்க்கவில்லை. ஆனால் அவர்களை அடிக்கடி ஆபத்துகள் சூழ்வதுண்டு. இனக் கலவரங்களில் உயிர் உடமை இழப்புகளுக்கு இவ் அப்பாவி மக்கள் உள்ளான வரலாறு உண்டு. அரசாங்கத்தின் பலவேறு திட்டங்களால் இம் மக்களின் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டதுண்டு. இடம் பெயர நேர்ந்ததுண்டு. தொழில்களை இழந்து, தமது சமூக வாழ்வை இழந்து நடுத் தெருவுக்கு வந்ததுண்டு. இன்றும் அப்படியான ஒரு ஆபத்தாகவே மேல் கொத்மலைத் திட்டமென்பது மலையக மக்களின் பிரதேசத்தில் மேற்கொள்ளத் தயாராகி வருகிறது. நாட்டின் மின் நெருக்கடிக்குப் பரிகாரமாக மலையக மக்களைப் பலிக்கடாக்களாக்கும் நடவடிக்கையாக இதை அரசாங்கம் முன்னெடுக்கிறது. நாட்டின் ஏனைய பல பிரதேசங்களில் மேற்கொள்ள முற்பட்ட பல அனல் மின்நிலையத் திட்டங்கள் அப்பிரதேச மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ள நிலையில், இங்கே, மலையக மக்களைப் பொருட்படுத்தாமல் இந் நீர்த்தேக்கத் திட்டத்தை மேற்கொள்ள, சகல தயாரிப்புகளையும் அரசாங்கம் மேற்கொண்டு, அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது. நீண்டகாலத்துக்கு முன்னரே முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்காவின் எண்ணத்தில் உருவான இத் திட்டம், மலையக மக்களின் செல்வாக்கைச் சரித்துவிடும் சதித்திட்டமாகவே அந்நாளில் மலையகத் தலைவர்களால் எதிர்க்கப்பட்டு, இயற்கையைப் பாழ்படுத்திவிடுமென மத்திய சூழல் அதிகார சபையால் நிராகரிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட திட்டமாகும். அதற்கு மீண்டும் இப்போது புத்துயிர் கொடுப்பது இதில் அக்கறை செலுத்தும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும், அதனால் பெரும் கமிஷன்களை ஈட்டிக்கொள்ள ஆசைப்படும் பெரும் புள்ளிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் மட்டுமே அனுகூலமானது. ஆயினும் மலையகத் தமிழர்களின் நலனைப் பேணவேண்டிய மலையகத் தலைவர்கள் சிலர் இதற்கு ஒத்திசைந்து போவது வேதனைக்குரியதாக உள்ளது. இதேவேளை மலையகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இவ் இக்கட்டான நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் கட்சிகள் எவையுமே மலையக மக்களுக்காகக் குரல் கொடுக்காது மௌனம் சாதிப்பது ஏமாற்றகரமானதாக உள்ளது.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ரணில் போடும் கணக்கு புலிகளின் பிடி

நரன்

இன்றைய கேள்விகளுக்கு விடைதேடும் யாவரும் உற்றுப் பார்த்தபடியுள்ள முகம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முகமே.

அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை எவ்வாறு கையாளப் போகிறார்?

பாராளுமன்றத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையிலுள்ள பலப்பரீட்சையில் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டுவதாகக் கூறி முன்னெடுத்துள்ள 19ம் திருத்தச் சட்ட மூலத்தை எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்?

இவற்றுக்கிடையில் இலங்கையின் குரல் வளையை நசித்து வரும் பொருளாதார நெருக்கடிகளை எவ்வாறு தீர்க்கப் போகிறார்?

இதற்காக, வெளிநாட்டு நிதியுதவிகள் கோரி மேற்கொள்ளும் முயற்சிகளில் எவ்வாறு, எந்தளவுக்கு வெற்றியடையப் போகிறார்?

மேற்கத்தைய நாடுகளதும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் நிர்ப்பந்தங்களுக்கு அமைய மேற்கொள்ளும் தனியார் மயப்படுத்தல் செயற்பாடுகளை மக்கள் எதிர்ப்பை ஈட்டாதவாறு எவ்வாறு, எவ்வளவு தூரம் செயற்படுத்தப் போகிறார்?

இந்தக் கேள்விகளே தற்போது அவரைச் சூழ்ந்திருக்கும் சவால்கள் எனலாம்.

ரணிலைப் பொறுத்தவரை முதலில் தன்னைத் தனது கட்சியின் தலைமையில் நிலைநிறுத்துவது அத்தியாவசியமான விடயமாக இருந்தது.- எனினும் அந்த நிலைமை இப்போது சீராகிவிட்டது.

அடுத்து, தனது கட்சியை எப்பாடுபட்டாவது ஆட்சிக்குக் கொண்டு வரவேண்டியிருந்தது.

அதையடுத்து, அவ் ஆட்சியைப் பிரச்சினைகளின்றி இட்டுச் செல்வதற்கான நிலைமைப் பேண வேண்டியிருந்தது.

இதில் புலிகளின் பிரச்சினை முக்கியமான ஒரு விடயம். அதைவிட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றொரு விடயம்.

பிரேமதாஸாவின் திடீர் மறைவுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி பெரும் பின்னடைவை எதிர்நோக்கியது.

பிரேமதாஸாவின் கடைசிக் காலகட்டத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பாரிய பிளவுகள் ஏற்பட்டிருந்தன.

பிரேமதாஸாவின் மரணமும், இப் பிளவுற்ற பலவீனமான நிலைமையும், ஜே.வி.பி.யை அடக்கி ஒடுக்குவதற்குக் கையாண்ட அரச பயங்கரவாதத்தின் விளைவுகளும், உச்ச நிலையிலிருந்த மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளும், பாழடைந்திருந்த சர்வதேச அபிப்பிராயமும், வீழ்ச்சியடைந்த பொருளாதார நிலைமையும், பொது அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சிறு பத்திரிகைகள் யாவற்றினதும் ஒட்டு மொத்த எதிர்ப்பும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியை அதள பாதாளத்தில் விழுத்தி தேர்தலில் ஆட்சியதிகாரத்தைப் பறிகொடுக்க வைத்தன.

1994 பொதுத் தேர்தலில் புதிய முகத்தோடும், புதிய தலைமைத்துவத்தோடும், புதிய கருத்தோடும் முன்னின்ற பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியதிகாரத்தில் ஏறிக் கொண்டது.

இதையடுத்து கடந்த ஏழு வருடங்களாக, சென்ற பொதுத் தேர்தல் வரை நிகழ்ந்த அனைத்துத் தேர்தல்களிலும் (சுமார் 11 தேர்தல்களில்) ரணிலின் தலைமையிலான ஐ.தே.க. தொடர்ந்து தோல்வியையே தழுவியது.

அதனால் ரணிலின் தலைமை குறித்த சந்தேகமும் அதற்கான சவால்களும் ஐ.தே.க.வுக்குள்ளேயே தலையெடுக்கத் தொடங்கின.

எனவேதான் கடைசிச் சந்தர்ப்பமாக வாய்த்த கடந்த பொதுத் தேர்தலில் எப்படியாவது வெற்றியடைந்துவிட வேண்டுமென்பது ரணிலின் தலைமைக்கான பிரதான சவாலாக இருந்தது.

இந் நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டரசாங்கத்துக்குள் ஏற்பட்ட பிணக்குகள் ரணிலுக்கு எதிர்பாராத வாய்ப்பைத் தேடிக் கொடுத்தன.

"வெற்றியை உறுதிப்படுத்துவதற்குச் சிறுபான்மையினரின் ஆதரவு அவசியம்" என்பதை உணர்ந்த ரணில் அதேபோல் சமாதானம் என்ற கோஷத்தை முன்னிறுத்துவதும், யுத்தத்துக்குத் தற்காலிகமாகவேனும் ஓய்வு கொடுப்பதும், இதற்காகப் புலிகளுடன் ஏதோ ஒரு வகை உடன்பாட்டுக்கு வருவதும் அவசியம் என்பதை உணர்ந்து தேர்தலுக்கு முன்பிருந்தே நடவடிக்கைகளில் இறங்கியிருந்தார்.

அவரின் கணிப்பின் பிரகாரம் அவர் எடுத்த தந்திரோபாயம் பலிக்கவே செய்தது, அத்துடன் அவரது தலைமைத்துவத்தைக் கட்சிக்குள் கேள்விக்கிடமற்றதாக்கியது, அதுமட்டுமன்றி சர்வ தேச மட்டத்திலும் அவரது நிலைப்பாட்டிற்குப் பலத்த ஆதரவைத் திரட்டித் தந்தது.

இப்போது யுத்த நிறுத்தம் - புரிந்துணர்வு ஒப்பந்தம் - பேச்சுவார்த்தை என்ற ஒரு பாதையில் ஒரு முக்கியமான கட்டத்தை வந்து அடைந்துள்ளார்.

பேச்சுவார்த்தையின் முதற் சுற்று இனிதே நிகழ்ந்து முடிந்தாலும் அதில் புலிகளின் பிடியொன்று மிக நிறுதிட்டமாகத் தம்மீது விழுந்துள்ளதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டியவராகியுள்ளார்.

அதாவது, பேச்சுவார்த்தையைக் காண்பித்து, தற்போது மந்தமடைந்துள்ள சர்வதேச நிதியுதவிகளை அதிகரித்த அளவில் பெற்று இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க ரணில் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அத்தகைய நிதியுதவிகளுக்கான கோரிக்கைகளைப் புலிகளும் அரசாங்கமும் கூட்டாகவே விடுக்க வேண்டுமென்றும், நாட்டின் அபிவிருத்தியில் அரசாங்கத்துடன் புலிகளும் சம பங்காளிகளாகச் செயற்படுவார்களென்றும், வடக்கு கிழக்குக்கெனப் பெறப்படும் நிதியுதவிகளைப் புலிகளின் வாயிலாகவே பயன்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தும் தீர்மானங்களை முதற் சுற்றுப் பேச்சில் புலிகள் முன்னிறுத்தி அரசாங்கத்தை இணங்கவைத்துள்ளார்கள்.

இதனால் வடக்கு கிழக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளைக் கருதியே அதிகளவு பெறப்படும் வெளிநாட்டு நிதியுதவிகளை அரசாங்கம் தனது பொருளாதார நெருக்கடிகளுக்கும் தெற்கின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பயன்படுத்துவதற்குத் தடையேற்பட்டுள்ளது.

இதேபோல் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆராய்வதற்கும் புலிகளும் அரசாங்கமும் இணைந்த குழுவொன்றை அமைத்து ஆராய்வதாக இப் பேச்சுவார்த்தையில் தீர்மானித்த விடயமும் புலிகளுக்கான மற்றொரு பிடியாக அமைந்துள்ளது.

பாதுகாப்புப் படைகளின் அமைவிடங்களாகவும் பாதுகாப்புப் பிரதேசங்களாகவும் விளங்கும் பொது மக்களின் நிலங்களைக் கைவிடக் கோரும் நெருக்கடிகளை அரசாங்கம் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

பேச்சுவார்த்தையென்ற கதவை அகலத் திறந்து விட்டாலும் அதில் முன்வைக்கும் ஒவ்வொரு காலிலும் தனக்குக் கால்கட்டு விழுவதை அவர் இப்போதுதான் உணர்ந்து கொள்ள ஆரம்பித்திருப்பார்.

இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இடைக்கால நிர்வாக சபை என்ற புலிகளின் முதற்படிகூட ரணிலுக்கு அத்துணை சாதாரணமானதாக அமைந்துவிடப் போவதில்லை என்பதே உண்மை.

அதற்கப்பால் மொத்தமான இனப்பிரச்சினைக்கும் தீர்வு காண்பதென்பது சுலபமானதல்ல.

இதற்கிடையில் அவர் தனது 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் எவ்வாறு வெற்றியீட்டி ஜனாதிபதியினால் ஏற்படக்கூடிய நெருக்கடிக்குத் தீர்வு காண்பது என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.

வெறும் சமாதானப் பாட்டுடனேயே கணிசமான பகுதியைக் கடந்து வெளிநாட்டு ஆதரவுடன் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாமெனவும், பின்னர் புலிகளைச் சமாளித்துக் கொள்ளலாமெனவும் ரணில் போட்டிருந்த கணக்கு, புலிகள் போடும் திட்டவட்டமான பிடிகளுக்கு முன்னால் அத்தனை சுலபமானதல்ல. ■

# மலையகத்தில் மற்றொரு அபாயம்

மலையக மக்களின் வரலாறு இரத்தமும் கண்ணீரும் கலந்த வரலாறென்பதை யாவரும் அறிவர்.

அம் மக்களின் வாழ்வு இன்னும் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கே கொத்தடிமைகளாக எழுதப்பட்டதாகி விட்டது.

ஒரு முழுச் சமுதாயமே இவ்வாறு சந்ததி சந்ததியாகத் தேயிலைக்கும் ரப்பருக்கும் அடிமையாகிக் கிடக்கும் நிலைக்கு அதன் பெருந் தலைவர்களாகத் தம்மை முன்னிறுத்திக் கொண்ட எவருமே இதுவரை மீட்சி பெற்றுக் கொடுக்கவில்லை.

மலையகத் தமிழரின் பிரச்சினைகள் பெருத்த பொருளாதார அழுத்தத்தின் கீழ் அமிழ்ந்திருப்பதால் அவர்களின் அரசியல், சமூக, கலாசார உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் யாவும் இரண்டாம் பட்சமானவையாக்கப்பட்டுவிட்டன.

மலையக அரசியல்வாதிகளும் மலையக மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அவ்வப்போதான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதையே தமது அரசியலாகக் கொண்டிருந்தார்களேயன்றி அவர்களின் அரசியல் உரிமைகள் பற்றிய போராட்டங்களை முன்னெடுக்கவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்து முதற் காரியமாகப் பறிக்கப்பட்ட மலையகத் தமிழரின் பிரஜாஉரிமை, வாக்குரிமை என்பன மட்டும்தான் இதுவரை அவர்களின் அரசியல் உரிமைகளாக இத் தலைவர்களால் கோரப்பட்டிருந்தவை. அவற்றுக்குக் கிடைத்த தீர்வும் கூட் இன்னும் அரைகுறையானதாகவே இருக்கிறது.

இந் நிலையில் மலையகத் தமிழ் மக்கள் திடீர் திடீரெனப் புதிய புதிய பாரிய பிரச்சினைகளுக்குள் தள்ளப்பட்டு வந்துள்ளார்கள்.

அவர்களின் பிரதேசங்கள் அரசாங்கத்தால் பல்வேறு திட்டங்களுக்கென அபகரிக்கப்படுவது, இத் திட்டங்களின் பக்க விளைவுகளால் அம் மக்கள் பாதிக்கப்படுவது , அவற்றில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவது, அப் பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மக்கள் உரிய நிவாரணங்களோ பரிகாரங்களோ இன்றி நட்டாற்றில் கைவிடப் படுவது என்பவை ஏற்கெனவே இம் மக்கள் கண்ட பாரதூரமான அனுபவங்களாகும்.

நாட்டின் ஏனைய பிரதேச மக்களைப் போலன்றி இம் மக்களுக்காக வாதாடவும் எதிர்ப்புக் குரல் எழுப்பவும் யாரும் முன்வருவதில்லை.

இவ்வாறான மக்களுக்கு மற்றொரு பேரிடியாக இன்று உருவெடுத்துள்ள விடயம் மேல் கொத்மலைத் திட்டமாகும்.

இத் திட்டத்தால் இப் பிரதேச மக்கள் பெருவாரியாக இடம்பெயர நேரிடும், பெருமளவு இயற்கை வளங்களும், நீர்வீழ்ச்சிகளும் பாழாகும், அத்தோடு இத் திட்டத்தின் பெயரில் இப் பிரதேசத்து மலையகத் தமிழர்களின் இனத்துவச் செறிவை ஐதாக்கி அரசியல் பலவீனத்துக்கு வழிகோலும் சிங்களக் குடியேற்றங்களும் மேற்கொள்ளப்படும் என்ற அச்சம் நிலவுகிறது.

ஏற்கெனவே மலையகத்தில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நீர்த் தேக்கத் திட்டங்கள் பல இம் மக்களுக்குக் கசப்பான அனுபவங்களையே பெற்றுத் தந்தன.

இந் நிலையில் இன்று மலையகத் தமிழ் மக்களின் தலைமைத்துவங்களாக முன்னிற்கும் இரு மலையகக் கட்சிகளும் இதனை ஒருமித்து முகம் கொடுப்பதாக இல்லை.

இரு கட்சிகளுமே அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிக்கின்ற போதிலும் இத் திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களின் பிரச்சனைகளை அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறி, அல்லது தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இத் திட்டம் வரப்போவது நன்கு தெரிந்தும் அதைத் தடுத்து நிறுத்தாதது மட்டுமல்ல, இவர்கள் அங்கம் வகிக்கும் அமைச்சரவையில் இம் மேல் கொத்மலைத் திட்டம் முன்வைக்கப்பட்டபோது ஆட்சேபித்து நிறுத்தவும் முடியவில்லை.

அமைச்சரவையில் இத் திட்டத்துக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்ட பின்னர்தான் ஒருவர் இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்வதாகவும், மற்றவர் போராட்டம் நடத்தப் போவதாகவும் கூறுகின்றனர்.

அமைச்சர் சந்திரசேகரனோ, இத் திட்டத்துக்கு இணக்கம் தெரிவித்துவிட்டு , ஏதோ தனது புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் மக்களைக் காப்பாற்றிவிடலாமென நம்பும்படி கோருகிறார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் மக்களைக் காப்பாற்றிவிட முடியுமா? இல்லை, இயற்கையைக் காப்பாற்றிவிட முடியுமா?

இதுவரை மலையத்தில் மேற்கொண்ட திட்டங்களில் வெறும் வாசகங்கள் எத்தனை தூரம் நின்று பிடித்தனவென்பது இம் மக்களுக்குத் தெரியாதா?

தோட்டங்களைத் தனியார் கம்பனிகளுக்கு வழங்கும் தீர்மானத்தை மேற்கொண்டபோது, அப்போது தனிப்பெரும் மலையகத் தலைவராக விளங்கிய அமைச்சர் தொண்டமானே முன்னின்று பல உத்தரவாதங்களை வழங்கினார். அவையெல்லாம் என்னானது?

தோட்டத் தொழிலாளிகள் தோட்டங்களிலன்றி கிராமங்களிலிருந்து தொழிலுக்குச் சென்றுவரும் வகையில் அவர்களுக்குக் கிராமம் அமைத்துக் கொடுக்கப் படுமென்று ஆசை காட்டியதெல்லாம் இப்போது காற்றோடு போன கதையாகிவிட்டதா, இல்லையா?

இன்று வேலை நிறுத்தம் செய்வதற்குக்கூட உரிமையற்றவர்களாய் அடிப்படை உரிமை இழந்து பரிதவிப்பதும் இத்தகைய உத்தரவாதங்களை நம்பியல்லவா?

மேல் கொத்மலைத் திட்டம் போன்ற பிரமாண்டமான திட்டங்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்ட பின்னர் அதற்குக் குறுக்கே இவ் உத்தரவாதங்கள் நிற்குமானால் அவற்றை ஓரங்கட்டிவிட்டு முன்னெடுக்கப்படுமேயன்றி உத்தரவாதங்களுக்காக அத் திட்டத்தில் பின்வாங்கிவிடப் போவதில்லை என்பதை எந்தப் பகுத்தறிவுள்ளவனும் புரிந்துகொள்வான்.

அமைச்சர் தொண்டமானைப் பொறுத்தவரை அமைச்சரவை மட்டத்தில் அதைத் தடுத்து நிறுத்த தனது முழுப் பலத்தையும் செலுத்தத் தவறி, அமைச்சரவை அங்கீகரிக்குமளவுக்குக் கோட்டை விட்டுவிட்ட போதிலும், அதை அமுலாக்காது தடுப்பதற்கான போராட்டங்களை முன்னெடுக்க முன்வந்துள்ளதாவது ஆறுதலளிப்பதாகவுள்ளது.

ஆயினும் இத் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள பாரிய வெளிநாட்டு சக்திகளின் மறைமுகப் பேரங்களுக்கு எடுபட்டு இப் போராட்டத்தை இடைநடுவில் கைவிடவோ, அல்லது நலிவுற வழிவிட்டுவிடவோ கூடாதென்பதுதான் இப்போது மலையகத் தமிழ் மக்களின் கவலை. ■

# புலிகள்தான் ஒரே தேசிய விடுதலை இயக்கம் அரசியல் கட்சிகளுக்கு இங்கு இடமில்லை!

**தா**ய்லாந்தில் வைத்து இலங்கையின் சக்தி ரி.வி.க்காக ஸ்ரீரங்காவுக்கு புலிகளின் ஆலோசகர் அண்டன் பால சிங்கம் வழங்கிய செவ்வி இங்கு நன்றியுடன் பிரசுரமாகிறது. இடப் பற்றாக்குறை காரணமாக மிகச் சில பகுதிகளை பிரசுரிக்க முடியவில்லை.

**ரங்கா: தென்னிலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடி, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலுள்ள அதிகாரப் போட்டி, தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளைச் சீர்குலைக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**


பாலா: தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு தென்னிலங்கையில் நிலையான உறுதியான அரசாங்கம் அவசியம். நிலையான பாராளுமன்றம் இருக்க வேண்டும். இப்போது இருப்பது போல ரணிலும் சந்திரிகாவும் மோதிக்கொண்டிருந்தால் ஒரு வேளை பேச்சுவார்த்தை சாத்தியமாகாமல் போகலாம். எமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. எம்மிடம் பெரிய பிரமாண்டமான இராணுவம் இருக்கிறது. தமிழ் ஈழத்தின் எழுபது சதவீத நிலப்பரப்பு எங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தமிழர் தரப்பு பலமான நிலையில் உள்ளது. இதை அவர்கள் உணர்ந்து தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வைத் தர வேண்டும். இந்த நிலைமை நீடித்தால் எங்களுக்குத்தான் இலாபம். எங்கள் பலம் இன்னம் கூடும். தற்போதைய நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை விட்டால் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய சிங்களத் தலைவர் எவரும் இல்லை. இதில் சிக்கல்களும் இருக்கின்றன. எமக்குத் தெரியும். நாங்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கவில்லை. எம்மைப் பொறுத்தவரை நாம் பலமாக இருக்கிறோம்.

**ரங்கா: முஸ்லிம் மக்கள் மத்தியில் பல கட்சிகள் இருந்தாலும் முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற வேண்டும் என்பதில் அந்தக் கட்சிகள் ஒற்றுமையாக உறுதியுடன் இருக்கின்றன. ஆனால் தமிழ்க் கட்சிகள் அப்படி இல்லை. புலிகள் வந்தால் ஜனநாயகம் போய்விடும் என்று ஒரு கட்சியும் புலிகளுடன் பேசியும் பிரச்சனை தீர்க்கலாம் என்ற நழுவல் போக்கில் இன்னொரு கட்சியுமாக சலுகைகளைப் பெறவும் உரிமைகளைப் பெறவும் என இரண்டும் கெட்டான் நிலையில் தமிழ்க் கட்சிகள் இருக்கின்றன. தமிழ் தலைமைத்துவம் இவ்வாறு இருப்பதற்கான காரணம் என்ன?**

பதில்: இந்தக் கேள்வியை என்னால் அங்கீகரிக்க முடியாது. இந்த ரி.என்.ஏ என்பது புலிகளின் ஆதரவினால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு கட்சி. காலாகாலமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட கூட்டணி போன்ற கட்சிகளே ரி.என்.ஏ ஆக இணைந்து புலிகளின் வழிநடத்தலுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகின்றன. இது தவிர சில உதிரிக் கட்சிகள் இருக்கிறார்கள். அவைகளை யார் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. இன்னொரு தேர்தல் வந்தால் உந்த உதிரிக்கட்சிகள் எல்லாம் அள்ளுப்பட்டுப் போகும். இங்கே அரசியல் கட்சிகள் என்றெல்லாம் இல்லை. புலிகள் தான் ஒரே தேசிய விடுதலை இயக்கம். இங்கு அரசியல் கட்சிகளுக்கு இடம் இல்லை. பாராளுமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டும், இராஜதந்திர சமூகத்திற்கு தமிழ் மக்களின் பிரச்சனைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் நாம் ரி.என். ஏனைய அங்கீகரித்திருக்கிறோம். உங்களுக்குத் தெரியும் இந்த 15 எம்.பி. மாரையும் நாம் அடிக்கடி கூப்பிட்டுக் கதைக்கிறோம். அவர்கள் எமது சொற்படி நடக்கிறார்கள். அவைக்குள் சில கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். அதைப்பற்றி நாம் பெரிதாகக் கவலைப்படப் போவதில்லை.

**ரங்கா: முஸ்லிம் மக்களின் அரசியல் கட்சிகள் முஸ்லிம் மக்களின் உரிமையைப் பெற வேண்டும் என்பதில் ஆணித்தரமாக இருக்கின்றனர். ஆனால் தமிழ் கட்சிகள் அப்படி இல்லை.**

பதில்: விடுதலைப் புலிகளுக்கு தேசியத் தலைமை ஒன்று இருக்கிறது. பிரதான தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து புலிகளின் பின்னால் நிற்கின்றன. முஸ்லிம்கள் மத்தியில் ஒற்றுமை நிலவுவதையே நாம் விரும்புகிறோம். முஸ்லிம் காங்கிரஸை முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதியாக ஏற்று பேச்சுவார்த்தை நடத்தினோம். முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமை நிலவுவது முக்கியமல்ல. முஸ்லிம்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஒற்றுமை நிலவுவதே முக்கியமானது. உரிமை வேண்டும் கிரிமை வேண்டும் என்று சில உதிரிக் கட்சிகள்-சில விசரன்கள்-கூறிக் கொண்டிருக்கின்றன. நாம் உரிமைக்காக மட்டும் போராடவில்லை. அது 50 வருஷத்திற்கு முன் செல்வநாயகம் கதைத்த கதை. சம உரிமை, மொழியுரிமை உதெல்லாம் பழைய கதை. இன்று சுய நிர்ணயம் பற்றிப் பேசப்படுகிறது. எமது மக்களுக்கான சுயாட்சி அதிகாரத்தைக் கேட்கிறோம். நாம் உரிமைகளுக்காக மட்டும் போராடவில்லை.



**ரங்கா: வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்கு என வெளிநாடுகள் உதவியளிக்கின்றன. அவ்வாறு பெறப்படும் உதவிகளால் நடத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் கொந்தராத்துக்களைத் தங்கள் உறவினர்களுக்கு சில அமைச்சர்கள் கொடுப்பதாக ஊடகங்கள் மூலம் அறியக் கிடைக்கிறது. இவற்றைத் தடுக்க நீங்கள் ஏதாவது செய்கிறீர்களா?**

பதில்: இந்த விஷயங்கள்தான் இன்றைய பேச்சில் கலந்துரையாடப்பட்டது. இந்த தாய்லாந்துப் பேச்சுவார்த்தை மூலமாக ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும். பிரதானமாக புனர்வாழ்வு புனர் அமைப்பு, மீள் குடியேற்றம் பற்றி இப்போது பேசப்படுகிறது. வட கிழக்கு அபிவிருத்திக்காக வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகள் புலிகளின் என்.ஜி.ஓ. ஊடாக வழங்கப்பட்டு இனிமேல் கண்காணிக்கப்படும். அதனால் எதிர்காலத்தில் அவற்றை முறைகேடாக கையாள்வதோ சுருட்டுவதோ இலேசான காரியமாக இருக்கப் போவதில்லை. இப்போது தான் புலிகள் அரசியலில் கால் ஊன்ற ஆரம்பித்திருக்கிறார்கள். இனிமேல்தான் எமது மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப் போகிறோம்.

**ரங்கா: இன்று வெளிநாட்டு உதவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமாயின் புலிகளுடன் சேர்ந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும் அல்லது புலிகளூடாக அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்று உதவி வழங்கும் நாடுகள் உறுதியாக இருக்கின்றன. இதற்கு உங்கள் பிரச்சாரங்களும் காரணமா?**

பதில்: நிச்சயமாக. நாம் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து எமது மக்களின் தேவைகளை விளக்கி வருகிறோம். இப்போது சர்வதேச சமூகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. இனிமேல் தமிழ் மக்களுக்காக ஏதும் செய்வதாயின் அதைப் புலிகளினூடாகத்தான் செய்ய வேண்டும். புலிகளை வெட்டி ஓரங்கட்டிவிட்டு எந்தத் திட்டத்தையும் செயற்படுத்த முடியாது. புலிகளும் அரசும் இணைந்த கூட்டு நிர்வாகம் அல்லது புலிகள் நடத்தும் நிர்வாகத்தின் மூலமாகவே இனிமேல் வெளிநாடு உதவிகள் வழங்கும். அதற்காகவே இந்த இடைக்கால நிர்வாகம். சிங்கள மக்கள் மத்தியில் இடைக்கால நிர்வாகம் பற்றி பயம் வந்துவிட்டது. இந்த நிர்வாகத்தை எடுத்து அதை ஈழமாக மாற்றிவிடுவார்களோ என்ற பயம். அதை அவர்கள் பயப்படட்டும். நாம் இடைக்கால நிர்வாகத்தை எடுப்போம். வடக்கு கிழக்கில் ஒரு சுபீட்சமான பொருளாதாரத்தையும் ஸ்திரமான அரசியல் நிலையையும் கட்டி எழுப்புவோம்.

**ரங்கா: தென்னிலங்கையில் சில அரசியல் கட்சிகள் அதிகாரத்திற்கு வருவதற்காக இனவாதத்தைத் தூண்டி சமாதானப் பேச்சுக்களைக் குழப்பப் பார்க்கின்றன. இந்த அரசியல் கட்சிகள் சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும் என்று நினைக்கிறீர்களா?**

பதில்: குழப்பலாம். குழப்பட்டுமே. ஜே.வி.பி இருக்கிறது. அங்காலே எமது அம்மையார் இருக்கிறார். குழப்பட்டும். நாம் பலமாக இருக்கிறோம். எம்மிடம் இராணுவ பலம் இருக்கிறது. சிங்கள மக்கள் எதிர்த்து தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு பெற்றுத் தருவதைத் தடுத்தால் அது தமிழ் ஈழம் அமைவதற்கு ஆன சூழ்நிலையை ஏற்படுத்தும். இவர்கள் தீர்வு தரவில்லை ஏமாற்றிவிட்டார்கள் என்பதற்காக நாம் ஏமாற்றம் அடையப் போவதில்லை. எம்மிடம் இராணுவ பலம் இருக்கிறது.

**ரங்கா: ஜே.வி.பி.யின் 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ரி.என்.ஏ.யிலும் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ரி.என்.ஏ. எம்.பி.க்களை மின்னல் நிகழ்ச்சியில் கூப்பிட்டு என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால் தமிழ் மக்களுக்கு நாம் என்ன செய்வது என்று இன்னும் முடிவெடுக்கவில்லை, தமிழ் கூட்டமைப்புக்கு மத்தியில் ஒற்றுமை இல்லை என்று கூறுகின்றார்கள். தலைமைப் பீடத்திடம் கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தலைமைப் பீடத்திடம் கேட்டால் புலிகளிடமிருந்து டிரக்ஷன் வரவில்லை என்று கூறுகிறார்கள். ஜே.வி.பி. போன்ற கட்சிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் இவ் வேளையில் சமாதான முயற்சியைப் பலப்படுத்த ரி.என்.ஏ. ஏன் செயல் ரீதியில் எந்த முயற்சியும் எடுக்கவில்லை?**

பதில்: ரி.என்.ஏ. சுயமாக இயங்கும் தனியான அரசியல் கட்சி அல்ல. புலிகளின் வழிநடத்தலின் கீழ் இயங்கும் கட்சிகள். மக்களை ஒன்று திரட்டுவது மக்களை இணைப்பது இதெல்லாம் எங்களுடைய வேலை. புலிகள் அரசியல் பிரவேசம் செய்திருக்கிறார்கள். மறந்திடாதையும். முந்திய அரசியல் மாதிரி அந்தக் கட்சிகளைக் கூப்பிட்டு விமர்சிப்பது பிரயோசனம் இல்லை. அந்தப் பொறுப்பை வகிப்பது நாங்கள். அவர்களுக்கு சில வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளைக் கூப்பிட்டு நீர் பேட்டி எடுக்கிறதில பிரயோசனம் இல்லை.

**ரங்கா: சில பிரமுக மீடியாக்கள் சமாதானத்திற்கு எதிராக செயற்படுகின்றன. அப்படியிருக்கையில் கொழும்பில் இருந்து கொண்டு செயற்படும் மீடியாக்களுக்கு ஏன் இவைகளால் சுயமாக கருத்துக் கூற முடியாது.**

பதில்: புலிகளுக்கு என்று மீடியாக்கள் இருக்கு. புலிகளை சப்போட் பண்ணுகிற மீடியாக்கள் இருக்கு. உதயன், சுடரொளி, தினக்குரல், வீரகேசரி எல்லாம் போராட்டத்தை ஆதரிக்கின்ற பத்திரிகைகள். இப்படியிருக்க நீர் ஏன் அவையின்ர பின்னால அலைஞ்சு பேட்டி எடுக்கிறீர்? அவைக் கொன்றும் சொல்ல முடியாது. எனக்குப் பின்னால அலைஞ்சு பேட்டி எடுத்தீர்; அது பரவாயில்லை. பாலா அண்ணையின்ர குரலைக் கேட்டுப் புலிகள் சந்தோசப்படுவினம்.நீர் அவைக்குப் பின்னால அலைஞ்சு பேட்டி எடுக்கிறதில பிரயோசனம் இல்லை. சமாதானத்தை முன்னெடுக்கிறது அவை அல்ல.நாம். நாம் எதற்கு இருக்கிறோம்? சமாதானத்தைப் பற்றி அவை ஒன்றும் பேச ஏலாது.

**எனக்குப் பின்னால அலைஞ்சு பேட்டி எடுத்தீர் அதுபரவாயில்ல**



## ஒற்றுமையைக் குலைக்காதிருக்கும் பொறுப்பு பாலசிங்கத்துக்கு உண்டு.—சங்கரி

கனேடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன பேட்டியில் நேயர் கேள்விகளுக்கு (CTBC)ற்கு தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி அண்மையில் வழங்கிய பதில்.

**கேள்வி: புலிகளை ஏக பிரதிநிதிகள் என்கிறீர்கள். ஏன் நீங்கள் கட்சியைக் கலைத்துவிட்டுப் புலிகளுடன் ஒன்று கலந்து விடக்கூடாது?**

சங்கரி: விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழையுங்கள். அவர்களுடன் பேசுங்கள் என்று கூறினால் அவர்கள்தான், புலிகள்தான் ஏகப் பிரதிநிதிகளென்று அர்த்தமல்ல. நாங்கள் ஒரு கட்சி. எங்களுக்கென்று ஒரு கொள்கை இருக்கிறது. இனப்பிரச்சனை தீர்வதில் நாங்கள் எல்லோரும் ஒன்று. ஆனால், கட்சியென்று வரும்போது நாங்கள் தனித்தனிக் கட்சிகள். நாங்களெல்லோரும் விடுதலைப் பலிகளே என்று போனால் நாளைக்கு ஒரு நிலைமை வரலாம். விடுதலைப் புலிகள் ஆயுதம் தாங்குசிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த நேரத்திலே என்ன நடக்கப்போகிறது? அந்த விடுதலைப் புலிகளுக்கு உந்து சக்தியாக இருந்து செயற்படுவதுதான் என்னுடைய அரசியல் அனுபவ ரீதியில் நான் சொல்லக் கூடிய ஒரு விடயம்.

**கே: நேற்றைய கூட்டத்தில் (அமிர்தலிங்கத்தின் பவள விழாவில்) ஆனந்தசங்கரி அண்ணர் குறிப்பிட்டீர்கள் அமிர்தலிங்கம் அவர்கள் கொல்லப்பட்டது ஒரு விபத்து என்று. அப்படியானால்அவர் தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டாரோ அல்லது நெஞ்சு வலி வந்து மரணித்தாரோ வென்று அறிய விரும்பகிறேன்.**

ச: உங்களுடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால் இதற்குப் பதில் கிடைக்கும். இன்றைக்கு நாங்கள் இதைத் திரும்பி யோசிக்க வேண்டிய நிலைமையில் இல்லை. ஏதோ நடக்கக்கூடாதது எப்படியோ நடந்து விட்டது. இது மறக்கப்பட வேண்டிய சம்பவம்.

**கே: வடக்கு-கிழக்கில் நிகழும் வன் செயல்களுக்கு யார் பொறுப்பு?**

ச: இது எனது சக்திக்கு அப்பாற்பட்டது. அவை கிரிமினல் விடயங்கள்.

**கே: அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு வழங்கிய பேட்டியில், தமிழ் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் ஆதரவில்தான் தேர்தலில் தெரிவானதாகவும், அந்த எம்.பி.கள் பாராளுமன்றத்தில் தமிழ் மக்கள் பிரச்சனைகளை வெளிப்படுத்துவது, சர்வதேச சமூகத்தின் முன்னணியில் அதைக் கூறுவது என்று தாம் வழங்கிய இரண்டு கடமைகளைச் செய்தால் போதுமானது. சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் பொறுப்போ இடைக்கால நிர்வாகத்தில் பங்கு பெறும் வாய்ப்போ அவர்களுக்கு இப்போதைக்கு வழங்கப்படமாட்டாதென்று தெரிவித்திருந்தார். இது பற்றி உங்கள் கருத்து...?**

ச: இன்றைய ஒற்றுமையைச் சீர்குலைக்காதிருக்கும் பொறுப்ப மட்டும் பாலசிங்கத்துக்கு உண்டு. இந்தப் பதில் மட்டும் இதற்குப் போதுமென்று நினைக்கின்றேன் ஏனென்றால் நாங்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளல்ல. ஒரு தனித்துவம், ஒரு கௌரவம் எல்லாம் எமக்கு இருக்கிறது. இவற்றைப் பாதிக்காமல் பார்க்க வேண்டிய கடமை சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு.

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic No.307, George R. De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500றுக்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.



## விதுஜா ஏசியன் சொப்

**VIDUJA ASIAN SHOP**

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405


இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.
விதுஜா ஏசியன் சொப்




## வீடே அழகாகி உள்ளது


வீட்டுக்குத் தேவையான அனைத்து பொருட்களும் ரெலிமாக்கட்டிங் மூலம்...

வானொலிப் பெட்டி
தொலைக்காட்சிப்பெட்டி
வீடியோ, டெக்
குளிர்சாதனம்-மின்குமிழ்
காஸ் அடுப்பு-மின் அடுப்பு
ஜெனரேட்டர்- என்ஜின் லயட்









SISIL | SAMSUNG | SONY | LG | Panasonic | Candy | SANYO | SHARP | SINGER | PHILIPS

- குறைக்கப்பட்ட விலைகள்
- இலவச போக்குவரத்து
- இலகு தவணைக் கொடுப்பனவு
- உறுதியான விலை

தொலைபேசி: (வெலிசறை-074-819890,939342)
(நீர்கொழும்பு-074-872628)

### ரெலி மாக்கட்டிங்

TM Tele Marketing
CONSUMER ELECTRONICS

750, நீர்கொழும்பு வீதி, வெலிசறை.
கிளை: 138, றோயல் சினிமா கட்டிடம்,
கிறீன்ஸ் வீதி, நீர்கொழும்பு.
*website: www.viplanka.com/tele*
(நீர்கொழும்பு பஸ் தரிப்பிட நிலையத்திற்குப் பின்னால்)


# விளம்பரப் பகுதி




**Wedding PHOTOGRAPHER**
27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933
Stills Vinoth
Your Satisfaction Is My Success



## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறியவாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நாலும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா."

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NI. JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162, Kotahena Street, Mayfield Road, Colombo 13, Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



கண் வைத்திய நிபுணர் மூலம் கண் பரிசோதனை செய்து விரும்பிய வகையிலான பிரேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள ஒரே நிறுவனம்



விழி உங்களிடம்
அதன் ஒளி எங்களிடம்

**அப்பலோ ஒப்ரிசியன்**
(ஹட்டன் நஷனல் வங்கி முன்னால்)
317 பி, காலி வீதி
வெள்ளவத்தை,
கொழும்பு- 6.
தொலைபேசி: 074-516609

**APPOLO OPTICALS**
No.298A,
George R. De Silva Mw,
(Khairaz Complex)
Kotahena, Colombo-13.
T.P: 074-610459



## தெய்வீக மருத்துவம்

**National Theiveega Sakthy Foundation**
**International Interregious Traditional & Medical & Divine Service**
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P, J.P. (SL)**

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka
Head Office
Batticaloa.
Tele / Fax:065-24825,078 610098
வெளிநாட்டவர்களுக்கு,
Tele / Fax: - 0094 78610098

**கொழும்பிலும் சந்திக்கலாம்**

"வாழ்வினிருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "



## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754



## சிங்கப்பூரில் தங்குமிடவசதி

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-
**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:
அப்பு: 0065-975 14 941



## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)
*Eric Rajapakse* Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(றொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)
தொலைபேசி: 01-362971,553871
பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்



## வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு

- ☛ நவீன கணனி முறையுடன் 3D Graphicsலான Mixing 300/= முதல், மும்மொழிகளிலும் Title & DJ Audio Dubbing,
- ☛ நீண்டகாலப் பாவனைக்காக VCD களில் மாற்றிக்கொள்ள 3VCD களுக்கும் 450/= மட்டுமே, VPP, நேரடி விநியோக வசதி
- ☛ 3D Editing வசதிகளுடன் கூடிய கணனி விற்பனை, பராமரிப்பு உங்கள் ஸ்தாபனங்களிலே பயிற்சிநெறி, உடனடி சேவைகள்.

தொடர்புகளுக்கு :- TEL: 051-22678 FRANKET. HATTON


## தினமுரசு சந்தா விபரம்

### சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net
edmurasu@dialogsl.ne

# மேல் கொத்மலைத் திட்டத்துக்கும் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை

**மே**ல் கொத்மலைத் திட்டத்தை அமைத்தே தீருவது என்று ஐ.தே.க. அரசு விடாப்பிடியாக இருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களை ஏதாவது சொல்லி ஏமாற்றி விடலாம் என்ற அதீத தைரியத்தினாலோ என்னவோ அமைச்சர் சந்திரசேகரன் இந்த மின் உற்பத்தித் திட்டத்திற்கு மனப்பூர்வமாக ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

அண்மைக் காலமாக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மக்கள் நலச்சிந்தனை வியப்பளிக்கிறது. சம்பள உயர்வு விடயத்திலும் சரி, மேல் கொத்மலைத் திட்டம் பற்றிய சர்ச்சையிலும் சரி தான் வெறுமனே அமைச்சர் மட்டுமல்ல சௌமிய மூர்த்தி தொண்டமானின் பேரனும் தான் என்று; அதாவது மலையக மக்களின் தலைவர் என்ற பொறுப்புணர்வும் தனக்கு இருப்பதை நினைவில் வைத்துச் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

மேல் கொத்மலைத் திட்டமானது 1985ம் ஆண்டு முதல் ஐ.தே.க. அரசினால் மறைந்த முன்னாள் அமைச்சரான காமினி திசாநாயக்கா மூலம் மகாவலித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட திட்டமாகும். இது அப் பிரதேச மக்களுக்குப் புதிய விடயமல்ல. இத் திட்டத்தை பல தடவைகள் நடைமுறைப்படுத்த முனைந்த வேளையில் பல்வேறு எதிர்ப்புகளால் கைவிடப்பட்டது. ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதை எப்படியும் நடைமுறைப்படுத்த வேண்டும், அதற்கு அவரது பெயரையே சூட்ட வேண்டும் எனத் தற்போதும் பிடிவாதமாக இருக்கின்றார்கள். மறைந்த தலைவர் தொண்டமான் ஐ.தே.க. அரசில் அங்கம் வகித்த போது "மாட்டின் மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் உண்ணி" என்று அவரைக் காமினி திசா நாயக்கா சென்னமை, ஜூலைக் கலவரத்தில் நுவரெலியா நகரம் தீமூட்டபட்டமை, தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களப் பிரதேசங்களுக்குள் உள்ளடக்கப்பட்டமை போன்ற விடயங்களை ஒரு கணம் திருப்பிப் பார்த்தால் இந்தத் திட்டம் தொழிலாளர்களுக்கு நன்மையைத் தருமா? என்பது புலப்படும். காமினி திசாநாயக்காவின் எண்ணத்தை இதன் மூலம் நிறைவேற்ற மாமாவும், மருமகனும் முனைவது அவர்களுக்கு நியாயமாக இருக்கலாம்.

ஆனால் இயற்கை வளங்களையும், மலையக மக்களின் வாழ்வாதாரத்தையும் அழிப்பதற்கு மின்சார அமைச்சரும் சமூகநல அமைச்சரும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் துணை போகக் கூடாது.

மலையகத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிப்பதற்குக் காரணமாக இருந்த தமிழ்த் தலைவர்கள் போலவே, இன்று அமைச்சர் சந்திரசேகரன் உள்ளிட்ட சிலர் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்ற போர்வையில் மக்களின் செறிவைக் குறைப்பதற்கும், மறைமுகமான குடியேற்றத்திற்கும் ஆதரவு வழங்கி வருகிறார்கள்.

எதிர்காலத்தில் மலையக மக்களின் செறிவைக் குறைப்பதற்கும், பிரதேசத்தின் இயற்கைச் சூழலை வறண்ட பாலைவனமாக ஆக்குவதற்குமான நடவடிக்கைகளை நாம் எவ்வாறு அனுமதிக்கலாம்? ஏற்கனவே பெரும்பான்மை மக்கள் சூழவுள்ள அனேகமாக பெருந்தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்டும், தமிழ் மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டும் பிரதேசங் கள் அபகரிக்கப்பட்ட நிலைமையை நாம் மறந்து விட முடியாது.

எதிர்காலத்தில் தங்களுக்கு எவ்வாறான அச்சுறுத்தல் அமையும் என்ற சந்தேகம் மக்கள் மனங்களில் குடிகொண்டுதான் இருக்கிறது. தேசிய அபிவிருத்தி, நகர அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி என்ற காரணத்தைக் காட்டி அம் மக்களின் பாதுகாப்பு, குடியிருப்பு போன்றவற்றில் முற்றாகக் கை வைக்கும் முயற்சியை அரசு கைவிட வேண்டும். இன்றுவரை அபிவிருத்தி என்ற போர்வையில் மலையக மக்களுக்குக் குறிப்பிடத்தக்க நன்மை எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எத்தனை மின்சாரத் திட்டங்கள் அமைக்கப்பட்டன? கம்உதாவ போன்ற எத்தனை வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன, கைத்தொழில் திட்டங்களில் எத்தனை மலை யகத்தில் உருவாக்கப்பட்டன? தொழில் நுட்பக் கல்லூரிகள் எத்தனை? கிராம அபிவிருத்தி, நகர அபிவிருத்தி போன்ற திட்டங்களால் மலையகத்தில் எத்தனை குடியிருப்புகள் அழித்துள்ளன? பெருந்தோட்டங்கள் பெருந்தோட்டங்களாகவே இன்றும் இருக்கின்றன. லயன்கள் என்றைக்கும் லயன்கள்தான். தேயிலைத் தொழில் தேயிலைத் தொழில்தான். அதைத் தவிர வேறு எந்த மாற்றங்களும் அபிவிருத்தியும் தெரியவில்லை.

யுத்தமே நடக்காத மலையகத்தில் பழைமை வாய்ந்த திருத்தியமைக்கப்படாத வாழ்விடங்கள், பார்வைக்கு யுத்தப் பிரதேசங்களாகவே காட்சியளிக்கின்றன.

இன்று இவ்வாறான திட்டங்களை ஆதரிக்கும் தலைவர்கள் அன்று இத்திட்டம் அமைப்பதற்கு ஏன் எதிர்த்தார்கள், தடுத்தார்கள்? அன்று அவர்களுக்குப் பதவியில்லை. அமைச்சராகவில்லை. ஆனால், இன்றோ பதவியைப் பாதுகாக்கவும், 'கமிஷன்கள்' பெற்றுக் கொள்ளவும் எவ்வாறான திட்டங்களையும், முடிவுகளையும் பொது மக்களின் பெயரால் ஆதரிக்கத் தயங்க மாட்டார்கள் என்பதே உண்மை.

> மேல் கொத்மலைத் திட்டத்தை அமைத்தே தீருவது என்று ஐ.தே.க. அரசு விடாப்பிடியாக இருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களை ஏதாவது சொல்லி ஏமாற்றி விடலாம் என்ற அதீத நம்பிக்கையினாலோ என்னவோ அமைச்சர் சந்திரசேகரன் இந்த மின் உற்பத்தித் திட்டத்திற்கு மனப்பூர்வமாக ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

கடந்த காலங்களில் மலையகப் பகுதிகளில் அமைக்கப்பட்ட நீர்த் தேக்கத் திட்டங்களினால் மக்கள் பெரும் பாதிப்புகளுக்கே உள்ளானார்கள். நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாக இது இருக்கின்ற போதிலும் மலையக சமூகத்திற்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சமூக அபிவிருத்தியில் எந்தளவுக்கு முன்னேற்றத்தைப் பெற்றுக் கொடுக்கும் என்று உத்தரவாதப்படுத்த முடியாது. இதுவரை கட்டி முடிக்கப்பட்ட நீர் மின் திட்டங்கள் அப் பிரதேசத் தொழிலாளர்களின் எத்தனை குடியிருப்புக்களின் மின்சார மின்சாரத் தேவையைப் பூரணமாக நிவர்த்தி செய்துள்ளது? மலையக மக்களின் செறிவைக் குறைத்துத் அம்மக்களின் அரசியல் பலத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற பேரினவாதத் திட்டத்திற்கு இந்த நீர்த் தேக்கத் திட்டங்களும் சாதகமாக அமைந்துள்ளன என்பதே உண்மை.

கொத்மலை நீர்த் தேக்கத்தின் தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் 12.5 மைல் நீளமான சுரங்கப் பாதையை அமைத்து, அதனூடாக கொத்மலை நீர்த் தேக்கத்திற்கு நீரை அனுப்புவதோடு, அணைக்கட்டிலிருந்து ஒரு மைல் தூரத்தில் சிறிய மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்த அணைக்கட்டுத் திட்டம் மூன்று கட்டங்களாகச் செயற்படுத்தப்படவிருப்பதாகவும் அறிய வருகிறது.

அரசாங்கமும் மின்சார அமைச்சரும் இத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவது என்று விடாப்பிடியாக இருப்பதில் என்ன மர்மம் உள்ளது. அதேவேளை இத் திட்டம் மூன்று கட்டங்களாகச் செயற்படுத்தப்படும் என்பதில் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகம் நிலவுகிறது.

ஏற்கனவே கொத்மலை நீர்த் தேக்கத் திட்டத்தினால் அப் பிரதேசத்தில் வாழ்ந்த பெரும்பான்மையின மக்கள் அனைவரையும் தமிழ்த் தொழிலாளர்கள் வாழ்ந்த குடியிருப்புப் பிரதேசங்களான மடக்கும்பர தோட்டங்களில் குடியமர்த்தி அத் தோட்டங்களில் வாழ்ந்த தொழிலாளர்களுக்குக் குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்து வேவ்வேறு இடங்களுக்கு லயன்களில் வாழ்வதற்கு அனுப்பி மக்கள் செறிவைக் குறைத்த நடவடிக்கையை இன்னும் மறந்து விட முடியாது. அப் பகுதியின் குடிசனச் செறிவைக் குறைத் எமது பிரதேசப் பிரதிநிதித்துவத்தைப் பலமிழக்கச் செய்தமையை நினைவில் கொள்ளல் அவசியம். அப்போது அவர்களுக்கு எத்தனை வீடமைப்புத் திட்டங்களை மேற் கொண்டார்கள்? எத்தனை பேர்ச் நிலம் வழங்கினார்கள்?


கடந்த காலங்களில் ரந்தெனிகலை, விக்டோரியா, மஸ்கெலியா காசல்ரீ மவுசாக்கெல நீர்த் தேக்கத் திட்டங்களால் மக்கள் வாழ்ந்த பகுதிகள் சிதறடிக்கப்பட்டு வெளியேற்றிய, நடவடிக்கைகளை நாம் உதாரணமாகக் கொள்ளலாம். மஸ்கெலியாவில் நீர்த் தேக்கம் அமைக்கும் காலத்தில் வெளியேற மறுப்புத் தெரிவித்த போது கடைசி நேரத்தில் அணைக்கட்டுத் தண்ணீரைத் திறந்து விட்டே மக்களை வெளியேறச் செய்த நிலைமையையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதற்குப் பின் புதிதாகக் குடியேற்றப்பட்ட மக்களுக்கும், அங்கிருந்த மக்களுக்கும் இடையே குரோதங்கள் வளர்ந்தது. புல்டோசர் மூலம் வீடுகள் கடைகள் உடைக்கப்பட்ட சம்பவங்களை நாம் மறக்க முடியுமா?

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், தலைமைகள் இதனையும் தங்கள் இலாப நோக்கிலேயே பார்க்கிறார்கள்.

**மலைக்குருவி**

சந்திரசேகரன் போன்றோரின் செயல்கள், அறிக்கைகள் திட்டத்தைச் செயற்படுத்த முனையும் சக்திகளுக்குச் சாதகமாக அமைந்து விட்டன. மக்களின் பாதுகாப்பு உரிமைகள் தொடர்பாக அரசு உத்தரவாதமளித்துள்ளது என்று சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். வீடமைப்பு அமைச்சரோ மக்கள் நலன்களிலிருந்து இதை நடைமுறைப்படுத்தக் கூடாது எனத் தான் இதை நோக்குவதாகத் தெரிவித்திருக்கிறார்.

மலையக மக்களுக்கு நேரடியான பாதிப்புகளை ஏற்படுத்தும் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு மக்களின் பெயரைக் கூறி ஆதரவு தெரிவிப்பது எந்த வகை நியாயத்தில் சாரும் என்று சந்திரசேகரன் விளக்குவாரா? ●



## அதிரடி அய்யாத்துரை

**அமிரண்ணையின்ர ஞாபகம்** இப்பதான் கூட்டணிக்காரருக்குத் திரும்பவும் வந்திருக்கு. உள்நாட்டில விழா எடுக்க ஏலாட்டாலும் லண்டன், கனடாவெண்டு பறந்துபோய் பவளவிழா நடத்தினதாவது ஒரு துணிச்சல்தான். 'வரலாற்றில் மனிதன்' என்ற ஒரு விழா மலரையும் வெளியிட்டிருக்கினம். அமிரின் மனைவி மங்கையக்கா சிங்கள இனவாதிகளால தான் கணவருக்கு உயிராபத்தெண்டு தான் எண்ணியிருந்ததாகச் சொல்லிப்போட்டு, அங்கால சொல்ல ஏலாமல் கண்ணீர் விட்டது தான் பரிதாபமாயிருந்தது. அந்தக் கண்ணீர் பேசாமலே பேச வேண்டியதெல்லாத்தையும் பேசிட்டுதெண்டு பாத்தவை சொல்லிச்சினம். அது ஒரு வரலாற்றுத் துயரத்தின் கண்ணீரெல்லவா?

**புலிகளின் அரசியல் ஆலோசகர்** இலங்கையின் தனியார் தொலைக்காட்சிக்குக் கொடுத்த தாய்லாந்துப் பேட்டியில நாலைஞ்சு குட்டுக் குடுத்திருக்கிறார். பேட்டியெடுத்தவருக்கே குட்டு விழுந்ததுதான் பரிதாபம். எனக்குப் பின்னால திரிஞ்சு பேட்டியெடுத்தீர், அதெண்டாலும் பிரயோசனம். நீரேனைசே அவைக்குப் (கூட்டமைப்புக் காரருக்குப்)பின்னால திரிஞ்சீரெண்டு போட்டாரே ஒரு போடு, ஜேர்னலிசம் வாலாட்டிக் கொண்டு நிண்ட விதம்தான் பரிதாபம். இத்தனைநாளைய மின்னல் விற்பன்னங்களெல்லாம் ஒரு நொடியில வேஸ்ற் எண்டு ஆயிட்டுதே...?

**கூட்டமைப்புக் கட்சிளுக்குத்தான் பெரிய குட்டு.** புலிகள் தான் தேசிய விடுதலை இயக்கம். அரசியல் கட்சிகளுக்கு இங்க இடமில்லை. ரீ.என்.ஏ. காரர் புலிகளின்ர அதிகார வரம்புக்குக் கட்டுப்பட்டவை. அவைக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்புகள் குடுக்கப்பட்டிருக்கு. மக்களை அணி திரட்டிறது, மக்கள் போராட்டங்களை நடத்திறதெண்ட பங்கை அவை வகிக்க முடியாது. சமாதானத்தை முன்னெடுப்பது அவையளல்ல. சமாதானத்தைப் பற்றிப் பேசுவதும், அதை முன்னெடுப்பதும், முன்னெடுத்து நடத்துவதும் தாங்கள்தானெண்டு நெத்தியடி அடிச்சிருக்கிறார் அன்ரன் பாலசிங்கம். புலிகளை ஏக பிரதிநிதிகளெண்டு அங்கீகரிச்சவையப் புலிகள் புழுவாத்தன்னும் மதிக்கேல்லையெண்டதுதான் இங்க தெரியுது. என்ன சொல்லப் போகினமாம் கூட்டுக் கட்சிக்காரர்...?

**தமிழீழத்துக்கு மாற்றான தீர்வு** ஏதுமிருந்தால் அதை தாமல்ல, அரசாங்கமே முன்வைக்க வேணும், தாம் அதைப் பரிசீலிப்போமெண்டு புலிகள் சொல்லி வருவது தெரிந்ததே. ஆனால் இப்போது முஸ்லிம் காங்கிரஸு ம் அதேபாணியில் சொல்லுவதுதான் வினோதமாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கான தனியலகு ஒன்றுக்கு மாற்றுத் தீர்வு இருந்தால் அதைப் புலிகள்தான் முன்வைக்க வேணும், தாம் அதைப் பரிசீலிக்கத் தயாரெண்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் பீ.பீ.சி. பேட்டியில் கூறியுள்ளதுதான் வேடிக்கை. எந்த ரேஞ்சுக்குப் போகுது விஷயம்!

**கிரிக்கெட்டே ஒரு நிச்சயமற்ற விளையாட்டு.** அதோடு விளையாடுகிறது மழை! ஐ.சி.சி. சாம்பியன் கிண்ணத்துக்கு இலங்கையும் இந்தியாவும் மோதிய முதல் மோதலை மழை புகுந்து கெடுத்துவிட்டது. முதலாவது முறை இலங்கை ஒருவாறு திரட்டிச் சேர்த்த ரன்களும் மழையோடு கரைந்து போக, மறுநாள் தாக்குப் பிடிப்பதற்குத் தள்ளாடும் நிலைக்குப் போய் விட்டது. வெற்றியோ தோல்வியோ, விளையாட்டை விளையாட்டாக எடுக்கும் மனோ பாவம்தான் எங்கள் ரசிகர்களுக்கு வளர வேண் டும். இந்தியா வென்றாலென்ன இலங்கை வென்றாலென்ன, விளையாட்டில் திறமை காட்டியவர்களை மனமாரப் பாராட்டுவதே பண்பு. ஸ்போர்ட்ஸ்மென் ஷிப் என்பார்களே அது இது தான்!

**புரிந்துணர்வு ஒப்பந்தம்** யார்யார் எதுக்கு மேற்கொள்ளுறதெண்ட விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது. புலிகளும் அரசாங்கமும் புரிந்துணர்வு ஒப்பந்தம், புலிகளும் முஸ்லிம் காங்கிரஸு ம் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றால் இரண்டு பகுதிகள் என்று ஒரு நிலைமையை நியாயமாகக் கொள்ளலாம். இலங்கை அரசாங்கமும் இலங்கை அரசாங்கமுமே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வது வேடிக்கையல்லவா? கொத்மலைத் திட்டம் தொடர்பாக சந்திரசேகரனின் சமூகநல அமைச்சுக்கும் கரு ஜெயசூரியவின் மின்சக்தி அமைச்சுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதென்பது அரசாங்கம் தமக்குத் தாமே ஒப்பந்தம் செய்வதல்லவா? எப்படியோ, இந்த ஒப்பந்தம் ஒட்டு மொத்தத்தில் மலையகத் தமிழர்களுக்கான காட்டிக் கொடுப்பாகிவிடக் கூடாது என்பதுதான் இங்கு முக்கியம்.

# ஒருபிடிவிருந்து

## 800 பேருடன் கடலுக்குள் கவிழ்ந்த கப்பல்



படகு கவிழ்ந்து சாவது சர்வ சாதாரணமாகிப் போன நாடு பங்களாதேஷ். ஆனால், இம்முறை அனைத்து ஆபிரிக்க மக்களையும் கதி கலங்க வைக்கும் விதத்தில் ஒரு கோர அனர்த்தம் செனகல் நாட்டில் நடந்துள்ளது.

செனகலை இலகுவில் மறந்து விட நியாயமில்லை. உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முதல் ஆட்டத்திலேயே பிரான்ஸ் அணியைத் தோல்வி காணச் செய்ததோடு அரையிறுதி ஆட்டம் வரை திறமையாக ஆடியது செனகல் நாட்டு அணி. அதே செனகலில்தான் இந்தக் கப்பல் விபத்து நடந்திருக்கிறது.

மேற்கு ஆபிரிக்க நாடான செனகலின் தலைநகரம் தாகர்.

கசமான்ஸ் என்ற மாகாணத்திலிருந்து தலைநகர் தாகருக்கு வருவதற்காக வியாழக்கிழமை காலை ஜூலா என்ற கப்பல் ஒன்றில் 800 பயணிகள் ஏறினார்கள். தங்கள் பயணம் நடுக் கடலில் முடியப் போவதை அறியாமல் உள்ளூர் வாசிகளுடன் பல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அந்தக் கப்பலில் ஏறிக் கொண்டார்கள்.

கப்பல் நடுக் கடலில் போய்க் கொண்டிருந்த போது லேசாகப் பெய்து கொண்டிருந்த மழை ஒவெனக் கொட்டத் தொடங்கியது. பயங்கரக் காற்றுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத கப்பல் கடலில் கவிழ்ந்தது. வெள்ளிக்கிழமை வரையில் 65 பேர் உயிருடன் மீட்கப்பட்டார்கள். அடுத்தடுத்த நாட்களில் சடலங்கள் ஒவ்வொன்றாக கரையொதுங்கத் தொடங்கின.

சிப்பந்திகளுடன் சேர்த்துகுறைந்த பட்சமாக 750 பேர் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. செனகல் நாடு சோகத்தில் மூழ்கிக் கிடக்கிறது.

## ஒருதலைக் காதலுக்கு மரண தண்டனை

யாங் ஷென்மிங் என்ற 40 வயது நபர் தினசரி தன் வீட்டைக் கடந்து செல்லும் சென் என்ற பள்ளி ஆசிரியையைக் காதலித்தார். பலமுறை சென்னிடம் தன் காதலைத் தெரியப் படுத்தினார் யாங். ஆனால், சென் கடைசி வரையில் அந்தக் காதலை ஏற்றுக் கொள்ளவில்லை.

பொறுத்துப் பார்த்த யாங் விரக்தியின் உச்ச நிலைக்கு வந்து துப்பாக்கியைக் கையில் எடுத்தார். நேராக சென் பணிபுரியும் பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களை நோக்கிக் கண்மூடித்தனமாகச் சுட்டார். சென்னின் உடலில் துப்பாக்கியால் துளை போடுவதே அவரது தேவையாக இருந்த போதிலும் எதிரில் அகப்பட்ட ஆசிரியர்கள் பலர் மீதும் சுட்டார். ஒரு ஆசிரியை கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். அதற்குள் இந்த ரகளையை அறிந்த பொலிஸார் பாடசாலையைச் சுற்றி வளைத்து விட்டனர். ஆனால் அந்த நபர் பாடசாலைக் கூரையின் மீது ஏறி நின்றுகொண்டு தன்னை யாரும் நெருங்கி வர வேண்டாம் எனக் கூறிப் பொலிஸார் மீதும் சுடத் தொடங்கினார்.

இறுதியில் அவர் விரும்பிய பள்ளி ஆசிரியை சென் பார்த்திருக்க, கூரை மீதிருந்த யாங் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## உலக அழகிப் பட்டம் பறிபோனதா?

### திருப்பிக் கொடுக்கப்பட்டதா?





உலக அழகியாகத் தெரிவுசெய்யப்படுவது சாதாரணமான விடயமல்ல. அப்படித் தெரிவான ஒருவருக்கு அவர் உலக அழகியாக இருக்கும் ஒரு வருட காலத்தில் கிட்டும் நன்மைகள், சலுகைகள், இலாபங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. உலக அழகிப் பட்டத்தைப் பெற ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு நாடும் காணும் கனவு மிகப் பெரியது. அப்படிப்பட்ட உலக அழகிப் பட்டத்தைப் பெற்ற ஒருவர் நான்கு மாதங்களுக்குள் அதைத் திருப்பிக் கொடுப்பார் என்று எதிர்பார்க்க முடியுமா...? ஆனால், தான் தனது உலக அழகி பட்டத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டதாகக் கூறுகிறார், ரஷ்யாவைச் சேர்ந்த ஆக்ஸானா பெடரோவோ....

உலக அழகி போட்டி ஏற்பாட்டாளர்களோ இதற்கு நேர் எதிரான கருத்தைக் கூறுகின்றனர். தாங்கள் ஆக்ஸானாவின் பட்டத்தை பறித்ததாக அவர்கள் தெரிவிக்கின்றனர். எது உண்மை எது பொய் என்று தெரியவில்லை. ஆனால்ஆக்ஸானாவிடம் இன்று கிரீடம் இல்லை.

ஆக்ஸானாவுக்குப் பதிலாகப் பனாமா நாட்டைச் சேர்ந்த ஜஸ்டின் பாசெக்குக்கு உலக அழகிப் பட்டம் சூட்டப்படும். அடுத்த உலக அழகிப் போட்டி நடைபெறும் வரை, எஞ்சிய காலத்துக்கு உலக அழகியாகப் பாசெக் (22) இருப்பார். இவர் கடந்த மே மாதம் நடந்த போட்டியில் 2-ஆம் இடத்தைப் பெற்றவர்.

உலக அழகிப் போட்டியின் 52 ஆண்டுகால வரலாற்றில் இவ்வாறு பட்டம் பறிக்கப்படுவது இதுவே முதல் முறை. ஆனால், பட்டத்தைப் பறித்ததற்கான காரணம் என்ன என்பதை அந்தப் போட்டியை நடத்தும் அமைப்புத் தெரிவிக்கவில்லை.

புதிய அழகியாகப் பாசெக்குக்குப் பட்டம் சூட்டப்படும் வரை, பட்டத்தைப் பறித்ததற்கான காரணம் அறிவிக்கப்பட மாட்டாது என்று உலக அழகிப் போட்டி அமைப்பு திங்கள்கிழமை கூறியது.

உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், அப் பட்டத்தை வகிக்கும் ஓராண்டு காலத்தில் திருமணம் செய்யக் கூடாது; கர்ப்பமுறக் கூடாது; எடை அதிகரிக்கக் கூடாது என்பது விதியாகும். ஆனால், உலக அழகி ஆக்ஸானா இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டதாகவும், கர்ப்பமுற்றிருப்பதாகவும், எடை கூடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. அதனால் தான் அவரிடமிருந்து உலக அழகிப் பட்டம் பறிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

போர்ட்டோரிகோவில், மே மாதம் நடந்த போட்டியில் ஆக்ஸானா உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர், ரஷ்யாவிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பொலிஸ் அகாதெமியில், சிவில் சட்டப் படிப்புப் படித்து வருகிறார். 4 மாதங்களாக உலக அழகியாக இருந்த அவர், "என்னிடமிருந்து யாரும் அழகிப் பட்டத்தைப் பறிக்கவில்லை. நானேதான் அப் பட்டத்தைத் திருப்பி அளித்தேன்" என்று தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், கூறியுள்ளார்.

"நான் இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டதாகவும், கர்ப்பமாக இருப்பதாகவும் எடை கூடிவிட்டதாகவும் கூறப்படுவது பொய். ஆனால், குடும்பம் என்பது அற்புதமானது. அதை நான் நேசிக்கிறேன். குடும்பம் தேவை என்று நினைக்கிறேன். ஆனால், இன்னும் திருமணம் செய்யவில்லை; குழந்தை பெறவில்லை. வருங்காலத்தில் இக் கனவு நனவாகும் என்று நம்புகிறேன்."

"உலக அழகியின் கடமைகள் சிறப்பானவை. ஆனால், எனது முதல் குறிக்கோள் படிப்பதும் ரஷ்யாவில் பணியாற்றுவதும்தான். நான்தான் உலக அழகி என்பது எனக்குத் தெரியும். ரஷ்ய மக்களைப் பொறுத்த வரை நான்தான் உலக அழகி" என்று அந்தப் பேட்டியில் கூறியிருக்கிறார் ஆக்ஸானா.



ஜப்பானில் டோக்கியோ நகரில் திங்கள்கிழமை மிஸ் இன்டர்நேஷனல் ஆக அறிவிக்கப்பட்ட லெபனானைச் சேர்ந்த கிறிஸ்டினா சவாயா (நடுவில்). உடன் (இடமிருந்து) 3 ம் இடத்தை வென்ற ஜப்பானிய ஹனா உருஷிமா, 2ம் இடத்தை வென்ற பிரான்ஸைச் சேர்ந்த இம்மானுவல் ஜகோட்சின்ஸ்கி

## எட்டாயிரம் ரூபாவுக்காக 89 வயது மணப்பெண் கொலை

எட்டாயிரம் ரூபா சீதனப் பணத்தைக் கொள்ளையடிப்பதற்காக 89 வயது மணப்பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

எகிப்து நாட்டில் வடக்கு கெய்ரோவில் உள்ள சுப்ரா என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஹெத்மத் ஹவாத் ஹன்னா என்ற 89 வயது மணப்பெண் நண்பர் ஒருவரைப் பார்க்க மருத்துவ மனைக்குச் சென்ற போது அங்கு சிகிச்சை பெற்று வந்த இலாக் ஸகரீயா என்ற 89 வயது நபரைச் சந்தித்தார். இருவருக்கும் இடையில் காதல் பற்றிக் கொண்டது.

இந்த இருவருமே இதுவரையில் திருமணம் செய்யாதவர்கள். அதனால் இனிமேலும் காலம் தாழ்த்தக் கூடாது என்ற எண்ணத்தில் அடுத்த வாரமே திருமணம் செய்து கொள்வது என முடிவு செய்தனர்.

திருமணச் செலவுகளுக்காக ஹன்னா 8 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் வைத்திருந்தார். அதைக் கொள்ளையடிக்க வந்தவர்கள் மணப்பெண் ஹன்னாவைக் கொலை செய்துவிட்டுப் பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர். இந்தச் சோக நிகழ்வினால் மிகவும் மனமுடைந்து போயுள்ள மணமகன் ஸகரீயா வாழ்க்கை முழுவதையும் ஹன்னாவின் நினைவிலேயே கழிக்கப் போவதாகவும் இனிமேல் எவரையும் திருமணம் செய்யப் போவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

## 'ஆப்கான் அதிபர் கர்சாயைக் கொன்றால் 2 கார்கள் பரிசு'

ஆப்கான் அதிபர் ஹமீத் கர்சாயைக் கொன்றால் 2 டயோடா கார்கள் பரிசாகத் தரப்படும் என்று தலிபான் தலைவர் ஒருவர் கூறினாராம். அதையடுத்துச் செயலில் இறங்கிய அப்துல் ரெஹ்மான் என்ற தலிபான் வீரர் அமெரிக்க இராணுவ வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கந்தஹார் நகரில் இம் மாதம் 5 ஆம் தேதி இச் சம்பவம் நடைபெற்றது.

அமெரிக்கத் தாக்குதலுக்குப் பிறகு தலிபான்களும் அல்-காய்தா தீவிரவாதிகளும் ஆப்கானிஸ்தானிலிருந்து ஓடிவிட்டனர். அவர்களில் சிலர் இன்னமும் பாகிஸ்தானில் தலைமறைவாக வசிக்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு தலைவரை குவெட்டா நகரில் அப்துல் ரெஹ்மான் சந்தித்தார். அந்தத் தலைவர்தான் கர்சாயை கொன்றால் 2 கார்களைப் பரிசாகத் தருவதாகக் கூறினார்.

கந்தஹார் நகருக்கு கர்சாய் வந்த போது, அவருடைய வாகனத்தின் மீது சரமாரியாகச் சுட்டார் அப்துல் ரெஹ்மான். கர்சாய்க்குப் பாதுகாவலாக வந்த அமெரிக்க வீரர்கள் ரெஹ்மானைச் சுட்டுக் கொன்றனர்.


இத் தகவலை 'காபூல் வீக்லி' என்ற ஆங்கில வாரப் பத்திரிகை தெரிவிக்கிறது.



மழை குறுக்கிடாமல் இருந்திருந்தால் இந்தக் கிண்ணம் யாருக்குக் கிடைத்திருக்கும்....?

# செக்கப்

↓ கிரிபா என்ற 23 வயதுடைய இந்தக் கொரில்லாக் குரங்கை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துகிறார்கள் அவுஸ்திரேலிய மருத்துவர்கள். சிட்னியில் உள்ள டரொங்கா மிருகக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் இந்தக் கொரில்லாக் குரங்கு முழு அளவிலான மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது. இதனது குரல் வளையில் சிறிய கோளாறு காணப்பட்டதாகவும் இதற்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் மருத்துவர் குழு அறிவித்தது.



# ஆடாத பாம்பு


→ பங்களாதேஷ் தலைநகரமான டாக்காவுக்குத் தெற்காகவுள்ள கிராமம் ஒன்றில் உள்ள வீட்டு எஜமானி தன் வீட்டுக்குள் சிறிய பாம்புகள் இரண்டைக் கண்டார். சத்தமிட்டு ஊரைக் கூட்டி இரண்டு குட்டிப் பாம்புகளையும் அடித்துக் கொன்று விட்டார்கள். ஆனால் வீட்டில் உள்ள சிறிய மண் புற்றுக்களில் இருந்து மேலும் பாம்புகள் வரத் தொடங்கின. தடி கொண்டு அடித்து முடிக்க இயலாத அளவு பாம்புகள் வீட்டின் நிலப் பகுதிக்குக் கீழிருந்து வெளிப்பட்டன. வேறு வழியின்றிப் பக்கத்து ஊரில் உள்ள பாம்பாட்டி ஒருவரின் உதவியை நாடினார்கள். இங்கு வந்த வயதுபோன பாம்பாட்டி சில மருத்துவப் பொருட்களைப் பயன் படுத்தியும், மந்திரம் செபித்தும் அந்த வீட்டுக்குள் இருந்து சுமார் 3000 மலைப்பாம்புக் குட்டிகளை வெளியில் வரச் செய்தார். இறந்த நிலையில் மேலும் 1000 பாம்புகள் கண்டெடுக்கப்பட்டன. அவ்வாறு எடுக்கப்பட்ட பாம்புகளைப் பாம்பாட்டி காண்பிக்கிறார்.



# அமைதியிழக்கும் கடவுள் சந்நிதி

→ அமைதியை அர்த்தப்படுத்தும் பிரதான இடம் கடவுளின் சந்நிதானம். இன்று உலகம் முழுவதும் தொற்றியுள்ள மத வன்முறைகளால் தெய்வ சந்நிதிகளும் வணக்க ஸ்தலங்களும்கூட அமைதியற்ற அச்சுறுத்தல் மிக்க இடங்களாக மாறிப் போயின. மத வன்முறைகளுக்குப் பெயர் போன நாடு இந்தியா. குஜராத் மாகாணத்தில் கடந்த 8 மாத காலமாகத் தொடர்ச்சியான மதக் கலவரங்கள் இடம்பெற்று வருகின்றன.


நூற்றுக் கணக்கான இந்துக்களும் ஆயிரக் கணக்கான முஸ்லிம்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். இந்தக் கலவரங்களின் தொடர்ச்சியாகக் கடந்த வாரம் காந்தி நகரில் உள்ள இந்துக் கோவில் ஒன்றுக்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குறைந்த பட்சமாக 40 பேர் கொல்லப்பட்டார்கள். 70 பேர் வரை காயமடைந்தார்கள். தாக்குதல் இடம் பெற்ற கோவிலை விசேட அதிரடிப் படை வீரர் ஒருவர் ஆயுதங்களுடன் காவல் காக்கிறார். காந்தி பிறந்த மண் இன்று கசாப்புக் கடையாக மாறியுள்ளது.



# அசையும் மலை

↓ இந்த மாமிச மலைக்குப் பெயர் அன்றூ ரீட்ஸ். செக் குடியரசில் வசிக்கும் இந்த நபர் ஆக 586 கிலோதான் இருக்கிறார். ஓடியாடவோ எழுந்து நடக்கவோ முடியாது உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டு சதா காலமும் சாப்பிடுவதுதான் வேலை. சிறு வயது முதலே அசாதாரணமாக வளர ஆரம்பித்த இவரது உடம்பைக் கன்ட்ரோலில் வைத்திருக்கப் பெற்றோர் எடுத்த எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. இப்போது 34 வயதாகிறது. இதே சைஸ்ஸில் நீடித்தால் ஆயுள் குறைவு என்று மருத்துவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். அந்தக் கவலையிலாவது மெலிந்துவிடுவார் என்று எதிர்பார்த்தால்.... அதுவும் ஏமாற்றந்தான்.





# காவிரி நீர்ப் பிரச்சனை: ரஜனி தலைமையில் போராட கே.ராஜன் கோரிக்கை

சென்னை, செப்.27. தமிழகத்துக்குக் காவிரி நீரைத் திறந்து விடக் கோரி தமிழக சினிமா கலைஞர்கள் நடிகர் ரஜனி தலைமையில் போராட்டம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

தமிழகத்துக்குக் காவிரி நீரைத் திறந்து விடக் கூடாது என்று நடிகர் ராஜ்குமார் தலைமையில் கன்னட நடிகர், நடிகைகள் ஊர்வலம் நடத்தியுள்ளனர்; முதல்வரிடம் கோரிக்கை மனுவையும் அளித்துள்ளனர்.

இந் நிலையில், தமிழகத்துக்குக் காவிரி நீரைத் தருமாறு கர்நாடகத்தை வற்புறுத்துவது தமிழ் மக்களுக்கு நடிகர், நடிகைகள் செய்யும் நன்றிக் கடனாகும். எனவே தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம், இயக்குநர்கள் சங்கம், நடிகர்கள் சங்கம் உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்று பல்வேறு அமைப்புக்கள் நடிகர்களைக் கோரியுள்ளன.

இதேவேளை கன்னடரான ரஜனி தலைமையில் கர்நாடகாவுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தக் கோரியிருப்பது ரஜனியைச் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

# கனிஷ்காவுக்கு நேர்ந்த கதி

"ஒரு தேவதையை மண்ணில் இன்று பார்த்தேன்" என்ற பாடல் வரிகளுடன் புதுமுகம் கனிஷ்காவைக் காதல் செய்து கொண்டிருந்தார் 'ஜங்ஷன்' பட நாயகன் அபினய்.

ரூ. 5 லட்சம் செலவில் புல்வெளி 'செட்' போடப்பட்டு, அதில் குதிரைகள் கட்டிப் போடப்பட்டிருந்தன. நாயகி கனிஷ்கா குறைந்த உடையில் 'குளு குளு' வென நடனமாடிக் கொண்டிருந்தார். ஆடியபடியே, நடிகை குதிரையின் அருகே போய் விட, குதிரைக்குக் குஷி! புல் மேய்ந்த குதிரை, நடிகையைக் கடிக்கும் வேகத்தில் பாய, பதறிப் போனார் கனிஷ்கா. பயந்து அலறியபடி ஓட, அப்போது அவர் அணிந்திருந்த உள்ளாடை "டர்ர்ர்" எனக் கிழிந்தது.

பயத்தில், கிழிந்தது தெரியாமல் நடிகை மீண்டும் நடனமாட, பார்த்தவர்களுக்கு இன்ப அதிர்ச்சி! 'ஷாட்' முடிந்து அறைக்குப் போன பிறகே நடிகைக்கு உள்ளாடை கிழிந்துபோன விஷயம் தெரியவர, வெட்கத்தில் வெளியேவரவில்லையாம்.



ராகவன் மீராஜெஸ்மின்
படம்: ரன்



அனுராதா

## அர்ஜுனுடன் நடிக்க மறுத்த த்ரிஷாவின் அம்மா

நடிகைகளின் அம்மாக்களிலேயே அழகான இளவயது அம்மா த்ரிஷாவின் அம்மா தான். முன்னாள் மாடல் அழகியான அவரைத் தனக்கு ஜோடியாக நடிக்க அணுகினாராம் அர்ஜுன். மறுத்து விட்டார் மாடல் மம்மி! மகளுக்குத் தானே போட்டியாகி விடக் கூடாது என்பதினால் இருக்குமோ?

## மினிசினி

* மீனம்பாக்கம் அருகில் உள்ள ராஜன் ஹோட்டலில் நிரந்தரமாக ரூம் போட்டிருக்கிறார் சிம்ரன்.

* 'ஆல்பம்' ஹீரோ ஆர்யன் ராஜேஷ் அண்மையில் காதல் திருமணம் செய்துள்ளார்.

* சூப்பர்குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் தெலுங்குப் படத்துக்கு இசையமைக்கிறார் சிற்பி.

* சத்யராஜின் மகன் சிபிராஜ் அருணாசலம் என்ற ஃபிலிம் இன்ஸ்டிடியூட் ப்ரொபஸரிடம் நடிப்பு பயின்று வருகிறார்.

* 'கோவில்பட்டி வீரலட்சுமி' படத்தில் சிம்ரன் தங்கையாக நடிக்கும் புவனேஷ்வரி சௌத்ரி, 'பாபி' படத்தில் நாயகியாகியிருக்கிறார்.

* பாலா இயக்கும் 'பிதாமகன்' படத்துக்கு ரஜனி தலைமையில் சென்றவாரம் பூஜை போடத் திட்டமிட்டிருந்தனர். அவர் அமெரிக்கா சென்றதால் பூஜையை ஒத்திவைத்து விட்டனர். ரஜனி தலைமையில்தான் பூஜை என்பதில் உறுதியாக இருக்கிறார் தயாரிப்பாளர்.

* 'இவன்' படத்தின் ஒருநாள் காட்சி வசூலைச் சேரிப்புறக் குழந்தைகளின் கல்வி நிதியாகத் தந்திருக்கிறார் பார்த்திபன். வசூலான தொகை ரூபாய் எழுபதைந்தாயிரம்.

* புதுமை செய்வதாக நினைத்துக் கொண்டு ஒரே ஒரு பாடலுடன் 'லேசா லேசா' கேசட்டை வெளியிட்டனர். மொத்தத்தில் நூறு கேசட் கூட விற்கவில்லையாம். புதுமைக்கு ஒரு அளவு வேணாம்?

* 'த்ரீரோசஸ்' எப்போ வரும்...எப்போ வரும்...என்று எதிர்பார்த்திருந்த இரசிகர்களின் எதிர்பார்ப்பை எப்படியும் பூர்த்தி செய்து விடுவது என்று முழு மூச்சில் இறங்கியுள்ளார் ரம்பா. கார்த்திக்ராஜா இசையமைத்துள்ள இதன் ஆடியோ வெளியீடு விரைவில் வெளியாகவுள்ளது.

* விக்ரம ஜோடியாக 'அதிசயம்' படத்தில் நடித்து வரும் ப்ரியங்கா திரிவேதி, தெலுங்கில் படு பிஸியாக இருக்கிறார். எனவே, அடுத்த ஆண்டு இறுதியில்தான் தமிழ்ப் படங்களில் நடிப்பாராம்.

## சமஸ்தானம்

'பாட்டாளி', 'பெண்ணின் மனதைத் தொட்டு' படங்களைத் தொடர்ந்து ரோஜா கம்பைன்ஸுக்காக சரத்குமார் நடித்து வரும் படம் 'சமஸ்தானம்'. டைரக்டர் ராஜ்கபூர்-சரத்குமார் காம்பினேஷனில் ஆக்ஷனும் சென்டிமெண்ட்டுமாக உருவாகியிருக்கிறது படம்.

...மன் ஓங்...

இப்பொழுது தெளிவாகப் பேச... யிருக்கிறார். கூடவே பா... 'தமிழை 30 நாட்களில் கற்... தயாரிக்கச் சொல்ல வேண்டும்... வந்துள்ள சமீபத்திய புது வர... யூனிட்டில் உள்ளவர்களிடமும்... நடித்து வரும் ஜெரினுக்கு...

## தந்தை பாச செண்டிமெண்டாக 'கிங்'

தாய்ப் பாசத்தை வைத்து ஆயிரம் கதைகள் வந்திருக்கின்றன. ஆனால், தந்தை பாசத்தைச் சொல்லும் கதைகள் குறைவு. அதை சடுகட்ட வந்திருக்கிறது இந்தப் படம். முழுக்க முழுக்கப் பாசத்தால் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கதை தமிழுக்குப் புதுசு. அந்தப் படக்கதையில் எதற்காக இன்னொரு கதையைப் 'பூச்சூட்டி' யிருக்கிறார் என்று தெரியவில்லை. பாட்டி, பேத்தி மாதிரி, தாத்தா, பேரன் கதை இன்னொரு இழை.

காதலித்துக் கல்யாணம் பண்ணி ஊரைவிட்டு, உறவுகளை விட்டுக் கிளம்பிப் போன நாசர் ஹாங்காங்கில் செட்டிலாகி விடுகிறார்.

அங்கே மனைவி இறந்து போக மகனுடன் வாழ்ந்து வருகிறார். மகன் விக்ரமும் மாஜிக் உண்டு, தான் உண்டு என்று தந்தைக்கு உதவியாற்றி வருகிறார். ஒரு ஆக்ஸிடெண்ட் நடந்து அதனால் நாசருக்கு இருக்கும் வினோத வியாதி தெரிய வருகிறது. இன்னும் அறுபது நாள்களே அவர் உயிரோடு இருப்பார் என்ற நிலையில் அவரை மகிழ்ச்சியாக வைத்திருக்க விக்ரம் அவரைப் பழைய உறவுகளின்.... சுற்றத்துக்கு (காரைக்குடிக்கு) அழைத்து வருகிறார். அந்த அறுபது நாள்களின் மகிழ்ச்சி, சோகம், சஸ்பென்ஸ் எல்லாம் தான் கதை.

விக்ரம் படு ஜாலியாக வருகிறார். இடையில் சீரியஸும், ஜாலியும் கலந்து...கடைசியில் சீரியஸ் மட்டுமே எஞ்ச அவர் நடிப்புக்கு நல்ல கிரவுண்ட் கிடைத்து விடுகிறது. அமர்க்களப்படுத்துகிறார். சினேகா ஒரு தனி ஆவர்த்தன கேரக்டர். அவரை ஏன் அனாதை என்கிறார்கள் தெரியவில்லை. விக்ரமுக்கு மூன்று அத்தைகள் இருக்க, சினேகாவை ஒரு அத்தை மகளாக்கியிருந்தால் என்ன குற்றமாகியிருக்கும்?



மும்தாஜ்

## ராதிகாவிடம் போலிஸ் விசாரணை

நடிகை ராதிகாவிடம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சென்னையில் உள்ள கொட்டிவாக்கத்தில் உள்ள டயானா ஹவுஸ் என்னும் வீட்டில் 'நின்னே மெல்லாடதா' என்ற தெலுங்கு ரி.வி. சீரியல் படப்பிடிப்பு நடந்த போது அதில் நடிப்பதற்காக அழைத்து வரப்பட்ட நந்தகுமார் எனும் சிறுவன் நீச்சல் குளத்தில் விழுந்து உயிரிழந்தான்.

இந்த நாடகத் தொடரை ராதிகாவின் ராடான் மீடியா நிறுவனமே தயாரித்து வருகிறது. அந்த நிறுவனத்தின் பிரதான பங்குதாரர் என்ற வகையில் ராதிகாவிடம் பொலிசார் விசாரணை மேற்கொண்டனர்.

முகப்பில் கிரண், சூர்யா, லைலா.

## உளவுப் பிரிவால் கண்காணிக்கப்படும் ரசிகர் மன்றங்கள்

...தகத்தில் நடிகர்களின் ரசிகர் மன்றங்கள் குறித்த ...டுப்பு மிகவும் இரகசியமான முறையில் நடந்து வருகிறது. ...னிகாந்த், விஜயகாந்த் உள்ளிட்ட சில முன்னணி நடி...ந்த நேரத்தில் வேண்டுமானாலும் அரசியலில் குதிக்கலாம் ...லையில் இந்தக் கணக்கெடுப்பு மிகுந்த முக்கியத்துவம் ...ாகக் கருதப்படுகிறது.

... உளவுப் பிரிவு போலீஸார் இந்தக் கணக்கெடுப்பை ...கின்றனர். இந்த ஆண்டில் நடத்தப்படும் இரண்டாவது ...ப்பு இது.

... ரஜினிகாந்த், விஜயகாந்த் ஆகிய நடிகர்களின் ரசிகர் மன்றங் ... மிகச் சீரியஸான கணக்கெடுப்பு நடந்து வருகிறது. ...ன்றங்களின் எண்ணிக்கை, ரசிகர்களின் எண்ணிக்கை, ...களின் எண்ணிக்கை, இவர்களது குடும்பப் பின்னணி, ...படிப்பு, அவர்கள் செய்து வரும் பணிகள் மற்றும் ...டம் உட்பட ஏராளமான விவரங்களைப் போலீஸார் ...கின்றனர்.

...காந்த் ஆகியோரின் சமீபத்திய பல படங்களிலும் அர... அடித்தது அனைவருக்குமே தெரிந்த ஒன்றுதான். "நம் ...அரசியல் அறிவிப்பு எப்போதடா வரும்?" என்று அவர் ...ர்களும் வெகு ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கின்ற...ம் அரசியலுக்காகத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

...ஜயகாந்த் தவிர கமலஹாசன், சரத்குமார், சத்யராஜ், ...ஜய், அஜித், பிரசாந்த் ஆகியோரின் ரசிகர் மன்றங்கள் ...ணிப்பீடுகள் நடந்து வருகிறது. இவர்களில் விஜய், அஜித் ...சாந்த் ஆகியோருக்குச் சமீப காலத்தில் ரசிகர் மன் ... எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது தெரிய ...துள்ளது.

... 1995 க்குப் பின்னர் ரஜனி ரசிகர் மன்றங்களில் புதிய ...னர் சேர்க்கை குறைந்துள்ளதாகவும், பல மன்றங்களில் ...னர் சேர்க்கையே இல்லை என்றும் தெரிய வந்துள்ளது. ...படங்கள் நீண்ட இடைவெளிக்கு ஒரு முறை மட்டுமே வரு... அவருடைய ரசிகர்கள் புதிய உறுப்பினர்களைச் ...கும் பணியில் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை என் ...கூறப்படுகிறது.

...யகாந்துக்குக் கிராமப் பகுதிகளில் ஏராளமான மன்றங் ...ப்பதும், மொத்தத்தில் எல்லா நடிகர்களுக்கும் மதுரை ...ில் அதிக மன்றங்கள் இருப்பதும் தெரிய வந்துள்ளது. ... கார்த்திக், பிரபு போன்றவர்களுக்கு ஜாதி ரீதியிலான ...இருப்பதும் தெரிய வந்துள்ளது.

## சுந்தரா டிராவல்ஸ் ராதாவுக்குப் புதிய வாய்ப்புகள்

'சுந்தரா டிராவல்ஸ்' ராதாவுக்குப் பட வாய்ப்புக்கள் குவியத் தொடங்கியுள்ளன.

'சுந்தரா டிராவல்ஸ்' படத்தில் எலியும் வடிவேலும் அடிக்கும் கொட்டத்திற்கு மத்தியில் ராதாவும் ரசிகர்களைக் கவர்ந்துள்ளார்.

ரசிகர்களைக் கவர்ந்தாரோ இல்லையோ, தயாரிப்பாளர்களைக் கவர்ந்து விட்டார் ராதா.

மலையாளத்து மங்கையான ராதாவுக்கு இப்போது சில படங்கள் வந்துள்ளன. எல்லாம் 'சுந்தரா டிராவல்ஸ்' நன்றாக ஓடுவதால் கிடைத்த படங்களாம்.

அத்தோடு அதிக பிரச்சனை இல்லாமல், செட்டில் அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்வதாலும், 'சிக் உடல்', 'ஜில் முகம்' ஆகியவற்றுடன் இருப்பதாலும் ராதாவுக்குப் புதிய பட வாய்ப்புகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

தேவையானால் கவர்ச்சியாக நடிக்கவும் தயாராக இருப்பதாக ராதா கூறியுள்ளார். அப்புறம் தயாரிப்பாளர்கள் கூட்டம் அலை மோதுவதில் என்ன ஆச்சரியம்?



சிலம்பரசன்-சார்மி
படம்: காதல் அழிவதில்லை

## தமிழ் கற்றுக்கொள்ளத் துடிக்கும் நடிகைகள்

ஸ்னேகா, ரதி, த்ரிஷா, அபிராமி, விஜயலட்சுமி (ஃப்ரெண்ட்ஸ்)...இவர்களெல்லாம் நல்ல பிள்ளைகள். அழகாகத் தமிழ் பேசக் கூடியவர்கள்.

இந்தப் பட்டியலில் அடுத்ததாகச் சேரவிருக்கிறார் பாரதிராஜா இயக்கத்தில் உருவாகும் 'கண்களால் கைது செய்' படத்தின் கதாநாயகி ப்ரியாமணி. கேரளத்தில் பிறப்பு பெங்களூரில் வளர்ப்பு என்றிருந்த இந்தத் தமிழ்ப் பெண்ணிற்கு ...சென்னைதான் நிரந்தர குடியிருப்பிற்கான இடம். காரணம், தமிழைத் தெள்ளத் ...ரியாமணி அடுத்ததாக 'ரோமியோ ஜூலியட்' என்ற புதுப்படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகி ...ராஜா அறிமுகம் என்பதால் வாய்ப்புகளெல்லாம் வீடு தேடி வருகிறதாம்.

...கொள்வது எப்படி?" என்ற புத்தகத்தை இனிமேல் தமிழ் சினிமா நடிகைகளைக் கொண்டுதான் ...தளவிற்குத் தமிழ் நடிகைகள் தமிழ் மொழியை மிக வேகமாகக் கற்றுக்கொள்கிறார்கள். தமிழுக்கு ... ஷெரீன் இப்பொழுது அழகாகத் தமிழ் பேசக் கற்றிருக்கிறார். பத்திரிகை நிருபர்களிடமும் ...வர் உரையாடுவது தமிழில் மட்டுமே! ஜெயா, விசில், ஸ்டூடண்ட் நெ.1 என்று 3 படங்களில் மூன்றில் ஒன்றிலாவது தமிழில் சொந்தக் குரலில் பேசிவிட வேண்டும் என்பது ஆசையாம்!

## கமல் மீது நடவடிக்கை

சென்னை, செப்.27: தங்களைப் பாதிக்கும் வகையில் நடிகர் கமல் கருத்துக் கூறியிருந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழ்நாடு தியேட்டர் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

'பாபா' படம் திரையிட்ட தியேட்டர் உரிமையாளர்கள் நஷ்டப்படாதவாறு உரிய பணம் திருப்பிக் கொடுக்கும் முடிவில் உள்ளார் நடிகர் ரஜனி. இவ்வாறு செய்வது தவறான முடிவுக்கு வழிகாட்டி விடும் என்று கமல் கூறியதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

தற்போது, படத் தயாரிப்புச் செலவுகள் அதிகரித்துவிட்டன. இதனால், தியேட்டர் உரிமையாளர்கள் அதிக டெபாசிட் செலுத்தியே படங்களை எடுக்க வேண்டியுள்ளது.

இந் நிலையில் ரஜனியின் முடிவு குறித்துக் கமல் கூறியது உண்மையானால் அதற்குக் கடும் கண்டனம் தெரிவிக்கிறோம். தான் அவ்வாறு கூறியிருக்கா விட்டால் அது குறித்துக் கமல் மறுப்பு அறிக்கை விட வேண்டும். இல்லாவிட்டால் அவர் மீது சங்கம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தச் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காதோடு சொல்லுகிறோம்

'யோகா டீச்சரான' அந்த மூன்றெழுத்து நடிகை, நல்ல கேரக்டர் கொடுத்து நடிக்க அழைத்தால் மறுத்து விடுகிறார். எனக்கு முன்பு ஃபீல்டுக்கு வந்தவர்கள் ஹீரோயினாக நடிக்கும் போது நான் மட்டும் சின்னச் சின்ன கேரக்டர்களில் நடிக்க வேண்டுமா? எனப் பொங்கி எழுகிறார். போட்டியில் இருந்தால் தானே ஜெயிக்க முடியும் அம்மணி?

பன்னிரண்டு வருடத்துக்குப் பிறகு உயரமான நடிகருடன் மூன்றெழுத்துப் படத்தில் நடிக்கும் இரண்டெழுத்து நடிகையின் நடிப்பைப் பார்த்து அசந்து போன ஒரு இயக்குனர் சீதாபிராட்டியின் கணவர் பெயரில் இயக்கும் படத்தில் அந்த உயரமான நடிகருடன் நடிக்கப் பேசி கால்ஷீட் வாங்கினார். இதைக் கேள்விப்பட்ட அந்த உயரமான நடிகர் தொடர்ந்து தன் படத்தில் அவர் நடித்தால் அந்த நடிகையைப் பற்றிக் கிசு கிசு வந்து வேதனைப்படுத்தும் என மறுத்து விட்டாராம். நல்ல மனம் வாழ்க!

'இந்து நட்சத்திரம்' படத்தில் நடித்த கலைஞர்களுக்குச் சம்பளம் எதுவும் கொடுக்கவில்லையாம். கேட்டதற்கு எங்க கம்பெனி அறிமுகம் ஒண்ணே பத்தாதா? என்று பதில் கூறி உள்ளனராம். நியாயம்தானா தலைவா?

சமீபத்தில் தன் தாயாருடன் லண்டன் சென்றார் உலக அழகி ஐஸ்வர்யா ராய். கலை நிகழ்ச்சி ஒன்றுக்காக சல்மான்கானும் லண்டனில் தங்கியிருந்தார். ஆனால், ஐஸ்வர்யாவுடன் தொடர்பு கொள்ள எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இருவருக்கும் இடையிலான லடாய் ஒரு பக்கமிருக்க கரீனாகபூர் மற்றும் கரிஷ்மாகபூர் இருவரும் சல்மான்கானை எந்தக் குறையும் இல்லாமல் கவனித்துக் கொண்டதாலேயே அவர் 'ஐஸ்' சை மறந்துபோனார் என்கிறார்கள்.

கடந்த 2 வருடங்களாகத் தமிழ் சினிமாவின் விடிவெள்ளியாக இருந்தவரை இன்று சல்லடை போட்டுத் தேடும்படி ஆகிவிட்டது. தமிழில் தொடர்ந்து சந்தித்த தோல்விப் படங்களால் தற்பொழுது திசைமாறியிருக்கிறார் மும்தாஜ். தெலுங்கு ஜெமினியில் 'ஓ' போடுவது மும்தாஜ் தான். இதன் மூலம் நிரந்தரமாகத் தெலுங்கில் ஒரு ரவுண்டு கட்ட முடிவு செய்திருக்கிறார்.



பார்த்திபன்-சவுந்தர்யா
படம்: இவன்

## கிரண் 'நந்தா'விலேயே அறிமுகமாக வேண்டியவர்

'நந்தா' படத்தில் லைலா கதாநாயகியாக நடித்து, படமும் ஒரு மாதிரியாக 100 நாள் ஓடியது தெரிந்ததே. அதே போல் 'ஜெமினி' படத்தின் மூலம் கிரண் தமிழில் அறிமுகமாகி இன்று பிரபல நடிகர்களுடன் நடித்து வருவதும் தெரிந்ததே.

ஆனால், கிரண் 2 வருடங்களுக்கு முன்பே 'நந்தா' படத்திலேயே தமிழில் அறிமுகமாகியிருக்க வேண்டியவர். ஆனால், இவரின் முகத் தோற்றம் தமிழுக்கு ஒத்து வராது என்பதால் கிரணுக்குத் தமிழில் வாய்ப்புக் கிடைப்பது இத்தனை நாட்களாக எட்டாக் கனியாகவே இருந்து வந்தது. நந்தா படத்திற்காக கதாநாயகியை இயக்குனர் பாலா தேடிவரும் நேரத்தில் வந்து ஆஜரானவர்தான் கிரண். கிரணைப் பார்த்த மாத்திரத்தில் சந்தோஷமடைந்த பாலா உடனடியாக மேக்கப் டெஸ்டிற்கு கிரணைத் தயார்படுத்தியிருக்கிறார். 'தேட்டிவிட்டி' பார்ப்பதற்காக காமெடி நடிகர் கருணாஸுடன் கிரணையும் வைத்து ஃபோட்டோ செஷன் நடத்தியிருக்கிறார்.

ஆனால், சந்தோஷமாகக் கழிந்த அந்தச் சில நிமிடங்களுக்குப் பிறகு புகைப் படங்களைப் பார்த்த பாலாவிற்கு ஒரு அதிர்ச்சி. 'நந்தா' படத்தின் கல்யாணி கேரக்டருக்கேற்ப இலங்கைப் பெண்களின் சாயல் முற்றிலும் கிரணிற்கு இல்லாததோடு, 'ஃபோட்டோஜெனிக்' முகத்திற்கும் இவர் லாயக்கில்லை என்று பலரும் கருத்துத் தெரிவிக்கவே கிரணை உடனடியாக 'நந்தா'வில் ஹீரோயினாகப் போடும் தனது திட்டத்தைத் தூக்கிப் போட்டுவிட்டார் இயக்குனர் பாலா. (இதன் பிறகே இவர் லைலாவை வைத்து நந்தாவைத் துவக்கினார்).

அதன்பிறகு கிட்டத்தட்ட இதே காரணத்தால் கிரணுக்குத் தமிழில் எவருமே வாய்ப்புகள் தரவில்லை. ஆனால், இறுதியில் 'ஜெமினி' படத்தில் வடநாட்டுப் பெண் சாயலுடைய கேரக்டர் என்பதால் கிரணுக்கு ஜெமினியில் முதன் முதலாக வாய்ப்பை வழங்கினார் இயக்குனர் சரண்.

இப்படிப் பலவிதமாக, தமிழ்த் திரையுலகில் நுழைவதற்கு மிகவும் தட்டுத் தடுமாறிய கிரண் இன்று ஜெமினியின் வெற்றியின் மூலம் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகை என்ற தோரணையில் பல பிரபல நடிகர்களுடன் நடித்து வருகிறார்.

## சினி விசிட்

# உதிரும் சிறகுகள்...

நியாயங்களை
தட்டிக் கேட்பது யார்?

எம் சிறகு விரிப்பிற்கு
ஏன் இத்தனை சித்திரவதைகள்....?

சூரிய விடியலைத் தேடி
இன்னுமா கீழ்த்திசையில்
எம் விழிப்புகள்....?

எதற்காய் எமக்கு
சமாதானப் புறா என்ற
புனைபெயர்...?

சண்டைப் புறா என்றோ
அல்லது கழுகுகள் என்றோ
அணிந்துரை செய்....

மனிதா...! உன்னைப் போல்
நாம் என்ன
பிணமா புசிக்கிறோம்
இல்லை....குருதியா
குடிக்கிறோம்...?

வேட்டுச் சத்தங்கள்.
மீண்டும் எம் உடலை
ஏன் தேட முனைகின்றன....?

தொலை தூர சிறகடிப்பில்
நின்று....சற்று முன்தான்
கிளைகளில் எம் சிறகை
சுருக்கினோம்...

எம் ஜோடிப் புறாக்களை
தேடி அலைந்த
களைப்பு....எமக்கு...!

அதற்குள்...மீண்டும்... ஏன்..
விலங்கின் பிணைப்போடு
சிறகொடித்து சிறையடைப்பு...?

எப்போதுதான்
உன் வேட்டுச் சத்தங்களுக்கு
நிரந்தர சிறையடைப்பு...?

சமாதான விடியலிலா?
இல்லை... சமாதானப் புறாவின்
அழிவிலா?

சிந்தி மனிதா....!...!
நாமும் உன்னைப் போல்
இறைவனின் படைப்புத் தானே...?

ஏன் எமக்கு மட்டும்
சுதந்திர மூச்சுக்கும்
சிறகு விரிப்பிற்கும்
தடை விதிப்பு...?

தொடர் இது
நிகழுமானால்
எம் இறக்கைகள்
உதிர்ந்து
சிறகடிப்பு மறந்து
உன்னைப் போல்
நாமும் மிருகங்கள்
ஆகிவிடுவோம்.

பிரான்ஸிஸ்- கிருபாகரன், குவைட்.

# போர்காலக் காதல்

நீ காத்திருக்கின்றாய்
உன்னை நோக்கியே நான் நீள்வேன்-
நீ அதிகம் பயங்கொள்ளத்
தேவையில்லை.
உன்னை நோக்கிய பயணத்தில்
களைப்பில்லை.
பசுமைகள் படபடக்கும்
வயல் விறாந்தையில்,
பௌர்ணமி படிந்த இரவிலெல்லாம்
நீயும் நானும்
சந்தித்து காதல் பேச முடியாது.
எறிகணையால் எகிறிப்போன
எமதூரில் ஒரு பதுங்கு குழிக்குள்
வேண்டுமானால்,
பக்குவம் தவறாமல்
நீயும் நானும் காதலை
கண்களில் கரைத்துக் கொள்ளலாம்.
வெடி, எமனாகி உயிர் உறுஞ்சும்
வேளையெல்லாம்...
படபடக்காத உன் மனது
எமதுறவின் நிரந்தரத்தை நினைக்கும்
வேளை
கோழியின் இறக்கையாவதாய்
அடிக்கடி நீ கடிதத்தில்
கண்கலங்குகின்றாய்.
தோழி....
சந்தேக சுட்டுவிரலை படைகள்
நீட்டாதவரை
கட்டாய ஆளிணைப்பில்
'பொடியன்கள்' பிடிக்காதவரை
உன்னை நோக்கிய பயணத்தில்
பயமில்லை.

-ஒலுவிலூர் ஷிபானி.

# காதலின் தேசிய கீதம்

அவளது நினைவுகளின்
தாலாட்டில்
செல்லமாய்த் தூங்கிப் போன
ஜீவிதம்
நேற்றைய விடியலில்
விழித்துக் கொண்டது!

இன்றும் நாளையுமென
அவள்
மீதமாக எழுதிச் சென்ற
எஞ்சிய கவிதைகள்
நேற்றோடு கிழிக்கப்பட்டன!

செத்த மரத்தில்
பச்சயம் தேடும் கோடரிகளால்....

இதய வோடையில்
அங்குமிங்குமாய்ச் சிக்குண்ட
சில கவிதைகளைத் தவிர....

உணர்வுகளின் முனகல்
ஒப்பாரியாக
திசைமாறுவதற்கு முன்னம்
விதியின் சக்கரத்தில்
எமது கூடுகள்
கலைக்கப்பட்டன.....!

இழுவைக் காற்றின்
ஆதிக்கத்தில்
படகும் துடுப்பும்
பிரிக்கப்பட்டது போல....

ஒளியிழந்த குகைக்குள்
எனதிதயம்
சிறைப்படுத்தப்பட்டு
முட்கிரீடங்களினால்
முகவரி எழுதப்பட்டும்,
குருதியின் கசிவில்
அவளது நாமம்தான்....!

காதலின் தேசிய கீதம்
சோகமோ.....?

கன்னக் குழிக்குள்
காதலின் கருவைச்
சுமந்தவள்
நாளைய பிரிவில்
சாவோடு அல்லவா
வாழச் சொல்கிறாள்?

பார்வையின் அசைவில்
எத்தனை அர்த்தங்கள்!

முகம்மது ஹாரீத்,
அட்டாளைச்சேனை-11.

# கண்மூடும் வேளையிலும்

தென்றலாய் வந்து
தீண்டி விட்டுப் போ
உன் ஸ்பரிஸமற்ற
என்னுடல்
வியர்த்துக் கிடக்கிறது.

ஓரக் கண்ணால் பார்த்து
ஒரு சொட்டேனும் சிரி
உன் இதழ் மொட்டில்
மலராமல் இருக்கிறது
என் கவிதை.

உன் பார்வைகளில்
இடறித்தான்
இதயத்தில் விழுந்தேன்.
நீயோ
என் தூக்கத்தையுமல்லவா
திருடிக் கொண்டாய்.

உன் செயல் என்னில்
இரக்கத்தை நிகழ்த்தவில்லை
அதனால் நான்
நொந்து கொண்டேன்.

உன் வருகை
என்னுள் இடிகளை
நிகழ்த்திற்று
நான் அழுதிருக்கிறேன்
எத்தமடைந்ததற்காய்
அழும் ஒரு குழந்தையைப் போல்

என்
இன்பங்களைப் பறித்து
துன்பங்களை மூட்டி
வைத்தாய்

என் யோசனைகள்
நீண்டன
ஒரு
ஏழைக் குமரியின்
ஏக்கங்களைப் போல்.

நான்
மரமானேன்- நீ
களைப்பாறுவாயென்று

நான்
மலரானேன்
நீ சூடுவாய் என்று

என் பிரி(யந்த)ந்தவளே
நீ
மிதித்த பிறகுதான்
நினைத்தேன்- நான்
சருகா என்று

-ஒலுவில் அபுஸர்பான்

# தூரம்

என் குரல் கேட்டதும்
'ராங் நம்பர்' சொல்லி
தொலைபேசி துண்டித்துவிடு!

பேஜரில் ஆயிரம் முறை அழைத்தும்
பேசாமல் இருந்துவிடு!

'நீ அடைய முடியாத
தூரத்தில் இருப்பதாய்'
உன் கை செல்போனும்
பொய் சொல்லட்டும்'

மணி அடித்ததும்
படபடக்கும் இதயத்தில்
என் பெயர் பார்த்ததும்
முகத்தில் துளிர்க்கும் வியர்வையில்
நினைவுக்கு வராமலா போகும்
என் முகம்!

தூக்கமற்ற தனிமையில்
கசியும் கண்ணீர்த் துளியில்
கனவில் வராமலா போவேன் நான்!

காற்று சுழன்றுகொண்டுதானிருக்கும்
எப்போதும்
சாத்தியே வைத்திருக்க முடியாது கதவை.

விகடன்.

# மத்தியஸ்தம்


சந்திக்க இடம்;
கதைக்க சந்தர்ப்பம்
ஆலிங்கித்து முத்தங்களிட்டுப்
பேசிப் பழக... காவல்!
போதாக்குறைக்கு
காகிதத் தூதுவன்!

இருவருக்குமிடையினில்
மத்தியஸ்தம்! - நீ!!!

மொத்தமும் சரிவந்து...
இறக்கை பூட்டும்
வேளையில்
காலை ஒடித்துப் போட்டு
வேடிக்கை பார்க்கின்றாய்!!

இருந்தும் நீ
இன்னும்- எனக்கு
மத்தியஸ்தம்(?!!)

'தாராபுரம்' நிலாம்-கரம்பை.



# பேனா நண்பர்கள்



பெயர்: A.M. றஜீப்
வயது: 21
முகவரி:
மன்னார் வீதி,
பட்டானிச்சூர்,
வவுனியா.
பொழுது போக்கு:
கணனி, விளையாட்டு




பெயர்: R.ராதாமோகன்
வயது: 19
முகவரி: 23/2,
ஏகாம்பரம் வீதி,
திருகோணமலை.
பொழுது போக்கு:
கிரிக்கெட்



பெயர்: தாசன்
வயது: 20
முகவரி: இல. 31B
மன்னிங் பிளேஸ்,
கொழும்பு-06.
பொழுது போக்கு:
பத்திரிகை, பேனா நட்பு,
ரி.வி. பார்த்தல்

# தேன் கிண்ணம்

# நினைத்து, நினைத்து சிரிக்க



முதலிரவில் "எதுக்கு பால் செம்போட கத்தரிக்கோலையும் கொண்டு வந்திருக்கே?"

"எங்கப்பா சென்சார் போர்டு அதிகாரி. உச்சகட்ட காட்சியில 'கட்' பண்ணிடச் சொல்லியிருக்கார்."

**பாவம் கடைக்காரன்!**

மார்க் ட்வைன் ஒரு புத்தகக் கடைக்குப் போய், தான் எழுதிய புத்தகம் ஒன்றின் விலை கேட்டார். கடையிலிருந்தவன், "100 ரூபாய்" என்றான். உடனே மார்க் ட்வைன், "இந்தப் புத்தகத்தை எழுதியது நான்தான் தெரியுமா?" என்றார்.

கடைக்காரன், "தெரியும்" என்றான். உடனே மார்க் ட்வைன், "இந்தப் புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டதும் நான்தான் தெரியுமா?" எனச் சொல்ல, "தெரியும்" என்றான் கடைக்காரன்.



"நான் உன் முதலாளியுடைய நண்பன் தெரியுமா?" என்று கேட்க, கடைக்காரனும், "தெரியும். என் முதலாளியோடு நான் உங்களைப் பல முறை பார்த்திருக்கிறேன்" என்றான்.

இப்போது மார்க் ட்வைன், "நான் எழுதிய புத்தகம் என்பதால் எனக்கு எத்தனை சத வீதம் தள்ளுபடி?" என்று கேட்க, கடைக்காரன், "50 சத வீதம்" என்றான்.

"புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டவன் என்றால் தள்ளுபடி எத்தனை சத வீதம்?" என்று கேட்க, கடைக்காரன் "50 சத வீதம்" என்றான்.

"உன்னுடைய முதலாளிக்கு நண்பன் என்ற முறையில் தள்ளுபடி எத்தனை சத வீதம்?" என்று கேட்க, அவன் "25 சத வீதம்" என்று பதில் சொன்னான்.

உடனே மார்க் ட்வைன், "இப்போது இந்தப் புத்தகம் என்ன விலை என்று கணக்குப் போட்டுச் சொல்லு" என்றார்.

கடைக்காரன், "மொத்தம் 125 சத வீதம் தள்ளுபடி" என்று சொல்லி புத்தகத்தையும் 25 ரூபாவையும் அவரிடம் கொடுத்தான்.



"அந்த நடிகைக்கு இங்கிலீஷ் டியூஷன் எடுத்தீங்களே...ஏன் சார் திடீர்னு நிறுத்திட்டீங்க?"

"அதுவா...? "செவனுக்கு அடுத்தது என்ன?"ன்னு கேட்டா, 'எய்ட்ஸ்'னு சொல்றாங்க...பயமா இருக்கு....!"

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக-58 வயதாகும் கவிஞர் இன்குலாப்பின் இயற் பெயர் சாஹுல் ஹமீத். சென்னை புதுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறார். முப்பதாண்டுகளாக எழுதிவரும் இன்குலாப்பின் கவிதைகள் அனைத்தும் எதிர்ப்புக் குரலின் பதிவுகளே. அழகிழந்து போய்விட்ட உலகில், எதிர்ப்புக் குரல் என்பதே அழகைத்தான் தனது உட்கிடக்கையாக முன்வைக்கிறது.

"எனது நிறத்திலும் மணத்திலும் நான் பூத்துக் கொண்டிருக்கிறேன். இந்த மண்ணின் ஏதோ ஒரு மூலையில்- நான் கருகு மட்டும் பூப்பேன்" என்று சொல்லும் இன்குலாப்பின் கவிதைகள் சில...

### கொள்ளைக்காரர்கள் எப்படி இருப்பார்கள்?

"அப்பா
கொள்ளைக்காரர்கள்
எப்படி இருப்பார்கள்?"
அறியத் துடிக்கும்
என் மகளின் கேள்விகளில்
நான் அறிந்து வைத்தவை
சரிந்து போகின்றன.

"ஏன் படங்களில்
நீ பார்த்ததில்லையா?"
"படங்களில் நான் பார்த்த
கொள்ளைக்காரர்கள்
மீசை வைத்து.... முகமுடி மாட்டி
துப்பாக்கியால் சுட்டு....
காரில் பறந்து
நிஜத்திலும் கொள்ளைக்காரர்கள்
அப்படியா இருப்பார்கள்?"
"அப்படியும் இருக்கலாம்.
ஆயினும் மகளே!
அப்படி ஒரு கொள்ளைக்காரனை
இதுவரை நான் பார்த்ததில்லை"

"அப்படியென்றால்
இதுவரை நீங்கள்
எதையும் களவு கொடுத்ததில்லையா?"
நினைவு தெரிந்த நாளிலிருந்து
களவு போனவை
எவையென்று கணக்கிட்டால்...
சமூகத் தராதரத்தால்
சாய்க்கப்பட்ட
பெருமைக்குரிய எனது கணங்கள்.

இளமைக் கிளைகளில்
எனக்காகக் கூவி
வேட்டையாடப்பட்ட
வசந்த காலக்குயில்

பெற்ற வயிற்றுக்கும்
ஒரு துளியும் வார்க்காமல்
களவு போகும்
எனது வேர்வைகள்

எனது வெறுமையில்
கரைந்து போகும்
உன் அன்னையின்
புன்முறுவல்கள்

எட்டாமல் போன
வாய்ப்புகளுக்காக
என்னைக் குறைசொல்லாத
உன்
சகோதர எதிர்பார்ப்புகள்

களவு கொடுத்த
கணக்கில் வந்தவை
பொருள்கள் மட்டுமல்ல
நானும் என் வாழ்க்கையும்.

என்னோடு சேர்ந்த
எல்லா முகத்திலும்
களவாடப்பட்ட வாழ்க்கையே
எழுதப்பட்டுள்ளது.

"கொள்ளைக்காரர்கள்
எப்படி இருப்பார்கள்?"
யாரைக் காட்டி
அடையாளம் சொல்வேன்

பசையுள்ள புத்தகத்தை
ரகசியமாய்க் கொறித்துப்
பார்வைக்குத் தப்பும்
சுண்டெலி போலவா?

பிஞ்சுக் கரங்களில்
வடையைப் பறித்துப்
பறந்து போன
காகம் போலவா?

சிறகு வளராத
கோழிக் குஞ்சைக்
கொத்திச் சென்ற
பருந்து போலவா?

எதனைக் காட்டி நான்
அடையாளம் சொல்வேன்?
எங்கள் வாழ்க்கையை
எல்லா வகையிலும்
கொள்ளையடிப்பவர்களுக்கு
முகமுடி இல்லை.

அனுபவத்தால் அவர்களை நீ
அடையாளம் காண்கையில்
எங்களைப் போல நீ
ஏமாந்து விடாதே.

### மிச்சப்பட்டுத் துடிக்கும் வாழ்க்கை

என்ன கெட்டது- நான்
இப்படியே இருப்பதால்

பேச எனக்கு வார்த்தைகள் உண்டு.
கேட்கவும் செய்கிறேன்.
பார்.
என் உதடுகள் நெளிவதைப்
புன்னகை இல்லை என்று
உன்னால் சத்தியம் செய்ய முடியுமா?

நான் பார்த்து ரசிக்கத்
திரைப்படம் உண்டு.
கேட்டுக் களிக்கப் பாடல்கள் உண்டு.
பக்கத்தில் படுக்க
ஒரு பெண்துணை உண்டு.

இரவில் ஒருபோதும்
தூங்காமல் இல்லை.
தூக்கம் வண்ணக்
கனவுகளால் ததும்பும்.
காலை எனது
கனவைக் கலைக்கும்.

நான் அணிந்துகொண்டு புறப்பட
பெட்டி போடப்பட்ட
சட்டை மட்டுமல்ல,
ஒரு வாழ்க்கையும்
வீட்டுக் கொடியில் தொங்குகிறது.

என் சக்திக்கு ஏற்ப நான்
உன் விரல்களைக் கடிக்கும் போதே
என்னிலும் பெரிய வாய் ஒன்று
என் பிடரியைக் கவ்வுவதை
நீ பார்த்திருக்கக் கூடும்.

# சிறப்புக் கவிதை

இருந்தாலும்
நான் கொறித்துத் தீர்ப்பதற்கும்
சிலர் குதறித் தீர்ப்பதற்கும்
வாழ்க்கை
இன்னும்
மிச்சப்பட்டுத் துடிப்பதால்
என்ன கெட்டது
இதை மாற்றித் தொலைக்க?

### ஜீவகாருண்யம் 1

நகராத சண்டிமாட்டை
நகர்த்த
குச்சியை ஓங்கினான் குப்பன்.
அங்கு
சர்ரென்று நின்ற காரிலிருந்து
தோள்வரை தெரியும்
கையொன்று நீண்டது.

தொடை போல ஆடும்
தொங்கு சதைக் கைகள்

"அடிக்காதே மாட்டை
எஸ்.பி.சி. ஏக்கு
போன் பண்ணுவேன்
போலீஸ் வரும்"

அவளைப் போலவே கனத்த சத்தம்.

போலீஸ் தடிக்குப் பயந்த குப்பன்
மூன்றாவது மாடாய்
வண்டியை நகர்த்த
ஜீவகாருண்ய ஜெயக்கொடி
நாட்டி
காரும் தூசிப்
படலத்தில் மறைந்தது.

### ஜீவ்காருண்யம் 2

கிளி ஜோஸ்யன் கிருஷ்ணமூர்த்தி
ஐம்பது ரூபாய் அபராதம் செலுத்தினான்.

"கிளியின் கூண்டு ரொம்பச் சிறுசு.
இறக்கையைச் சரியாய் விரிக்க வராது.
காற்றோட்டம் சரியாய் இல்லாததாலே
மூச்சுத் திணறிச் சாகக் கூடும்"

கூண்டும் போய்....
கிளியும் போய்....
பிளாட் பாரத்தில்
கிருஷ்ணமூர்த்தி
ஒட்டிய வயிற்றோடு
குப்புறக் கிடக்கிறான்.

# மேக்கப் செய்கிறீர்களா?

## சில எச்சரிக்கை டிப்ஸ்

* மேக்கப் சாதனங்களை உபயோகிப்பதில் மிகுந்த பாதுகாப்பு அவசியம். ஜாக்கிரதையாக இருக்காத பட்சத்தில் அவை ஏற்படுத்தும் பின் விளைவுகள் பல:

எந்த மேக்கப் சாதனத்தையும் முதலில் சிறிய அளவில் உபயோகப்படுத்திப் பாருங்கள். அலர்ஜி இருப்பது தெரிந்தால் உடனடியாக அதை அப்புறப்படுத்தி விடுங்கள்.

* உபயோகத்தில் இல்லாத போது மேக்கப் சாதனங்களை நன்றாக மூடி வையுங்கள். அவற்றில் குறிப்பிட்டிருந்தால், அதன்படி ஃப்ரிட்ஜிலும் வைக்கலாம்.
* சூரிய வெளிச்சமோ, சூடோ மேக்கப் சாதனங்களின் மேல் படும்படி வைத்தால் அவை சீக்கிரமே கெட்டு விடும்.
* மேக்கப் சாதனங்களில் குறிப்பிட்டுள்ளபடியான அளவையே பயன்படுத்துங்கள்.
* குழந்தைகளுக்கு மேக்கப் சாதனங்களை உபயோகிக்கவே கூடாது.
* கிரீம், லோஷன் போன்றவை இறுகிவிட்டால் நீங்களாக அவற்றில் தண்ணீர் மாதிரி எந்தப் பொருளையும் கலக்கக் கூடாது.
* மேக்கப் சாதனங்களின் வாசனையோ, நிறமோ மங்கி விட்டது தெரிந்தால் அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தி விட வேண்டும்.
* மேக்கப் சாதனங்களை எக்காரணம் கொண்டும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளாதீர்கள்.
* புகை பிடிக்கிற நபர்களுக்கு அருகிலோ, சமையலறையிலோ இருந்து கொண்டு ஹேர் ஸ்பிரே போன்றவற்றை உபயோகிக்காதீர்கள். தீப்பிடித்துக் கொள்ளும் அபாயம் அதிகம்.
* எச்சில் தொட்டு மேக்கப் பிரஷ்களைப் பயன்படுத்துவது ஆபத்தானது.
* செயற்கைக் கண் இமைகள், நகங்கள் போன்றவை நடிகைகள் உபயோகிப்பவை. அவையெல்லாம் சாதாரணப் பெண்களுக்கு அனாவசியமானவை. அழகுக்காக இவற்றை உபயோகிக்கும் பட்சத்தில் நகங்களிலும், கண்களிலும் தொற்று ஏற்படவும், அரிப்பு, எரிச்சல் போன்றவை ஏற்படவும் வாய்ப்புகள் மிக அதிகம்.
* ஆறு மாதங்களுக்கு மேல் எந்த மேக்கப் சாதனத்தையும் வைத்து உபயோகிப்பது தவறு.
* மேக்கப் சாதனத்தை வாங்கியதும் உடனே அதில் கலக்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலைப் பாருங்கள். ஏதோ ஒன்று உங்களுக்கு ஒத்துக் கொள்ளாமலிருக்கலாம். அப்படியிருப்பின் அதைத் தவிர்த்து வேறு ஒன்றை வாங்குவது நல்லது.
* சருமத்தின் தன்மையோ, கூந்தலின் தன்மையோ தெரியாமல் எந்த மேக்கப் ஐட்டத்தையும் நீங்களாகவே உபயோகிக்காதீர்கள். நல்ல அழகுக் கலை நிபுணரிடம் ஆலோசனை பெற்று, அதற்கேற்ப தரமான பொருட்களை உபயோகியுங்கள்.
* தூங்கச் செல்லும் முன் மேக்கப்பை அகற்றியே ஆக வேண்டும். மேக்கப்புடன் தூங்குவது சருமத் துவாரங்களை அடைத்துக் கொண்டு, சருமம் சுவாசிக்க முடியாமல் செய்து விடும். அதன் விளைவாக சருமத்தில் பருக்கள், கட்டிகள், கரும்புள்ளிகள் போன்றவை தோன்றலாம்.




# எதற்கெல்லாம் பயப்படுவது?



கத்தரிக்கோலையும், பாக்ஸ் கட்டரையும் விமானத்தில் எடுத்துச் செல்ல முயன்ற பல்கேரிய நாட்டைச் சேர்ந்த மாணவர் நிகோலே (21) அமெரிக்காவில் அட்லாண்டிக் நகரில் கைதுசெய்யப்பட்டார். தற்காலிக வேலைக்காக அமெரிக்கா சென்ற இவர், அட்லாண்டிக்கில் விமானத்தில் ஏறும் போது அவரது பையைப் பொலிஸார் சோதனையிட்டனர். கத்தரிக்கோலை சோப்பில் மறைத்து வைத்திருந்தார். லோஷன் பாட்டிலில், பாக்ஸ் கட்டரை மறைத்து வைத்திருந்தார். பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பல் புரட்சி



விழுந்த பல்லை மீண்டும் முளைக்க வைக்கும் ஆராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

சிறுவர்களுக்குப் பல் விழுந்தால் மீண்டும் முளைத்து விடும். ஆனால் பெரியவர்களுக்குப் பல் விழுந்தால் முளைக்காது. செயற்கைப் பல்தான் கட்ட வேண்டும். வசதியானவர்கள் தங்கப் பல் கட்டிக் கொள்கின்றனர். மற்றவர்கள் திண்டாடுகின்றனர். விழுந்த பல்லை மீண்டும் முளைக்க வைக்கும் ஆராய்ச்சியில் அமெரிக்க டாக்டர்கள் ஈடுபட்டுள்ளனர். 6 மாதப் பன்றியின் பல் திசுவை எடுத்து எலிக்கு வைத்து வளர்க்கும் முயற்சியில் இறங்கி இருக்கின்றனர். 30 வாரத்துக்குப் பிறகு பல் வளரத் தொடங்கியது. இது நம்பிக்கை அளித்துள்ளது. அதுபோல் ஒருவரின் பல் திசுவை எடுத்து மீண்டும் அவருக்குப் பல் வளரச் செய்யலாம் என்று டாக்டர்கள் கூறினர். இது ஒருவகைப் பல் புரட்சி என்றும் கூறுகின்றனர்.

# வாய்ப்புண் கவனம்!

ஒரு நாடகத்துக்கு முன்னால் ஒத்திகை பார்த்துக் கொள்வதில்லையா? அதைப்போலத்தான் நிரந்தரமான பற்களுக்கு முன்னால் இயற்கை நமக்குப் பால்பற்களைக் கொடுத்திருக்கிறது. பிறந்த குழந்தைக்குப் பற்களைப் பேணிப் பாதுகாக்கத் தெரியாது என்பதால்தான் குழந்தைப் பருவத்தில் பால்பற்கள் முளைக்கின்றன. ஆனால், நிரந்தரமான பற்கள் வந்தபிறகு ஆரம்பத்திலிருந்தே பற்களைப் பாதுகாப்பது பற்றி குழந்தைகளுக்குப் பெற்றோர் கற்றுத் தர வேண்டும்.




குழந்தைகளுக்கு மிருதுவான பிரஷ் வாங்கிக் கொடுத்து, ஈறிலிருந்து பற்களை நோக்கி மேலிருந்து கீழாக பல்துலக்கச் சொல்லித் தரவேண்டும். மேல்வரிசைப் பற்கள், கீழ்வரிசைப் பற்கள், உள்பக்கங்கள் எனப் பற்களைப் பகுதி பகுதியாகப் பிரித்துத் துலக்கும்படி கற்றுத் தர வேண்டும்.

அதே போல சாப்பாட்டுக்கு முன் ஒருமுறையும் சாப்பிட்ட பிறகு ஒரு முறையுமாகக் குழந்தைகள் வாய் கொப்பளிக்க வேண்டும். வாயைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக நாக்கை வழிப்பது தவறு. ஸ்டீல் அல்லது பிளாஸ்டிக் நாக்கு வடிகளால் வழிக்கும் போது நாக்கிலுள்ள சுவை அரும்புகளுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது.

பற்கள் பளபளவென்று இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவே கூடாது. நல்ல ஆரோக்கியமான பற்கள் வெண்மையாக இருக்காது. தந்தம் போல் வெளிர் மஞ்சள் நிறத்தில்தான் இருக்கும். குழந்தைகள் பற்களை ஓரளவு சுத்தமாக வைத்திருந்தாலும் அதையும் மீறிச் சில சமயம் பூச்சி விழ ஆரம்பிக்கலாம். அதன் அறிகுறியாகப் பல்லில் கறுப்புப் படரும். நாளானால் சொத்தை ஏற்பட்டு, குழி விழும். இங்கு கிருமிகள் தங்கி ஈறுவரை பாதிப்பை ஏற்படுத்தும். பல்லை ஒழுங்காகப் பராமரிக்காவிட்டால் பயோரியா என்கிற பல்நோய் வரும். பல்லில் குழி விழுந்தால் உடனே பல் டாக்டரிடம் காட்டி அடைத்து விட வேண்டும்.


பல் சொத்தை விழ ஆரம்பித்தவுடன் கிரியோ சோட் 300 என்ற மருந்தை எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாளைக்கு ஒருவேளை அல்லது இரு வேளைகள் மூன்று மாத்திரைகள் வீதம் உட்கொள்ள வேண்டும். பல் சொத்தை விழுந்தால் ஈறு நைந்து இரத்தம் வடியும். நாக்கில் கூட வீக்கம் ஏற்படும். நிறைய எச்சில் ஊறும். இப்படிப்பட்ட குழந்தைகள் தூங்கும்போது வாயில் இருந்து எச்சில் ஒழுகவும் வாய்ப்பு உண்டு.

சில குழந்தைகளுக்குப் பல்வரிசை சீராக அமையாமல் சீசா மாதிரி ஏறி இறங்கி இருக்கும். பற்களின் நுனிப்பகுதி கூட ரம்பம் மாறி கூராக இருக்கும். அந்தக் குழந்தைகளுக்கு மெர்க்.சால்.30 என்ற மருந்தைக் கொடுக்கலாம். ஒரு நாளைக்கு ஒருவேளை அல்லது இரு வேளைகள் மூன்று மாத்திரைகள் வீதம் சாப்பிடுவது நல்ல பலனைத் தரும். இதையும் மீறிப் பிரச்சனை ஏற்பட்டால் பல் டாக்டரிடம் போய் "கிளிப்" போட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

செல்வாஸின்
சல்வார் பரிசுப் போட்டி
நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்
SELVAS
No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328
மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.
செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Am
பெயர்:..............................
முகவரி:..............................
..............................
தொழில்:..............................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை
பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.
கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-10-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
லுணுகலை வாசகிக்கு அதிஷ்டம்!
இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்
ஆர். ராகினி
75, பிரதான வீதி, லுணுகலை.
பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





சொன்ன மொழிதவறும் மன்னவ னுக்கே- எங்கும்
தோழமை யில்லையடி தங்கமே தங்கம்;
என்ன பிழைகளிங்கு கண்டிருக்கிறான்? - அவை
யாவும் தெளிவபெறக் கேட்டு விடடீ!

சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# மிக மோசமான மனிதர்கள்!

ஓநாய் ஒன்று காட்டில் இருந்தது. அதற்கு வெகு நாட்களாக உணவு கிடைக்கவில்லை. அதுவும் அலையாத இடமில்லை. அதனுடைய துரதிர்ஷ்டமோ என்னவோ ஒரு சிறு கோழிக் குஞ்சு கூட அதன் கண்களுக்கு அகப்படவில்லை.

எத்தனை நாள்தான் அது பசியைத் தாங்கிக் கொண்டிருக்கும்?

"இனிக் காட்டில் இருந்தால் செத்தே போய்விடுவோம்" என்று நினைத்த ஓநாய்,"'கிராமத்துப் பக்கம் சென்றால் ஏதாவது உணவு கிடைக்கும்" என்று நினைத்துக் காட்டை விட்டுக் கிளம்பியது.

மிகவும் சோர்வுடன் நடந்து, காட்டை ஒட்டியிருந்த ஒரு கிராமத்தை அடைந்தது.

அது மாலை வேளை-


கிராமத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருந்தது.

அதனால் இருட்டும் வரை பதுங்கி இருக்கலாம் என்று முடிவு செய்து ஒரு புதரின் மறைவில் பதுங்கிக் கொண்டது.

இருட்டும் வந்தது.

ஓநாய் புதரை விட்டு வெளியே கிராமத்துக்குள் புகுந்தது.

தெருவே வெறிச்சோடிக் கிடந்தது. மாலைப் பொழுது சாய்ந்த உடனேயே இரவு உணவை முடித்துக் கொண்டு, வீட்டுக்குள் புகுந்து கொண்டார்கள் மக்கள்.



ஏதாவது உயிரினம் தென்படாதா என்று ஏங்கியவாறு, தெருவில் சுற்றிச் சுற்றி வந்தது ஓநாய்.

பாவம்! அதற்கு எதுவுமே கிடைக்கவில்லை.

இன்னும் சிறிது நேரத்தில் அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

அது மிகவும் சோர்ந்து போன நிலையில் ஒரு தெருவழியாகச் சென்று கொண்டிருந்த போது-

ஒரு வீட்டுக்குள் சிறு குழந்தை ஒன்று அழும் சத்தம் கேட்டது.

ஓநாய் சட்டென்று அந்த வீட்டின் ஓரம் ஒதுங்கி நின்றது.

அந்த வீட்டின் உள்ளே இருந்து "டேய்! இதோ பார்! இன்னும் நீ அழுது கொண்டிருந்தால், உன்னை ஓநாயிடம் தூக்கிப் போட்டு விடுவேன்!" என்று ஒரு பெண்ணின் அதட்டல் குரல் கேட்டது.

இதைக் கேட்டதும் 'சட்'டென்று தலையை உயர்த்திக் காதுகள் இரண்டையும் விடைத்தது ஓநாய்.

அந்தப் பெண்ணின் பேச்சு, அதன் செவிகளில் இன்பத் தேனாகப் பாய்ந்திருந்தது.

"ஆஹா! சிறு குழந்தை! அதன் மாமிசம் மிகுந்த சுவையாக இருக்கும் என்று என் தாத்தா சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதுவரை மனித மாமிசத்தைச் சுவைக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததில்லை. என்ன அதிர்ஷ்டமோ, அந்தச் சந்தர்ப்பம் இன்று கிடைத்திருக்கிறது. ஒரு பிடி பிடித்துவிட வேண்டும்!" என்று நினைத்தது.

அதைத் தொடர்ந்து, குழந்தை வெளியே எப்போது வந்து விழும் என்று பார்க்கத் தொடங்கியது.

வீட்டினுள்ளே குழந்தையின் அழுகை குறைந்திருந்தது.

"இன்னும் அழுகையை நிறுத்தவில்லையா! இதோ வருகிறேன். ஓநாயிடம் தூக்கிக் கொடுத்தால்தான் உனக்குப் புத்தி வரும்!" என்று இரைந்தாள் அந்தப் பெண்.

ஓநாய்க்கு ஆவல் அதிகமாயிற்று.

"பேசிக்கொண்டே இருக்கிறாளே! விருட்டென்று தூக்கிப் போட வேண்டியதுதானே" என்று அந்தப் பெண்ணின் மேல் ஓநாய்க்குக் கோபமும் உண்டாயிற்று.

ஆனாலும் அடக்கிக் கொண்டு காத்திருந்தது.

குழந்தை வெளியே வந்து விழுவதைப் போல் தெரியவில்லை.

ஓநாய்க்கு எரிச்சல் உண்டாயிற்று. அது அந்த வீட்டை வெறித்துப் பார்த்தது. அப்போது-

"அம்மா! என்னை ஓநாயிடம் தூக்கிக் கொடுத்து விடுவாயா?" என்று குழந்தை கேட்டது.

அப்போது அதன் குரலில் அழுகை இல்லை.

"இதோ பாரடா கண்ணா! உன் அழுகையை நிறுத்தத்தான் அப்படிச் சொன்னேன். யாராவது தான் பெற்ற குழந்தையைத் தூக்கி ஓநாயிடம் கொடுப்பார்களா? சும்மாதான் சொன்னேன்! இனி மேல் நீ அழக்கூடாது!" என்றாள் அந்தப் பெண்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஓநாய்க்கு ஆத்திரம் எகிறியது.

"ச்சே! இந்த மனிதர்களே இப்படித்தான். சொல்வது ஒன்று; செய்வது ஒன்று; சொன்னபடி செய்ய வேண்டியதுதானே...! நான் எவ்வளவு ஆசை... ஆசையா... இருந்தேன். எல்லாம் போச்சு. இந்த மனிதர்கள் ரொம்ப மோசம்" என்று நொந்தபடி மிகவும் சோர்வுடன் தள்ளாடித் தள்ளாடிச் சென்றது. ■

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **12.10.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **465**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 463

பரிசுக்குரியவர்:
**எம்.அர்ஜுன்,**
க/கித்துல் முல்லை தமிழ் வித்தியாலயம், கலகா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **யோ.திவாகர்,** ந/மு/அ/வித்தியாலயம், நாத்தாண்டியா. | **எஸ்.கவிசாலினி,** இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. |
| **க.பிரசாந்த்,** ரகுமானா பாத், நீர்கொழும்பு. | **ஜி. உமாபிரியா,** கொ.புனித அ.த.ம.வி. கொழும்பு-14. |
| **லோ. அருண் பிரசாந்த்,** ஹவ்லொக் றோட், கொழும்பு-6. | **சோபினி,** சைவ மங்கையர் கழகம், கொழும்பு-6. |
| **ஜே. சரவணராஜ சர்மா,** 28/41, கன்னார வீதி,கொழும்பு-13. | **கஜேந்தன்,** பப்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-4. |
| **பாதிமா ருமானா,** 55/3 எட்டிநிவஸ் றோட், நீர்கொழும்பு. | **சோ.அ.றொமிசியன்,** மன்/ நானாட்டான் ம.வி. நானாட்டான். |

## விடுகதைகளும் விடைகளும்

1. வரும்போது வெண்சிவப்பு வளர வளர தகதகப்பு. போகும்போது பெரும் சிவப்பு அது என்ன?
2. நோய் பரப்புவான் நோயாளி அல்ல, காதருகே பாட்டுப் பாடுவான் கையை எடுத்தால் பறந்து ஓடுவான்/ அவன் யார்?
3. பறக்காத பூப்பந்து பகட்டான சிறு பந்து வாயில் போட்டால் இனிக்கும் தேன் மருந்து அது என்ன?
4. நான் இழுக்க நீ இழுக்க நாட்டுச் சப்பரம் கட்டி இழுக்க நாய் போடும் சத்தம்தான் என்ன அது என்ன?
5. தரையில் வளராத மரம் கிளையும் இல்லாத கறுப்பு மரம் அது என்ன?
6. வலை விரித்திடுவான் வேடனுமல்ல, வகை வகையாய் உயிர் குடிப்பான் எமனும் அல்ல அவன் யார்?
7. அட்டைக்கு ஆயிரம் கண்கள்; அவன் உள்ளே புகலாம் ஆயிரம் பேர் அது என்ன?
8. அடர்ந்த காட்டின் நடுவே அழகான ஒற்றையடிப் பாதை நடப்பார்தான் யாருமில்லை! அது என்ன?

### விடைகள்.

1. சூரியன் 2. நுளம்பு
3. லட்டு 4. தயிர் கடைதல்
5. தலைமுடி 6. சிலந்தி
7. சல்லடை 8. தலை வகிடு

# பயங்கர விலங்குகள்

லண்டனிலுள்ள இயற்கை வரலாற்று தொல்பொருட் காட்சிச்சாலையில் பழங்காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பல பயங்கர விலங்குகளின் உருவங்களும் வைக்கப்பட்டு உள்ளன. அவற்றில் சில:

### பனி மனிதன்



குரங்கு போன்ற உருவத்தில் இராட்சத உருவில் உள்ள பனி மனிதன் இமயமலைப் பகுதியில் இருப்பதாகக் கூறப்படுகிறது. பனி மனிதனின் காலடித் தடம் கிடைத்திருப்பதாகவும் கூறுகிறார்கள். உண்மையில் பனி மனிதனின் தடம் அல்ல அவை. லாங்குர் குரங்குகளின் காலடித் தடம்தான் என்று விலங்குகள் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### யூனிகார்ன்



இதைக் கொம்புக் குதிரை என்பார்கள். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்படியொரு விலங்கு வாழ்ந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் காண்டாமிருகத்தின் கொம்பு ஒன்று, ஒரு வெள்ளைக் குதிரை அருகே கிடப்பதைக் கண்டவர்கள், தலையில் கொம்பு முளைத்த குதிரை இருக்கிறது எனவும், அந்தக் கொம்பு விஷம் கொண்டது என்றும் கதை கட்டி விட்டுள்ளனர்.





இதன் நாக்கு கொக்கிபோல உள்ளது குறிப்பிடத் தக்கது. இந்த விலங்கு இன்றும் உள்ளது.

### கொமோடோ டிராகன்

தெற்காசியத் தீவுகளில் காணப்படும் பயங்கர உருவம் கொண்ட இந்த டிராகன் 15 அடி நீளம் வரை வளரும். பல்லி இனத்தில் மிக நீளமானது இந்தப் பயங்கர டிராகன்.

### லோச்னெஸ் மான்ஸ்டெர்



டினோசர் போன்ற உருவத்தில் தற்போதும் வாழ்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்படும் இந்த விலங்கு 6 1/2 கோடி ஆண்டுகளுக்கு முன்பே மறைந்து போய் விட்டதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 6ஆம் நூற்றாண்டில் இந்த விலங்கைப் பார்த்ததாகப் பலர் கூறினாலும் இதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை.

## இந்த வாரப் புதிர்




வெற்று வட்டங்களுக்குள் என்னென்ன எண்களைப் போட்டால் நான்கு நேர்வரிசை எண்களின் கூட்டுத்தொகையும் ஒன்றாக இருக்கும்? கூட்டுத் தொகை எவ்வளவு?

## அறிவுத் தேடல்


சென்றவாரப் புதிரின் விடை:




P=9, Q=12, R=10, S=25 T=110

# திரும்பிப் பார்த்தபோது

அந்த அறை அவ்வளவு அலங்கோலமாக இருந்தது. கட்டில் தலையணையிலிருந்து கால்மாட்டு வரை பரவிக்கிடந்த உடைகள். அப்படியே போட்ட போட்ட இடங்களில் புத்தகங்கள். கோப்பிப்பேணி, தேநீர் ஜக் என்று நிறைந்து போன மேசை. பார்க்கப் பார்க்க ஆத்திரமாக இருந்தது. கிழமையில் கிடைப்பதோ ஒரு நாள் விடுமுறை. அந்த ஒரு நாளில் கூட ஏதாவதொரு வேலை முளைத்துவிடும். சலித்துக்கொண்டவனாய் உடைகளை ஒவ்வொன்றாக ஒதுக்க ஆரம்பித்தேன். பாத்றூமில் சோப்போட்டு ஊற வைத்த உடுப்பு நினைவில் உறைத்தது. எல்லாவற்றையும் நினைத்தால் ஒன்றுமே முடியாது. ஒவ்வொன்றாக முன்னேற வேண்டியதுதான். மேசையிலிருந்த புத்தகங்களை ஷெல்பில் சாத்த ஆரம்பித்தேன். இப்படியான சின்னச்சின்ன சந்தர்ப்பங்கள் கூட பெண் துணையை உணர்த்தி நிற்கின்றன. புத்தக றாக்கையில் தூசி அப்பியிருந்தது. ஒவ்வொரு புத்தகப் பொட்டலமாக எடுத்துத் தூசி துடைக்க ஆரம்பிக்க, ஒரு பொட்டலம் கை தவறி விழ, சலித்துக்கொண்டவனாய் அவற்றை வெறித்தேன். எல்லாமே டயறிகள். 1988, 89, 90 என்ற ஒழுங்கில் கட்டப்பட்டிருந்தவை சிதறிக் கிடந்தன. மேலே கிடந்த 88 ஆம் ஆண்டு டயறியை எடுத்துக் கொண்டேன்.



அந்த ஆண்டு என்னால் மறக்க முடியாத ஆண்டு. என் வாழ்க்கையின் மைல் கல்களில் ஒன்று அது. பாடசாலை என்ற சற்றுச் சிறிய வட்டத்திலிருந்து பல்கலைக் கழகம் என்ற பரந்த வட்டத்தை எனக்கு அறிமுகம் செய்த ஆண்டு. அந்தக் காலப்பகுதியில் நிகழ்ந்த சில சுவாரசியமான சம்பவங்களை நான் குறித்து வைத்திருந்தேன். எல்லாமே மறக்கக் கூடாது என்பத்றகாகப் பதிவு செய்யப்பட்டவை. ஆனால் அவற்றையெல்லாம் மீண்டும் பார்க்கும்போது ஒரு புதிய விஷயம் போன்ற உணர்வு மேலிட்டது. பக்கங்களைப் புரட்டினேன்.

**ஜனவரி 1988 08 திங்கள்**

பல்கலைக் கழகத்தில் என் முதலாவது நாள். நான் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்தேன். நெஞ்சு நிறைய எதிர்பார்ப்புகள். ஒரு மூலையில் சிறிது திருப்தியும் இருக்கத்தான் செய்தது. எல்லாவற்றையும் சாதித்துவிட்டது போன்ற திருப்தி அது. புதிய முகங்கள், புதிய சூழல் எல்லாவற்றுக்கும் மேலாகப் பகிடிவதையென்று ஒரு புதிய வதை. அதன் பெயரில் கேள்விப்பட்ட அக்கிரமங்கள் பல. அவற்றை நினைத்துப் பார்த்ததால் ஏற்பட்ட பதற்றத்துடன் நுளைந்தேன். பல்வேறு மாவட்டங்களிலிருந்து பல்வேறுபட்ட நண்பர்கள் ஒரே நாளில் கிடைத்தார்கள்.

"டேய் உங்கட 'பெச்'சிலதான் நிறைய குருவிகள் வந்திருக்குடா" என்று ஒரு சீனியரின் ஆர்வம் எனக்கு ஞாபகம் வருகிறது. அந்த இடத்தில் அவற்றையெல்லாம் இரசிக்க எங்களுக்கு அவகாசம் இல்லை. பெண்கள் பக்கம் கூட பார்க்காமல் இருந்த நாங்கள் உண்மையில் விசுவாமித்திரர் வேடம் தான் இட்டிருந்தோம். ஆனாலும் அந்தக் கண்கள் மாத்திரம் என்னை அடிக்கடி சந்தித்துக்கொண்டன. சந்திக்கவும் தூண்டின.

பக்கங்களை மேலும் புரட்டினேன்.

**பெப்ரவரி 1988 14 புதன்**

வருடப்பிறப்பு, கிறிஸ்மஸ் இவற்றுக்குள்ள வரவேற்பு இந்த நாளுக்கும் உண்டு. பொதுவாக எங்களுக்கும் அந்தநாள் ஒரே குஷிதான். காரணம் பல்கலைக் கழகம் நுளைந்ததும் வந்த முதலாவது காதலர் தினம் அது. ராகிங் காலப் பகுதியில் வந்ததால் சந்தோஷத்துக்குள் சின்னத் தயக்கம் இருக்கத்தான் செய்தது. நடக்கப் போகின்றவற்றின் சுவாரசியத்தை அசைபோட்டவனாய் நான் வளாகத்துள் நுளைந்தேன். என் சகபாடிகள் ஒருவரும் வந்திருக்கவில்லை. "என்ன இண்டைக்கு கொண்டாட்டமோ வேளைக்கு வந்தாச்சு" என்று ஒரு சீனியர் கை கொடுத்தது ஒரு பக்கம் ஏதோ விசேஷம் இருப்பதுபோல் தோன்றினாலும் கேலித்தனம் வார்த்தைகளில் இழையோடுவதை அவதானித்தேன். ஆனால் அதனைத் தொடர்ந்து அந்தக் கதையே எடுக்கப்படாதது எம்மில் சிலருக்கு ஏமாறறம்தான். காலையுணவு முடிந் தது. தொடர்ந்து லெக்சஸ், மதிய உணவு; அப்போதும் எந்தக் கதையு மில்லை. ஏமாற்றம்தான். ஆனால் மாலை லெக்சஸ் முடிந்து கிளம்பிய போதுதான் மாட்டிக்கொண்டேன். இல்லையில்லை சந்தர்ப்பம் எனக்கான கதவைத் திறந்து கொண்டது. "டேய், இத கொண்டுபோய்க் கொடு"-ஒரு சீனியர் ரோஜா இல்லாத காம்பினை மட்டும் தந்தான். என்னை அவர்கள் தேர்ந்தெடுத்த காரணம் நான் மட்டும்தான் சிவப்பு நிறத்தில் உடை அணிந்திருந்தேன்.

முதலில் சிறிது தயக்கம் காட்டினாலும் அந்தக் கண்களைக் கண்டதும் என்னையறியாமலே எனக்குள் ஒரு சக்தி முன்னேறச் சொன்னது. அவ்வாறே செய்தேன். என் இதயம் படபடப்பதை உணர்ந்தேன். அதன் வேகம் அதிகரிக்க நடந்தேன். கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என நினைத்தவனாய் அவள் அருகில் அமர்ந்தேன். கொடுத்துவிட்டவர்கள் வேடிக்கை பார்ப்பதை உணர்ந்தவனாய் அவள் பெயர் சொல்லி அழைத்தேன். "சந்தியா" (எங்கள் பச்சில் உள்ள எல்லோர் பெயரும் தெரிந்திருக்க வேண்டும். இது நம் அண்ணர்களின் உத்தரவு.) மெதுவாக அவள் கண்கள் என் கண்களைச் சந்தித்தன. இதெல்லாம் சீனியர்களின் ஏவல்தான் என்பதை அவள் புரிந்திருப்பாள். வைத்தகண் வாங்காமல் அவள் கண்களையே பார்த்தபடி, கையிலிருந்த வெற்றுக் காம்பைத் தூக்கிப் போட்டுவிட்டு பாதி மலர்ந்தும் பாதி மலராதுமான ஒரு இரத்த நிற ரோஜாவை எடுத்து நீட்டினேன். வாங்கிக்கொண்டாள்....

"டிங் டிங்" இப்போது அழைப்புமணி ஊடறுத்தது. வாசலுக்கு விரைந்தேன். "சிவானந்தம் மாஸ்ரர் வீடு..." "அடுத்த வீடு" என்று விட்டு கதவைச் சாத்தினேன். ஒரிரு பக்கங்களைப் புரட்டியதிலேயே அந்த பல்கலைக் கழக வாழ்க்கைக்குள் வளாகத்துக்குள் நான் மீண்டது போன்ற உணர்வு. முக்கியமாக அந்த பச்ட்றிப் Batch trip மிகவும் சுவாரசிய மானது.

**மார்ச் 1988 15 செவ்வாய்**

ஆறுமணிக்கெல்லாம் அங்கு நாங்கள் ஆஜர் ஆகிவிட்டோம். ஆறரை மணிக்குத்தான் பஸ் புறப்படும். அந்த அரை வெளிச்சத்தில், ஒவ்வொருவராக வர விசில் அடித்து கைகொட்டி வரவேற்றுக் கொண்டிருந்தது ஒரு கூட்டம். றபான், பாட்டு என்று பள்ளியெழுச்சி ஆரம்பித்துவிட்டது இன்னொரு கூட்டம். வனஜா, கிரிஜா, குமுதா, காயத்ரி என்று மகளிர் அணி வந்திறங்கியது. எல்லோரும் வந்தாயிற்று, சந்தியாவைத் தவிர. எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. வாயிலைப் பார்ப்பதும், பைலா கோஷ்டியோட சேர்வதும், எழுந்து வந்து கரகோஷிக்கும் அணியோடு நிற்பதும், மீண்டும் வாயிலை வெறிப்பதும் ஒரே திண்டாட்டம் தான். ஆனாலும் அவள் அதிக நேரம் என்னை ஏமாற்றவில்லை. வந்தாள். கை தந்து வாழ்த்தினாள். முதன் முறையான அந்த ஸ்பரிசம் என்னை ஏதோ செய்தது. பஸ் புறப்பட்டபோது கானாக்கள் காதுகளைக் .குளிர்விக்க ஆரம்பித்திருந்தன. ஏனோ என் பார்வை அவள் பக்கம் திரும்பிக்கொண்டிருந்தது. அவளும் சேர்ந்து பாடினாள். "சங்கீதம் படிச்சதாக்கும்" என்றதற்கு "இல்லை கேள்வி ஞானம் தான்" என்றாள். எந்தக் கேள்விக்கும் பட்டென்று ஒரு பதில். முதன்முறையாக அவளைப் பார்த்ததற்கும் இன்று பார்ப்பதற்கும் "அவளா இவள்" என்ற கேள்வி தோன்றாமலில்லை காரணம் அவ்வளவு வாயாடி. ஆனாலும் அந்த வாயாடித்தனம்தான் என் ஆர்வத்தை அதிகரித்தது.

சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சீண்டினேன். இடையே வடை முறுக்கு என்று பலகாரங்கள் பரிமாறப்பட, "நல்லாயிருக்கே, யார் சந்தியா செய்ததா" என்று சொல்லி அவ்ள் முக பிரதிபலிப்பைக்கூட இரசித்தேன். வந்து பக்கத்தில் அமர்ந்தவள் கதைத்தாள். இது எனக்குப் புதிது. நானும் கதைக்க ஆரம்பித்தேன். அவளுடைய இரசனைகளைக் கேட்டேன். பிடித்த நிறம். பிடித்த பொழுதுபோக்கு எல்லாம் சொன்னாள். என்னைப் பற்றிக் கேட்டாள். அவளுக்கும் என்னைப் போலவே கவிதைகளில் ஆர்வம் அதிகம். காதலைப் பற்றிப் பேசினோம். காதல் என்றாலே உப்புச் சப்பில்லாத விஷயம் என்றாள். அவள் உதடு விரித்துப் பேசும் அழகை இரசித்தேன். அடிக்கடி நெற்றியில் புரண்ட கூந்தல் முடியை, தலையில் போட்டிருந்த பாத்திகளுக்கு மேலாக மேவி விடுவதை இரசித்தேன். அவள் உபயோகித்த வார்த்தைகள், ஒன்றைச் சொல்லும் போது ஏற்றி இறக்கிச் சொல்கின்ற தொனி என்ற எல்லாமே அழகு. என் நண்பன் "ஒரே சந்தியா புராணமாக் கிடக்கு" என்று சொன்னபோது அவள் வெட்கித் தலை குனிந்தது, இதை எழுதும்போது கூடக் கண்முன் வருகிறது.

மணிக்கூடு பத்து மணியாகிவிட்டதை நினைவூட்டியது. டயறிகளை ஷெல்ஃபில் சாத்தினேன். தோய்த்த உடுப்புகளோடு மாடிக்குப் போனேன். ஒருவனுடைய வாழ்க்கையில் பல்கலைக் கழக வாழ்க்கை முக்கியமானது. அதிலிருந்து நான் கற்றுக் கொண்டவை ஏராளம்.

ஏராளமான அனுபவங்களைக் கொடுத்த அந்த வாழ்க்கை எனக்கென்று சில உறவுகளையும் அமைத்துத் தந்தது. சந்தியாவோடு நான் கொண்ட உறவு கூட இந்தக் காலப் பகுதியில்தான் நட்பென்ற புதிய பரிமாணத்தைப் பெற்றது. பாடசாலை வாழ்க்கையைத் தொடர்ந்து நான் பல்கலைக் கழகத்துள் நுழைந்த போது, சந்தியாவோடான. ஆரம்பகால சந்திப்புகளின் டயறி குறிப்புகளைப் பார்க்கச் சிரிப்புத்தான் வருகிறது; பிழையாகத் தோன்றுகிறது. ஒரு வயதில் செய்ததை இன்னொரு வயதிலிருந்து பார்க்கும்போது சில விடயங்கள் பிழையாகத் தோன்றும். தோன்ற வேண்டும். இல்லாவிட்டால் வயது என்பதற்கே அர்த்தமில்லாமல் போய்விடும்!

நேற்றுக்கூட சந்தியாவைக் கோயிலில் சந்தித்தேன், சொந்த மச்சானைத் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகள் கூட உண்டு அவளுக்கு. கேற் பூட்டும் சத்தம் "டாடி" என்று என் பையன் ஓடி வந்து கழுத்தைக் கட்டிப் பிடித்தான். மூச்சுவாங்க மேலே ஏறி வந்து கொண்டிருந்தாள் கோயிலுக்குப் போன என் மனைவி சாந்தி. ◘

**க.ராகுலன்–வெள்ளவத்தை**

# சந்தேகம்

என்ன செய்வதென்று. தெரியாமல் தவித்துப் போனான் வினித். ஆபிஸ் விஷயங்களை மறைக்காமல் மறக்காமல் ஞாபகம் வைத்து மனைவி ஆஷாவிடம் சொல்லிவிடுவான். ஆனால், அதில் எவ்வித தப்பான அர்த்தமும் இருக்காது.

இந்த வெள்ளை உள்ளத்தைப் புரிந்து கொள்ளாத ஆஷா சந்தேகத்தில் மூழ்கிப் போனாள்.

" அனுஷாவுக்குக் கன்னத்தில் குழி விழுறத எப்ப பார்த்தீங்க? அடிக்கடி தனிமையில் சிரிச்சுப் பேசுறப்பவா?"

சிரிக்கும் போது அனுஷாவுக்கு நடிகை விந்தியாவைப் போல் கன்னத்தில் குழி விழும் என்று சொன்னதற்காகவா இந்தப் பேச்சு. அரண்டு போனான் வினித். படுக்கையில் முதுகைக் காட்டி "ஸ்ரைக்" செய்தாள். கைபட்ட போது உதறிவிட்டாள்.

"வரவர என்னை நீங்க மறக்க ஆரம்பிச்சுட்டீங்க, உங்க மனசு ஆபீஸ் பொம்பளைங்களையே சுத்தி வருது!" " ஒரு ஆம்பளைக்கிட்ட பேசுற மாதிரித்தான் அவங்ககிட்டேயும் பேசுறன். ஆபிஸில இதெல்லாம் சகஜம் ஆஷா". " ஆம்பளைங்க கிட்ட பேசுறத சொல்லமாட்டேன் நீங்களே...? பொம்பளைங்க விஷயம்னா முழியைப் பிதுக்கிக்கிட்டு, எச்சில் ஒழுக சொல்றீங்க."

வினித்திற்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. நாளையில் இருந்து ஆம்பளைங்க விஷயத்தையும் மறக்காமல் ஆஷாவிடம் சொல்லிவிட வேண்டும். என்ன... கொஞ்சம் "போர்" அடிக்கும்.

"என்ன யோசனை? கொசு கடிச்சா கோகிலா மூஞ்சி எப்படி சிவப்பு சிவப்பா தடிச்சுப் போகுதுன்னு "ரிசர்ச்" பண்றீங்களா?"

காலையில ஆபிஸ் போகும் போது கண்டிப்பாய் தீர்மானித்துக் கொண்டான். இனி ஆபிஸ் பொம்பளைங்களைப் பற்றி ஒரு வார்த்தை ஆஷாவிடம் மூச்சுவிடக் கூடாது.

இந்தத் தீர்மானம் வினித்திற்கு நல்ல பலனைத் தருவதாய் இருந்தது. மிகவும் இயல்பாகிப் போயிருந்தாள் ஆஷா. அன்று வழக்கம் போல் வீட்டிற்கு வந்தவன் ஆஷா சோகமாக இருப்பதைக் கண்டான். "என்ன உடம்பு சரியில்லையா?" தொடப் போனவனின் கையைத் தட்டிவிட்டாள். பூகம்ப அறிகுறி!

"இப்பெல்லாம் நீங்க ஆபிஸில நடக்கிற எந்த விஷயத்தையும் சொல்லுறதில்லை. அங்க எவளையோ செட்டப் பண்ணிட்டீங்க போல" என்று அழ ஆரம்பித்து விட்டாள். வினித்துக்கு எங்கயாவது போய் ஒரு குட்டிச்சுவரைப் பார்த்து முட்டிக்கணும் போல இருந்தது.



**அ.சுஹாஷினி, பண்டாரவளை.**

"**யா**ரது இந்த நேரத்துல" கேட்டுக் கொண்டே படுக்கையினின்றும் எழுந்த கமிஷனரின் மனைவி சுஷ்மா பிஸ்டல்களின் அரவணைப்போடு வரும் கணவரைப் பார்த்ததும் திக்கித்துப் போய் அலற வாயெடுத்தாள்.

சர்தார் "உஸ்ஸ் ஸ்ஸ்ஸ்" என்று தன் உதட்டின் மேல் கையை வைத்து பிஸ்டலைக் காட்ட உதடுகள் அப்படியே ஸ்தம்பித்தது. குரு கோவிந்த் அவளைப் பார்த்துச் சொன்னான். "மிஸஸ் சுஷ்மா! எங்களுக்கும் உங்க கணவருக்கும் மத்தியில் ஒரு பழைய விவகாரம் இன்னமும் உயிரோடு இருக்கு. அந்த விவகாரத்தைத் தீர்த்துட்டு போலாம்னு தான் இந்த அகால நேரத்துல வந்திருக்கோம்."

"வி...விவகாரமா? எ... என்ன விவகாரம்?"

"சொல்றோம். நிதானமா சொல்றோம். நாங்க உங்ககிட்டே விவரமா பேசறதுக்கு முன்னாடி நீங்க சில காரியம் பண்ணணும்."

"எ...என்ன?"

"இண்டர்காம் ரிஸீவரை எடுத்து காம்பௌண்ட் கேற் வாசல்ல நின்னுட்டிருக்கிற கான்ஸ்டபிள்ஸுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் தரணும்."

"எ...என்ன இன்ஸ்ட்ரக்ஷன்?"

"முக்கியமான ஆலோசனையில் ஈடுபட்டிருக்கேன்...பொலிஸ் அஃபிஷியல் யார் வந்தாலும் உள்ளே அலவ் பண்ணக்கூடாது. எக்காரணத்தைக் கொண்டும் காம்பௌண்ட் கேற் வாசலை விட்டு நகரக்கூடாது. இது



தான் நீங்க தர வேண்டிய இன்ஸ்ட்ரக்ஷன். ம், இண்டர்காம் ரிஸீவரை எடுங்க....நான் சொன்ன மாதிரியே சொல்லணும். நான் சொன்ன வார்த்தைகளை விட அதிகமாக ஒரு வார்த்தை உங்க வாயிலிருந்து உதிர்ந்தாலும் சரி, நாற்பத்தைஞ்சு வயசாகியும் அழகாயிருக்கிற உங்க பெண்டாட்டியோட உடம்பை தோட்டாக்கள் ருசி பார்த்துடும். இது வெறும் மிரட்டல் இல்லை.நிஜமா நடக்கப் போகிற நிஜம்."

கமிஷனர் விஷ்ணுவர்தன் இண்டர்காமிலிருந்து ரிஸீவரைப் பிரித்தெடுத்துக் காதுக்குக் கொடுத்தார்.

"கான்ஸ்டபிள்!"

"...."

"நான் முக்கியமான டிஸ்கஷன்ல இருக்கேன்.பொலிஸ் அஃபிஷியல் யார் வந்தாலும் சரி, உள்ளே அலவ் பண்ணாதே! அ...அப்புறம் எ...எ...என்னோட உத்தரவில்லாமே,காம்பௌண்ட் கேற்றை விட்டு உங்க ரெண்டு பேர்ல யாரும் அசையக்கூடாது".

பக்கத்தில் நின்றிருந்த உத்தம் சிங் இண்டர்காமின் பட்டனை இடது கையின் ஆட்காட்டி விரலால் அழுத்திக் கொண்டே "குட்"என்றான். "உங்க ஒத்துழைப்புக்கு ரொம்ப நன்றி கமிஷனர் ஸார். இனிமேதான் நாங்க வந்த வேலையை ஆரம்பிக்கப் போகிறோம். அந்த சேர்ல போய் உட்கார்ந்துக்கிறீங்களா?"

சுஷ்மா கட்டிலினின்றும் பதறிக் கொண்டே எழுந்தாள். "அ...அவரை ஒ.... ஒண்ணும் பண்ணிடாதீங்க."

குருகோவிந்த் அவளுடைய தோள் பட்டையை அழுந்தப் பற்றிக் கட்டிலிலேயே உட்கார வைத்தான். "மிஸஸ் சுஷ்மா, நீங்க கட்டில்ல அப்படியே உட்கார்ந்திருக்கணும். உங்க வாயும் சரி, உடம்பும் சரி, கொஞ்சம் கூட அசையவே கூடாது. அசைஞ்சா கமிஷனர் நிரந்தரமா உங்களுக்கு இல்லேன்னு ஆயிடுவார்."

## அங்கம் 02

குரு கோவிந்த் பேசிக் கொண்டிருக்கும் போதே-

கீழே-

காம்பௌண்ட் கேற் அருகே ஒரு காரின் ஹார்ன் சத்தம். அந்த ராத்திரி நேர நிசப்தத்தை இரண்டாய் அறுத்துக் கொண்டு எழுந்தது.

உத்தம்சிங் சட்டென்று விலகி-

வராந்தா ஜன்னலுக்கு ஓடிப்போய் வெளியே எட்டிப் பார்த்தான். செக்யூரிட்டி கான்ஸ்டபிள்கள் காம்பௌண்ட் கேற்றைத் திறந்துவிட அந்த அம்பாசிடர் கார் பிரகாசமான ஹெட்லைட் வெளிச்சத்தோடு உள்ளே வந்து கொண்டிருந்தது.




உத்தம்சிங் உடம்பு பூராவும் உஷாராகி கமிஷனரிடம் ஓடி வந்தான். அவசரக் குரலில் கேட்டான். "யாரோட கார் அது?"

"கறுப்பு அம்பாசிடர் காரா?"

"ஆமா..."

"என்னோட கார்தான்."

எழுதுவது

**ராஜேஷ்குமார்**

"கார்ல வர்றது யாரு?"

"என்னோட டாட்டர் ஹரிதா."

"உங்க டாட்டர் மெட்ராஸ்ல படிச்சிட்டிருக்கிறதா கேள்விப்பட்டோம்."

"கோ... கோர்ஸ் முடிஞ்சு, இன்னிக்கு சாய்ந்தரம்தான் மெட்ராஸிலிருந்து வந்தா."

"குரு கோவிந்த்!"

"என்ன உத்தம்?"

"நாம் கொஞ்சமும் எதிர்பார்க்காத ஒரு விருந்தாளி... என்ன பண்ணலாம்!"

"லிஸ்ட்ல சேர்த்துக்க வேண்டியது தான்."

உத்தம்சிங் கமிஷனரிடம் திரும்பினான். "கமிஷனர் ஸார். உங்க மனைவியை அந்தச் சீலைக்குப் பின்னாடி கொண்டு போய் என்னோட ரெண்டு சகாக்களும் பிஸ்டல் முனையில் நிறுத்திக்குவாங்க. நீங்களும் நானும் மட்டும் எதிரெதிரே உட்கார்ந்து பேசிட்டிருப்போம். உங்க டாட்டர் வந்ததும் எப்பவும் போல் பேசணும். மத்ததை நான் பார்த்துக்குவேன்" சொல்லச் சொல்லவே....

மாடிப்படிகளில் யாரோ ஏறிவரும் சத்தம் கேட்டது.

சுஷ்மாவை குருகோவிந்தும். சர்தாரும் துப்பாக்கி முனையில் திரைச்சீலைக்கு நகர்த்திக் கொண்டு போய் மறைத்துக் கொள்ள உத்தம்சிங் கோட்டுப் பையில் பிஸ்டலை மறைத்து வைத்தபடி கமிஷனருக்கு எதிரே உட்கார்ந்தான்.

"கமிஷனர் ஸார்! நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். நீங்க எங்களைக் காட்டிக் கொடுக்க முயற்சி பண்ணினா....நிமிஷ நேரத்துல இந்த வீட்ல மூணு பிணம் விழும்."

மாடிப்படிகளில் ஏறிவரும் சத்தம் இப்போது அதிகப்பட்டது.

டொக்....

டொக்....

டொக்....

கமிஷனரும் உத்தம்சிங்கும் மௌனமாய் ஒருத்தரையொருத்தர் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். திரைச் சீலைக்குள் சுஷ்மாரெண்டு பேருக்கும் மத்தியில் மூச்சு காட்டாமல் நின்றிருந்தாள்.

இப்போது வராந்தாவில் நடைச் சத்தம் கேட்டது.

உத்தம் சிங் கேட்டான்.

"உங்க பொண்ணு எங்கே போயிட்டு வர்றா?"

"அவ ப்ரண்ட்டோட பாத்டே பார்ட்டிக்கு..."

"ரொம்பத் தைரியம்தான். இந்த மும்பையில ராத்திரி நேரத்துல. தனியா போய்ட்டு வர்றாளே?"

"ஹாய் டாடி என்ன இது? இன்னமா நீங்க தூங்கலை?" கேட்டுக் கொண்டே உள்ளே வந்த ஹரிதா. உத்தம் சிங்கை பார்த்ததும் பேச்சை சட்டென்று நிறுத்தி "ஸாரி டாடி.... ஏதோ பேசிட்டிருக்கீங்க போலிருக்கு" என்றாள்.

"ஆ...ஆ...ஆமா" கமிஷனர், உத்தம்சிங்கை பயமாய் பார்த்துக் கொண்டே...தலையாட்டினார்.

ஹரிதா, கமிஷனருக்குப் பக்கத்தில் வந்தாள். "என்ன டாடி.... ஒரு மாதிரியா இருக்கீங்க? ஏதாவது பிராப்ளமா?" உத்தம் சிங்கைப் பார்த்துக் கொண்டே கேட்டாள் ஹரிதா. உத்தம் சிங் சிரித்தான்.

"ஆமா... பிரப்ளம்தான்....ஆறு மாசத்துக்கு முன்னாடி உங்கப்பா செஞ்ச ஒரு பாவகாரியத்துக்கு நாங்க பிராப்ளமா வந்து முளைச்சிருக்கோம்."

"டா...டி...!யா...யார்...இந்த ஆள்?" தன் அழகான கண்களில் அதிர்ந்தபடியே கேட்டாள்.

உத்தம்சிங் கையில் பிஸ்டலோடு எழுந்தான்.

"அப்பா கிட்டே ஒண்ணும் கேட்காதே ஹரிதா!அவரை நான் வாய் திறந்து பேசக்கூடாதுன்னு சொல்லியிருக்கேன். மீறிப் பேசினா உங்கம்மாவை உயிரோடு பார்க்க முடியாதுன்னு அவருக்கு நல்லாவே தெரியும்."

"ஹரிதா இன்னும் ஆழமாய் திடுக்கிட்டுப் போய்- சுற்றும் முற்றும் பார்க்க- சுஷ்மாவை இழுத்துக் கொண்டு, திரைச் சீலையின் மறைவிலிருந்து வெளிப்பட்டார்கள் சர்தாரும், குருகோவிந்தும்.

"அம்மா...!"

மெலிதாய் - கத்திக் கொண்டே சுஷ்மாவின் அருகே ஓட முயன்றவளை -பிஸ்டலால் தடுத்து நிறுத்தினான் உத்தம்சிங். "இந்த பாசத்தையெல்லாம் கொஞ்ச நேரம் மூட்டை கட்டி வை ஹரிதா. இந்த வீட்ல நிச்சயமா உன்னை நாங்க எதிர்பார்க்கலை. மெட்ராஸ்ல படிச்சிட்டிருப்பேன்னு நினைச்சேன்."

"நீங்கெல்லாம் யாரு ..? எதுக்காக வந்திருக்கீங்க?"

"நாங்க போட்டிருக்கிற யூனிபார்மைப் பார்த்து 'ஏர்விங்க்' ஆசாமிகள்னு நினைச்சுடாதே பாப்பா. அந்த யூனிபார்ம்ல வந்திருக்கிற உங்கப்பாவோட எதிரிகள் நாங்க. எங்களுக்கும் கமிஷனர் ஸாருக்கும் ஒரு விவகாரம் பாக்கியிருக்கு. அதைத் தீர்த்துட்டு போகத் தான் வந்தோம்."

"எ... என்ன விவகாரம்?"

"சொல்றோம்..." என்று சொன்ன சர்தார் சுஷ்மாவைத் தள்ளிக் கொண்டு போய் ஒரு நாற்காலியில் உட்கார்த்தி வைத்து- கையிலிருந்த நைலான் கயிற்றால் கட்டி, பிளாஸ்டரை வெட்டி வாயில் ஒட்டினான்.

உத்தம்சிங் கமிஷனரை அருகேயிருந்த ஈட்டி மரத்தூணுக்கு நகர்த்திக் கொண்டு போய், நிற்க வைத்து, சர்தாருக்கு கண்ணைக் காட்ட, அவன் நைலான் கயிற்றுச் சுருளோடும், பிளாஸ்டர் ரோலோடும் ஓடி வந்தான்.

"கமிஷனரை இறுக்கமா கட்டி, வாயில் பெரிய பிளாஸ்டராவே ஒட்டு... ஒரு முனகல் சத்தம் கூடக் கேட்கக் கூடாது."

சர்தார் செயற்பட்டான்.

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## மன அதிர்ச்சி- 02

**நீ**ண்ட நேர முயற்சியின் பின் சிவபாதம் ஐயாவை சாதாரண நிலைக்குக் கொண்டு வந்தேன். அன்று நடந்த சம்பவம் அவர் மனத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்து. மதிய உணவு இடைவேளைக்குப் பின் மீண்டும் சிவபாதம் ஐயாவை அலுவலகம் அழைத்திருந்தேன்.

"வாருங்கள் ஐயா! மதிய உணவு சுவையாக இருந்ததா? உங்கள் வீட்டுச் சமையல் மாதிரி இருக்கிறதா?" என்று கேட்டேன்.

சிவபாதம் ஐயா சிரித்தார். "எங்கள் வீட்டுச் சாப்பாடு மாதிரியேதான் இருக்கிறது" என்று கூறினார்.



"சரி ஐயா! நீங்கள் இதுவரை கூறியவை ஜீரணிக்க முடியாதவைதான். உங்கள் கண்முன்னாலேயே உங்கள் அப்பா எரிக்கப்பட்டதைப் போல பல துயரங்களை இந்தப் போராட்டமென்று தொடங்கிய காலத்திலிருந்து தமிழ் மக்களாகிய நான் அனுபவித்து வந்திருக்கிறோம். கணவன் முன்பாகவே மனைவி கற்பழிக்கப்பட்ட சம்பவங்கள் எத்தனை? மனைவி முன்னாலேயே அடித்து அல்லது சுட்டுக் கொல்லப்பட்ட கணவர்கள் எத்தனை? பெற்றோர்கள் கண் முன்னே சுட்டுக் கொல்லப்பட்ட குழந்தைகள் எத்தனை? எம் தமிழ் மக்களின் சொத்துக்கள் மட்டுமல்ல மனங்களும் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது" என்று நான் கூறச் சிவபாதம் ஐயா தலையாட்டினார்.

சிவபாதம் ஐயா மீண்டும் உணர்ச்சி வசப்படாமலிருப்பதற்காக இடையிடையே அவரின் வெற்றிலைப் பழக்கத்தைப் பற்றியும் பேச வேண்டியிருந்தது.

"ஐயா! ஒரு நாளைக்கு எத்தனை தரம் வெற்றிலை போடுவீர்கள்?"

இலேசாகச் சிரித்த சிவபாதம் ஐயா "தம்பி! இருநூறு கிராம் லட்சுமி சீவல் பாக்கும் ஐம்பது கற்பூர வெற்றிலையும், ஒரு டப்பா ஏ.ஆர்.ஆர். சுண்ணாம்பும், நிஜாம் புகையிலையும் எந்த நேரமும் என்னுடன் இருக்கும்" என்றார்.

"ஐயா!, நீங்கள் அகதியாக இந்தியா வந்த பிறகு என தொழில் செய்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"எனக்கு ஒரு குறையும் இல்லை தம்பி. கனடாவில் இருக்கும் என் பிள்ளைகள் தேவையான காசு அனுப்புகிறார்கள். இருந்தாலும் நான் வீட்டில் சும்மா இருக்க விரும்பவில்லை. ஒரு தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை செய்கிறேன். இந்த அகதி முகாமிற்குள் கிடப்பதைவிட வேலைத் தலத்தில் நான் நிம்மதியாக இருக்கிறேன்" என்று சிவபாதம் ஐயா சொன்னார்.

"சரி ஐயா! நீங்கள் முகாமில் பல பேரைத் திடீரெண்டு அடித்து வீடுகிறீர்கள் என்று சொல்கிறார்களே! ஏன்? அப்படி நடந்து கொள்கிறீர்கள்" என்று கேட்டேன்.

"உண்மையிலேயே தம்பி நான் உணர்ச்சி வசப்படுவதும் சிலரை அடித்ததும் எனக்கு கொஞ்சம் ஞாபகமிருக்கிறது. ஆறு மாதத்திற்கு முன்புதான் ஒரு மனநல வைத்தியரிடம் என் மனைவி கூட்டிக்கொண்டு போய்க் காட்டி, இப்போது குளிசை போட்டுக்கொண்டிருக்கிறேன். ஒரு நாளைக்கு மூன்று வேளை, மூன்று குளிசைகள் போடுகிறேன்" என்று சொன்னார்.

"சரி ஐயா! நீங்கள் உங்கள் முகாமில் உள்ள குமார் என்பவரைக் கொஞ்சம் கடுமையாக அடித்துவிட்டீர்கள். பிறகு ஒரு மரத்தில் ஏறி இருந்து விட்டீர்கள். இது ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"இரவு மரத்தில் இருந்து இறங்கியதுதான் ஞாபகத்திலிருக்கிறது" என்றார் சிவபாதம் ஐயா. அன்றைய அமர்வை மாலைத் தேநீர் இடை வேளையுடன் நிறுத்திக்கொண்டேன், சிவபாதம் ஐயா இருந்த முகாமிற்குச் சென்று சில தகவல்கள் பெற்றுக்கொள் வதற்காக.

சிவபாதம் ஐயா வசித்துவரும் முகாமிற்குச் சென்று இவரால் பாதிக்கப்பட்டவர்களையும், வேறு சிலரையும், முகாம் தலைவரையும் சந்தித்துச் சில விபரங்களை அறிந்தேன். முகாமிற்கு வெளியே இவரால் எவ்வித பிரச்சனையும் இல்லை. பெண்களுக்கு இவரால் எவ்வித தொல்லையும் இல்லை. இவர் வேலை முடிந்து முகாமிற்கு வந்து வீட்டில் ஓய்வாக இருக்கும் போதுதான் திடீரென்று பாய்ந்து அடிக்கின்றார், என்று முகாம் பொலிசார் கூறினார்கள். கொஞ்சம் ஆழமாக விசாரித்த மட்டில் நெருப்பு, தீப்பெட்டி, மண்ணெண்ணை என்ற சில சொற்கள் இவர் காதுகளில் கேட்டவுடன் தன்னிலை மறந்து விடுகிறார் என்பது தெளிவாகியது. பயமும், ஆத்திரமும் மேலிட்டு கண்ணில் தென்படுகிறவர்களை அடித்து, தாக்கிவீட்டு ஓடிவிடுகிறார். சில மணி நேரங்களில் சுயநினைவிற்கு வந்து விடுகிறார்.

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

அடுத்த நாள் அமர்வீற்காக, காலை 8.30 மணிக்கே சிவபாதம் ஐயா வந்திருந்தார். வரவேற்று அவரை என் முன்னிலையில் அமரும்படி கேட்டுக்கொண்டேன். சிவபாதம் ஐயா நேற்றையவீட இன்று முகமலர்ச்சியுடனும், ஆர்வத்துடனும் காணப்பட்டார்.

"ஐயா! நீங்கள் செய்யும் காவலாளி வேலை இரவு வேலையா? பகல் வேலையா?" என்று பேச்சை ஆரம்பித்தேன்.

"மாதத்தில் 20 நாட்கள் இரவு வேலையும் 10 நாட்கள் பகல் வேலையுமாக மாறிமாறி வேலை செய்வேன்" என்ற சிவபாதம் ஐயா, "இரவு வேலை தான் எனக்குப் பிடிக்கும்: இரவில் தூக்கமும் மிகக்குறைவு" என்று கூறினார்.

தொடர்ந்து வரும்...

# இலங்கையின் சமாதான முயற்சிகள் உலகுக்கு முன்னுதாரணமாக இருக்க முடியுமா?

உலகம் முழுவதும் யுத்த பதற்றம் நிலவுகையில் இலங்கையில் அமைதிக்கான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக இலங்கையின் நீதி அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உண்மையில் நாடு யுத்தமற்ற பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டது. அது பழைய நிலைமைக்குத் திரும்ப முடியாதென்றால் அதைவிட மகிழ்ச்சியான விடயம் வேறொன்றும் இருக்க முடியாது.

இந்த நாட்டின் சகல இன மக்களதும் விருப்பமும் அதுவே.

அமைச்சர் பீரிஸ் அவர்கள் பாலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினைகளையும், ஈராக்கின் மீது யுத்தம் மேற்கொள்வதற்கான அமெரிக்காவின் வியூகம், இந்தியாவில் காஷ்மீரிலும் குஜராத்திலும் நடைபெறும் தீவிரவாத தாக்குதல்கள், நேபாளத்தில் மாஓ யிஸ்டுக்களின் கிளர்ச்சி போன்றவற்றை நினைத்துக் கொண்டு இதனைக் கூறியிருக்கலாம்.

ஆனால் உலகம் மிக நெருக்கமாக வந்துவிட்ட தற்கால சூழ்நிலையில் உலகம் அமைதியாக இல்லாவிட்டால் இலங்கை அமைதியாக இருக்குமா? என்ற கேள்வி எழுகிறது.

உதாரணமாக மேற்காசியாவில் பெரும் போர் வெடித்தால் ஏற்படப்போகும் எண்ணெய் விலை உயர்வுக்கு இலங்கையும் முகம் கொடுக்க வேண்டி வரும்.

இந்தியாவில் மத அடிப்படைவாதங்களின் அடிப்படையில் நடைபெறும் வன்முறைகள், பாகிஸ்தான் - இந்தியா முறுகல் நிலை போன்றன இலங்கையின் உல்லாசப் பிரயாணத்துறை உட்படப் பொருளாதார, சமூக வாழ்வில் அமைதியின்மையை ஏற்படுத்தலாம்.

இலங்கையின் உள்ளே பாதாள உலகம் மூன்றாவது அணியாகச் செயற்படுகிறது. நவீன ஆயுதங்களுடன் கூலிக்குக் கொலை செய்வது நாளாந்த நிகழ்ச்சி. நாகரீகமான சராசரி மனிதர்களின் சுதந்திரமான வாழ்க்கை அச்சம் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

ஒரு ஏழு மாத யுத்தநிறுத்தத்தின் மூலம் பெருமளவு உயிரழிவு, சொத்தழிவு தடுத்து நிறுத்தப்பட்டிருப்பது உண்மையே. ஆனால் இது நீடித்து நிலவ வேண்டும் என்பதே சகலரதும் பிரார்த்தனையுமாகும்.

யுத்தத்திற்கு ஆள் திரட்டுவதோ, புலனாய்வுத் துறைகளை விரிவுபடுத்துவதோ, ஆயுதங்களைச் சேகரித்தலோ, இராணுவ தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதற்கான வேலைகளோ சமாதானத்திற்கான பாதையில் பெரும் தடைக்கற்களாக அமையலாம். அல்லது எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்தி பெரும் பதற்றம் உருவாகலாம்.

யுத்தம் நிறுத்தப்பட்டது, மக்களின் சுதந்திரமான நடமாட்டம் உறுதி செய்யப்பட்டிருப்பது உண்மையே.

ஆனால் மனிதரின் கருத்துச் சுதந்திரம், தான் பின்பற்றும் சமூக பாதகமில்லாத கொள்கைவழி நடத்தல், தேடல்களில் ஈடுபடுவது குறிப்பாகத் தமிழ் சமூகத்தில் மறுக்கப்பட்ட விடயங்களாகும்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் சக்தி தொலைகாட்சி மின்னல் நிகழ்ச்சிக்கு, தாய்லாந்து சதாஹிப்பில் முதற்கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் வழங்கிய செவ்வியில், தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் பணி தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில் "போராடுவதாக இருந்தால் என்ன, சமாதானத்தைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் என்ன அதில் புலிகள் மாத்திரம்தான் ஈடுபடலாம்" என்று பொருள்படப் பேசியிருக்கிறார்.

இதனைச் சாதாரணமாக யாரும் கேட்டுவிட்டுப் போகலாம். ஆனால் சுயநிர்ணயம் பற்றி அடிக்கடி பேசும் பாலசிங்கம் தமிழ் மக்களின் தலைவிதியை அவர்கள் தாமே தீர்மானிப்பார்கள் என்பதைவிட, புலிகள்தான் தீர்மானிப்பார்கள் என்ற பொருள்படப் பேசியிருக்கிறார்.

எனவே ஜனநாயகம், மனித உரிமைகள், சமூகத்தின் பல்வேறு தரப்பட்டவர்களின் அபிலாஷைகள் என்பன உறுதிப்படுத்தப்பட வேண்டியது முக்கியமான அம்சமாகும்.

இதனை உறுதிப்படுத்தாத வரை சமாதான முயற்சிகள் முழு நிறைவடைய முடியாது. அதன் இலக்கை எய்த முடியாது. இலங்கை சமாதானத்தை ஏற்படுத்துவதில் உலகிற்கு முன்மாதிரி நாடு என்று பெருமை பேசிக்கொள்ள முடியாது.

இன்னும் அபாயகரமான கட்டங்கள் தாண்டப்படவில்லை.

இன்றுள்ள நிலைமைகூட நாட்டின் உள்ளார்ந்த சக்திகளால் மட்டும் ஏற்படுத்தப்பட்டதல்ல.

சர்வதேச சக்திகளின் அழுத்தம், சர்வதேச பொருளாதார உதவிகளில் வீழ்ச்சி என்பன இலங்கையில் சமாதானம் பற்றிய எண்ணங்களுக்கு வித்திட்டன. இனிமேல் வாழ முடியாது. இனிமேல் சகிக்க முடியாது என்ற நிலையில்தான் சமாதானம் பற்றிய எண்ணங்கள் ஊற்றெடுக்கின்றன.

ஆனால் அந்த சமாதானங்கள் அவரவருக்கு வசதியான சமாதானங்களாக இல்லாமல் சமூகம் முழுமைக்குமான சமாதானமாக இருக்க வேண்டும்.

இனங்களின் ஜனநாயக உரிமைகளுடன் வேறுபட்ட கருத்து நிலை உள்ள அரசியல் மற்றும் கல்வியாளர்கள் சமூகத்தின் பல்வேறு பிரிவினரின் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதிலேயே சமாதான முயற்சிகள் முழு நிறைவடைகின்றன.

ஜனநாயகமின்மை என்பது இரத்தக் களரிக்கும், மோசமான மனித உரிமைப் பிரச்சினைகளுக்கும் வழி வகுக்கலாம்.

எனவே இலங்கையின் சமாதான முயற்சிகளின் அனுபவம் என்பது சர்வதேச சமூகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமானால் அது சகலரதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்.

ஏனெனில் இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ள விடயங்களை, உலகில் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்பது தற்போதைய காலநேரத்துக்குப் பொருத்தமற்றதாகவே காணப்படுகிறது.

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தற்போது கையாளப்படும் முறையை, காஷ்மீர் பிரச்சினைக்கும் கையாளலாம் எனச் சிலர் தெரிவித்திருந்தார்கள். இது சிறுபிள்ளைத்தனமானது.

**தாகூர்**

# சமாதான நகர்வுகள் திசை திருப்பப்படுமா?

துப்பாக்கிகளுக்கு இப்போது ஓய்வு கிடைத்துவிட்டது! போரிட்ட இரு தரப்பினரதும் தலைமை மட்டங்கள் கைகுலுக்கிக் கொண்டிருக்கின்றனர். தலைமைகள் கை குலுக்கிப் புன்முறுவல் செய்துகொண்டாலும் போர்க்களத்தில் குருதி சிந்திய இரு தரப்பினரும் தமது பழைய மிடுக்கோடுதான் இன்னமும் இருப்பதாகத் தெரிகிறது. தமது யுத்த மனோநிலையிலிருந்து அவர்கள் விடுபட்டதாகத் தெரியவில்லை.

பரஸ்பரம் இரு தரப்பினரும் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். தத்தமது படைபலங்களைப் பெருக்கிக் கொள்கின்றனர். ஆயுதப் பயிற்சியிலும் ஈடுபடுகின்றனர். போரிடும் தரப்பினரிடையே அவர்கள் சோர்வடையா வண்ணம் யுத்த மனோநிலை சரிவடையாது பாதுகாக்கப்படுகிறது. வெளிநாடுகளில் புலிகள் இன்னமும் வீடு வீடாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

"எதிரியை விரட்ட வேண்டும்! நிதியுதவி செய்யுங்கள்" என்று கேட்ட புலிகள் இப்போது தங்களது சுருதியை மாற்றிக் கொண்டுவிட்டனர். "எதிரியினால் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் இன்னமும் அகற்றப்படாமல் உள்ளன. அவைகளை அகற்ற நிதியுதவி தாரீர்" என்று கோருகின்றனர். "இத்தனை ஆயிரம் போராளிகள் உள்ளனர். அவர்களைப் பராமரிப்பதற்கு உதவுங்கள்" என்று கேட்கின்றனர்.

"கண்ணிவெடிகளை அகற்றவும், போராளிகளைப் பராமரிக்கவும் இவ்வளவு பெருந்தொகை நிதியா" என்ற கேள்விகள் அவர்கள் மனங்களில் எழாமலில்லை. ஆனாலும் போராட்ட நிதியாக வழங்கி வந்த அதே தொகையைத் தொடர்ந்தும் மக்கள் வழங்கி வருவதாகத் தெரிகிறது.

மொத்தத்தில் மீண்டும் இலங்கைத்தீவு பாரியதொரு யுத்தத்திற்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம் என்ற எண்ணங்கள் மக்கள் மனங்களில் பதிந்து வருவதாகத் தெரிகிறது. கீரியும் பாம்பும் போல இருந்தவர்கள் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தமை ஆரோக்கியமான விடயம்தான். ஆனாலும் சமாதான இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இரு தரப்பினராலும், சமாதானம் குறித்து மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கையீனங்களைப் போக்க வேண்டிய கட்டாய தேவை இப்போது உணரப்படுகிறது.

ஏனெனில் சமாதானத்தையே மக்கள் விரும்புவதாகச் சகல தரப்பினராலும் இப்போது உணரப்பட்டுவிட்டது. மக்களின் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டியது இந்த நாட்டின் ஆட்சியாளர்களதும், தமிழ் பேசும் தரப்பினரதும் தலையாய கடமையாக அவர்கள் முன் இன்று எழுந்து நிற்கிறது.

சமாதானம் என்ற இலக்கினை அடைவதற்கு நகர்ந்துகொண்டிருக்கும் இரு தரப்பினரும் சமாதானம் குறித்த தமது தரப்பு நம்பிக்கைகளை இது வரை முழுமையாக மக்களுக்கு வெளிப்படுத்த முன்வரவில்லை. இந் நிலையில் சமாதானத்திற்குத் தடையாக இருப்பவர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியினரும், அதன் தலைவி சந்திரிகா குமாரதுங்கவும்தான் என்ற பிரச்சாரங்களும் அரசியல் அரங்கில் செய்யப்பட்டு வருகிறது.

துரதிஸ்டவசமாகப் புலிகள் அமைப்பிற்கும் சந்திரிகா அரசிற்கும் இடையில் பகைமை உணர்வு வளர்ந்திருந்தது என்பது உண்மைதான். ஆனாலும் இன்றைய சூழலைப் போல் அல்லாமல், எந்தவொரு மூன்றாம் தரப்பினதும் அழுத்தம் இன்றி 95 இல் சந்திரிகா தமிழ் பேசும் மக்களுக்கான சிறந்ததொரு அரசியல் தீர்வை வரைந்திருந்தார்.

அதிலும் சில அதிகாரங்கள் வெட்டித் துண்டாடப்பட்டு 2000 ஆம் அண்டு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அத் தீர்வு கூட இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு நிகரானதாகவும், சில விடயங்களில் முன்னேற்றகரமானதாகவும், சில விடயங்களில் குறைபாடுடையதாகவும் அமைந்திருந்தது. ஒற்றையாட்சி முறை நீக்கப்படுவதற்கான பாதை அத் தீர்வில் திறந்து விடப்பட்டிருந்தது. அத் தீர்வானது பாராளுமன்ற விவாதத்திற்குக் கொண்டுவரப்படாமலேயே புதைக்கப்பட்டு விட்டது. அதற்கான அரசியற் பழியினைச் சுமக்க வேண்டிய தமிழர் தரப்பினர், கூட்டணியினரும் ரெலோவினரும்தான். ஏனெனில் அன்று அதற்கெதிரான எதிர்ப்புப் போராட்டங்களில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். குறைபாடுகள் இருப்பினும் விவாதித்து அதை நிறைவாக்கியிருக்க முடியும். பின்பு அதை ஏற்றுக்கொண்டு முன்னேற்றகரமான பாதைக்கு நகர்த்தியிருக்க முடியும் என்பது வேறு விடயம். சந்திரிகாவை மோசமான உரிமை மறுப்பாளராகச் சித்தரிக்கும் ஊடகங்கள், "ஒற்றையாட்சி முறையில்தான் தீர்வு காணப்பட வேண்டும்" என்று கூறும் பிரதமர் ரணிலின் இக் கூற்றுக் குறித்துப் பிறிதொரு சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி சந்திரிகாவை விடவும் மோசமானவராகவே சித்தரிக்க முற்படும். இந்த உண்மை அரசியல் அவதானிகளால் இப்போதே தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டு வருகிறது.

பல தடைகளையும் தாண்டிச் சமாதானத்தை நோக்கி நகர்ந்து வரும் பிரதமர் ரணிலின் துணிவு போற்றத் தக்கது. ஆனாலும் சமாதானம் குறித்த நம்பிக்கைகளை மக்களுக்கு ஊட்ட வேண்டிய கடமையும் அவருக்கு இன்னும் நிறையவே உண்டு.

சமாதான முயற்சி! அதற்காக அரசியல் தீர்வு! இது குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் தரப்பினர் தெளிவான முடிவை எடுத்துக் கொண்டு சமாதானத்தின் விரோதி யார் என்று தேட முற்படலாம். அதன் பின்பு அவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்தவும் முடியும். தவறின், இது சமாதான முயற்சியைத் திசை திருப்பும் தந்திரம் என்றுதான் பொதுவாகப் பேசப்படும்.

**கிழக்கான்**

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 19



எஸ்.டி.சுப்புலட்சுமி

அந்த நாளில் நாடக உலகில் பிரபலமாக இருந்த எம்.கே. தியாகராஜ பாகவதருடன் ஜோடியாக நடிப்பதற்கு நடிகைகள் கிடைப்பது அரிது. அவரது பாட்டுக்கும் நடிப்புக்கும் ஈடு கொடுத்து நடித்தவர் அழகும், திறமையும், இனியகுரலும், பார்ப்போரை ஈர்க்கும் வசீகரமும் கொண்ட எஸ்.டி. சுப்புலட்சுமி.

தியாகராஜ பாகவதருடன் பல நாடகங்களில் நடித்து தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பிரபலம் அடைந்தார் சுப்புலட்சுமி. 'வள்ளி திருமணம்', 'கோவலன்', 'பவளக்கொடி' போன்ற நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றார். 'பவளக்கொடி' நாடகத்தைப் பார்த்த அன்றைய இயக்குனரான கே. சுப்ரமணியம் இந்த நாடகத்தை இதே பெயரில் இதே ஜோடியை வைத்து 1934 இல் படமாக்கினார். இதன் மூலம் சுப்புலட்சுமி திரையுலகிலும் பிரபலமானார். 1935 இல் தியாகராஜ பாகவதருடன் சுப்புலட்சுமி நடித்து வெளிவந்த படம் 'நவீன சாரங்கதாரா' இப் படங்களை இயக்கிய சுப்ரமணியத்திற்கும் எஸ்.டி.சுப்புலட்சுமிக்கும் இடையே நட்பு வளர்ந்து, இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

தன் கணவருடன் சேர்ந்து ஒரு திரைப்படக் கம்பனியை ஆரம்பித்து 'பக்தகுசேலா' என்ற படத்தை 1936இல் வெளியிட்டார். இப் படத்தில் இரட்டை வேடத்தில் குசேலரின் மனைவி சுசீலாவாகவும், கிருஷ்ணராக ஆண் வேடத்திலும் நடித்துத் தன் திறமைக்கு மெருகூட்டினார். அதன் பின் 1939இல் 'தியாகபூமி' படத்தில் நடித்து புகழீட்டினார். எஸ்.டி. சுப்புலட்சுமி வயது செல்லச் செல்ல எம்.ஜி.ஆர். நடித்த 'அந்தமான் கைதி' போன்ற படங்களில் தாய் வேடங்களில் நடித்து வந்தார். 1971 இல் கணவர் சுப்ரமணியத்தின் மறைவுக்குப் பிறகு நடிப்பதை நிறுத்திவிட்டார். தனது ஒரே மகனை வளர்ப்பதிலும், புத்தகங்கள் படிப்பதிலும் காலத்தைச் செலவிட்ட காலஞ் சென்ற சுப்புலட்சுமியின் மகன்தான் 'அபஸ்வரம்' ராம்ஜி.



பி.யூ. சின்னப்பா

தமிழ்த் திரைப் படத்துறையில் அந்நாளில் கொடிகட்டிப் பறந்த பி.யூ. சின்னப்பாவின் திரையுலகப் பங்களிப்புப் பற்றி இப் பகுதியில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருந்தது. 'மங்கையற்கரசி' என்ற படத்தில் அவரின் தோற்றத்தை இங்கு காணலாம்.

இப் படத்தில் காணப்படும் மூவரும் தென்னிந்திய சினிமா உலகில் பிரபலம் பெற்றவர்கள். எம்.எல். வசந்தகுமாரி கர்நாடக இசையில் புகழ்பெற்றவர். திரைப் படங்களில் பின்னணிப் பாடகியாகவும் விளங்கியவர். இவர் நடிகை வித்தியாவின் தாயார். அடுத்து, ரி.வி. ரத்தினம். ஏராளமான சினிமாப் படங்களில் பின்னணி பாடியிருக்கிறார். மூன்றாமவர் ராகினி. லலிதா, பத்மினி சகோதரிகளின் இளையவர். மூவரும் சேர்ந்து நடனமாடிய படங்கள் பல. அக்காமாரைப் போல் ராகினியும் படங்களில் நடித்திருக்கிறார். அருகே உள்ள படத்தில் காணப்படும் மூவரும் 1959 இல் கொழும்பு வந்த சமயம் எடுத்த படம் இது.



# ஸ்போர்ட்ஸ்

## மழை வென்றது

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ணம் இந்தியா, இலங்கை இரு அணிகளுக்கும் கூட்டாக வழங்கப்பட்டது.

திங்கள் கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டமும் மழையால் பாதிக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்து ஆடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்கள் எடுத்தது.

இந்தியா 8.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 38 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தின் 2 - வது பாதியில் பெய்த பலத்த மழை காரணமாக ஆட்டம் திங்கள் கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

சஹீர் கான் வீசிய ஆட்டத்தின் முதல் ஓவரின் முதல் பந்திலேயே ஜயசூரிய ஆட்டமிழந்தது, இலங்கை இரசிகர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

மாவன் அத்தப்பத்துவும் 10 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அகர்கரின் 5- வது ஓவரில் அரவிந்த டி சில்வா 5 பவுண்டரிகள் விளாச அரங்கமே ஆனந்தத்தில் ஆழ்ந்தது.

ஆனால், அரவிந்த் டி சில்வா நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கவில்லை. 27 ரன்கள் எடுத்த நிலையில் கும்ப்ளேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடக்க ஆட்டக்காரரர் சங்கக்கார 26 ரன்களுக்கு ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க 71 ரன்களுக்குள் 4 விக்கெட்டுக்களை இலங்கை இழந்தது.

மீட்புப் பணியில் ஜயவர்த்தன, ஆர்னால்டு. 5- வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த மகேல ஜயவர்த்தன, ரசல் ஆர்னால்டு பொறுமையாக ஆடினர். இருவரும் இணைந்து 118 ரன்கள் சேர்த்ததே அணி 200 ரன்களைக் கடக்க உதவியது.

மகேல ஜயவர்த்தன 99 பந்துகளில் 77 ரன்களுக்கு சஹீர் கானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

ஆர்னால்டு கடைசி வரை களத்தில் இருந்து 101 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 56 ரன்கள் எடுத்தார்.

இந்தியத் தரப்பில் அகர்கர் தவிர அனைத்துப் பந்து வீச்சாளர்களுமே சிறப்பாகப் பந்து வீசினர். சஹீர்கான் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஆட்டம் நிறுத்தப்பட்டபோது வீரேந்திர சேவக் 25 ரன்களுடனும், சச்சின் 7 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். வெற்றி பெறும் அணிக்குக் கிடைக்கவிருந்த இரண்டரை இலட்சம் டாலர் தொகை இரு அணிகளுக்கும் பங்கிடப்பட்டது.

# இலக்கிய நயம் தருவது முழடில்யன்

## மெல்லிய ஆடையில் மங்கை மஞ்சத்தில் பாய்ந்தது கங்கை

படுக்க வைத்த சிற்பம் போல பஞ்சணையில் மல்லாந்து கிடந்த வாசவியை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் உதயணன். மெல்லிய ஆடைதான் அவளை மூடியிருந்தாலும், அந்த ஆடையும் பல வண்ண மணிகளாலும் சரிகைகளாலும் நெய்யப்பட்டிருந்தது.

படுக்கையிலும் கூட அவள் செல்வச் செழிப்பை எடுத்துக் காட்டும் விதமாக மணிகளை இணைத்துச் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் அமைந்த ஆடையையே அணிந்து கொள்கிறாள் என்பது அவனை ஆச்சரியப்படுத்திற்று. செழிப்பைக் காட்டியது அணிகலன்கள் மட்டுமல்ல அவள் அங்க நலன்களும்தான் என்பதை அவன் அறிந்தே இருந்தான்.

ஒரு மணியிலிருந்து தெறித்த ஒளி இன்னொரு மணியின் ஒளியில் பட்டு ஒன்றுடன் ஒன்று போராடிக் கொண்டதில் மிகுந்த ஜாஜ்வல்யம் உண்டாக்கிக் கொண்டிருந்தது மட்டுமல்லாமல், அந்தப் பசிய மணிகள் விலகிவிட்டால் அதனுள்ளே கண்களைக் கூசச் செய்யும் லாவண்யம் மறைந்து கிடப்பதையும் கோடிகாட்டின.

ஆடை விம்மி உயர்ந்திருந்த இடத்தையும், அதன்பின் ஒடுங்கி, இரு அகன்ற குற்றிகளின் இடையே சுழித்துப் பாயும் நீரைப் போல சரேலென்று ஆடை உட்குவிந்து சென்ற இடத்தையும் பார்த்தான் உதயணன்.

தன்னை மறந்த நிலையில் தூங்கும் பெண்ணை அவளறியாமல் இரசித்தபடி நிற்பது மனதை உறுத்தவே, "வாசவி" என்று மெல்ல அழைத்தான்.

திடீரென்று விழித்துக் கொண்டவள் வாரிச்சுருட்டி எழுந்தாள். அந்த அதிர்ச்சியில் பஞ்சணை மட்டும் குலுங்கியிருந்தால் உதயணன் மனத்தை அத்தனை பாடு படுத்தியிருக்காது.

அவளோ எதிரே நிற்பது உதயணன்தான் என்று அறிந்து கொண்டதில் சற்று ஆசுவாசமடைந்து கால்களை மஞ்சத்திலிருந்து கீழே தொங்க விட்டபடி விளிம்பில் அமர்ந்து அவனை நோக்கிச் சோம்பல் முறித்தாள்.

உதயணன் தீயில் நிற்பவன் போல் துடித்தான். பஞ்சணை முகப்பில் பருவத்தால் செழித்த அவள் பின்புற அங்கங்கள் அழுந்த, கால்கள் கீழே தொங்கலாட அமர்ந்திருந்த விதம் இவனைத் தவிப்புக்குள்ளாக்கிற்று. ஆடை சிறிது குலைந்து தோளின் ஒரு புறத்திலே லேசாக இறங்கியும், இடைப்புறத்தின் வழவழத்த அழகைப் புறம்பே காட்டியும், தொடைகள் மீது தவழ்ந்த சேலைப் பகுதி சில இடங்களில் கலைந்தும், சில இடங்களில் மடிந்தும் அவள் எழிலைப் பலவிதமாக விளக்கியதால், பெண்களின் அலங்கோலத்திலும் ஆண்களை வசீகரிக்கும் அழகிருப்பதைப் புரிந்து கொண்டான்.

ஆடைகள் விலகித் தெரிந்த அவள் உடற் பகுதிகள், அவற்றின் இயல்பு நிறமான செம்மஞ்சளை இழந்து



வெளிறியிருந்ததைக் கண்டான். அவை சொல்லும் சேதியை அறிந்தான்.

தூக்கத்தில் நடப்பவன் போல காற்றில் மிதந்து சென்று அவளுடலைப் பஞ்சணையில் சரித்தான்.

அவளுடைகள் விலகியபோது அந்த மணிகள் எழுப்பிய ஒலி அவனுக்கு இன்பக் கிளுகிளுப் பேற்றியது. அவளருகே படுத்திருந்தபடி அவளழகை ஆசை தீரக் கண்களால் குடித்தான்.

அவள் . வெட்கம் கொண்டவளாய் "என்ன இது?" என்று சிணுங்கினாள். அவன் ஒன்றும் பேசாமல் தன் சுட்டு விரலை அவள் கீழுதட்டில் வைத்து அழுத்திப் பின் படிப்படியாகக் கீழிறக்கி வந்தான்.

அவள் துடித்து நெளிந்து, பின் வெறிகொண்டவள் போல அவனைத் தன் உடம்பின் மீது அள்ளிப் போட்டுக் கொண்டாள். அவனது முரட்டு உடல் அவள் மீது வெம்மையைக் கொட்டியது. அவன் தலையைத் தன் மார்பின் மீது வைத்து அழுத்தினாள்.அவன் மூச்சுத் திணறி முனகினான். அவன் காற் பெருவிரல் அவள் புறங்காலிலிருந்து உள்ளங்கால் வரை ஊர்ந்தது. அவள் உடம்பில் சிலிர்ப்பு பரவியது. வாய்விட்டு முனகியபடி அவனை முழுமையாகத் தன் உடம்பால் அள்ளிக் கொண்டாள். அவன் முரட்டுத்தனமாக அவளுடலை அசைத்தான். வாளிப்பான பகுதிகளின் உராய்வு அவனை மேலும் ஆவேசம் கொள்ள வைத்தது.

அவள் உடம்பு எங்கும் சூடான வியர்வை நிரம்பியது. கண்களின் ஓரம் கண்ணீர் நிறைந்து வழிந்தது. தலையைத் தலையணையில் இரு புறமும் அசைத்தபடி, கீழுதட்டைக் கடித்தபடி அவள் துள்ளிப் புரண்டு துடித்தாள்.

சந்தோஷத்தில் சிரிப்பு பீறிட்டுக் கிளம்பியது. உடம்பில் குளிராக ஓடிய புல்லரிப்பில் தன் நிர்வாணத்தை அறிந்தாள். வெட்கம் அவளை விட்டு நீங்கியிருந்தது. அவனது உடல் அவளை முழுக்க விழுங்கியிருந்தது. அவள் தலையும் பாதங்களும் மட்டுமே மிஞ்சியிருந்தன. தாங்க முடியாத மன நெகிழ்ச்சியில் அவள் குரல் கம்மி உடைந்து சிதறியது. அர்த்தமற்ற சொற்களும் கேவல்களும் விம்மல்களும் தெறித்தன. "என் ராசா....என் தெய்வமே...." என்று கேவினாள்.

நுரைத்துக் கொந்தளிக்கும் ஓர் அருவி அவளுக்குள் புகுந்தது.

உதயணன் சோர்வோடு அவளை விட்டு விலகி மல்லாந்து படுத்தான்.

குளிர்ந்த காற்றில் அவனுடல் வெப்பம் ஆவியாவதை உணர்ந்தான்.

இந்தப் பஞ்சணை, இந்த மாளிகை, வானுயர்ந்த கூட கோபுரங்களைக் கொண்ட இந்த நகர் எல்லாம் நாளை தனக்கு அந்நியமாகி விடும் என்று நினைத்தான். நெடிதுயர்ந்த மாளிகையில் மலர்கள் தூவிய அழகிய வேலைப்பாடு கொண்ட இந்த மஞ்சத்தில் இன்றைய பொழுது தந்த இந்த இன்பம் இனி எப்போ? நினைக்கையில் உதயணன் மனதை ஏக்கம் சூழ்ந்தது. நாளை அவன் புறப்பட்டுவிட வேண்டும். பொருள் தேடி வந்தால்தானே வாழ்க்கையும் இந்த இனிமையும்! இன்பத்தின் முடிவில் நம்மை வரவேற்க துன்பம் தவறாது காத்திருக்கிறது. என்ன வாழ்க்கை இது என்று சலித்துக் கொண்டான்.

வயங்குமணி பொருத  
வகையமை வனப்பின்  
பசுங்காழ் அல்குல்  
மாஅயோ ளொடு  
வினைவனப்பு எய்திய  
புனைபூஞ் சேர்க்கை  
விண்பொரு நெடுநகர்த்  
தங்கி, இன்றே இனிதுடன்  
கழிந்தன்று மன்னே . . . .

(அகம்: 167: 1-5)

# சிந்தியா பதில்கள்

★ சமாதானப் புறா சிறகடித்துப் பறக்கும் என்ற எதிர்பார்ப்பு பொய்யாகி விடுமோ என்று அஞ்சும் தமிழ் மக்களுக்குத் தாங்கள் என்ன நம்பிக்கையை அளிப்பீர்கள்?

க.கமால்தீன், ஏறாவூர் 03.

*நம்பிக்கை அல்ல நப்பாசை. கிடாரம் உடைந்தால் கிண்ணியாவது மிஞ்சாதா!*

★✏★

★ அமெரிக்க அதிகாரிகள் அடிக்கடி இங்கே வந்து போகிறார்கள். நம் அரசுத் தலைவர்களும் அங்கேயே போய்ப் பழி கிடக்கிறார்கள். நமது சமாதானத்திற்காக உலகமே அக்கறைப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படியே போனால் எங்கள் நிலைமை என்ன ஆகப் போகிறது?

பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

*நாமிருக்கும் நாடு நமதில்லை என்றாகும்.*

★✏★

★ உங்களைக் கவர்ந்த மிகச் சிறிய கவிதை ஒன்றைச் சொல்லுங்களேன்?

தாராபுரம் நிலாம், கரம்பை.

*இப்படியொரு கேள்விக்கு யாரோ 'குழந்தை' என்று பதில் சொல்லியிருந்ததாக ஞாபகம். நான் எங்கள் அரசியல் நிலைமையை உணர்த்துவதாக பாபு என்பவர் எழுதியிருந்த கவிதையைத் தருகிறேன்.*

**எலிகளைக் கொல்ல  
மனமில்லை  
பூனை வளர்க்கிறேன்.**

★✏★

★ அவுஸ்திரேலியாவுடனான வெற்றி எப்படி?

அ.அச்சுதன், சேனையூர்.

*ஆற்றாக்கொடுமையில் இலங்கை அணி வீரர்களை ஏளனத்துக்குரிய பிறவிகளாகப் பார்த்து மக் கிராத் சிரித்த சிரிப்புக்கும், ஷேன் வோர்ன் போன்றவர்கள் ஆத்திரமூட்டிய விதத்திற்கும் அந்த வெற்றி போதுமானதாக இருக்கவில்லை. அவர்களும் 300 க்கு மேல் அடித்து, அதன்பின்னர் அவர்களுடைய பந்து வீச்சுக்களை நம்மவர்கள் நொறுக்கி விளாசியிருந்தால் இதமாக இருந்திருக்கும் போலிருந்தது.*

★✏★

★ நம் தமிழ்ப் பத்திரிகைகளிலெல்லாம் இந்தியாவையும், இந்தியப் பத்திரிகைகளையும் கிழித்து எழுதுகிறார்களே...?

வி.தனபாலன், கொழும்பு-13.

*யாருடைய நலனை நினைத்து அப்படியெல்லாம் எழுதுகிறார்களென்று ஆச்சரியமாகத்தானிருக்கிறது. எவ்வளவு குழந்தைத்தனம் நம் அரசியல் அலசல்களில்! கும்பல் எழுச்சியோடு சேர்ந்து நின்று 'ஒழிக' கோஷம் போடும் போது உற்சாகமாகத்தானிருக்கும். அந்தப் பேரிரைச்சலுக்குள், நீண்டகால நலனுக்குக் கருத்துச் சொல்பவர்களின் குரலை அமுக்கி விடலாம் என்ற ஆவேசத்தையே பத்திரிகைக் கட்டுரையாளர்களிடம் காணமுடிகிறது. நிதானமாக யோசித்து நன்மை தீமை பற்றி எழுதுகிறவர்களைத் தினசரிப் பத்திரிகைகளில் காணமுடியவில்லைதான்.*

*இந்தியாவைப் பொறுத்தவரையில், அதற்கு எப்படியும் இலங்கை மீது ஒரு 'பிடி' தேவை. தமிழ் மக்கள் விலகி விலகிப் போனால், சிறீலங்கா அரசையோ அல்லது சிங்கள இனவாத சக்திகளையோ இந்தியா தன் தேவைகளுக்காகச் சாய்ந்து கொள்ளும். இது தமிழ் மக்களுக்கு நல்லதல்ல.*

★✏★

★ அற்புதம் படம் எப்படி?

ஏ.எல்.எம். றிஸ்வி, காத்தான்குடி 03.

*கலகலப்புக்கு நாலு நண்பர்கள். நட்பு அல்லது காதல் அல்லது இரண்டையும் பற்றி உணர்ச்சிகரமாகப் புகழ்ந்து தள்ளிப் படம் எடுத்தால் இளைஞர்களைக் கவர்ந்து விடலாம் என்ற நம்பிக்கையில் சூப்பர் குட் பிலிம்ஸின் இன்னொரு படம். இந்தப் படத்தின் விசேஷம், நடனப் புயலுக்கு*



*இன்னொரு நகல் வந்திருப்பது.*

★✏★

★ கெட்ட பழக்கம் என்று தெரிகிறது; உயிருக்கே ஆபத்து என்று கூட விளங்குகிறது. இருந்தும் இந்தச் சிகரெட் பழக்கத்தை விடமுடியவில்லையே...?

எஸ். தியாகலிங்கம், அநுராதபுரம்.

*திட்டுகிறோம்....சலித்துக் கொள்கிறோம்.... நிகழ்ச்சி எதுவுமே சரியில்லை என்று வெறுப்படைகிறோம். இருந்தும் ரி.வி. பார்ப்பதை நிறுத்தி விடுவதில்லையே. அது போலத்தான்.*

*ஆனால், அந்த நாடகங்களால் ஊட்டப்படுகிற கருத்துக்களைப் பார்க்கும் போது சிகரெட் நஞ்செல்லாம் நஞ்சேயில்லை என்று தோன்றுகிறது.*

★✏★

★ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபரைக் கடத்திச் சென்று தாக்கியவர்கள் யார்? அங்கு 'எல்லாம் அறிந்த' புலிகளுக்குக் கூடவா அது தெரியாது?

இ.கமலரூபன், கொழும்பு-05.

*இதென்ன கேள்வி! கடத்திச் சென்றவர்கள் அதிபரிடம் தங்களை மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லியிருப்பதாகத்தானே பத்திரிகைச் செய்தி! அதே சமயம், 'வடமராட்சி மாணவர் அமைப்பு' வடமராட்சியெங்கும் சுவரொட்டிகள் ஒட்டியிருப்பதாகவும் செய்தி. ஒக்டோபர் முதலாம் திகதிக்கு முன் ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்தவர்கள் அனைவரும் வடமராட்சியை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று அதில் 'அன்புடன்' கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை மீறி நின்றால்தான் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கும் என்று அதே அன்புடன் சொல்லியிருக்கிறார்களாம். ஹாட்லி அதிபர் ஸ்ரீபதியை ஏற்றிச் சென்று அடித்த குழுவினரும், அவரை உடனடியாகக் கல்லூரியை விட்டு வேறெங்கும் சென்று விடுமாறுதான் அன்புடன் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.*

*இதை வைத்து, ஒன்றும் ஒன்றும் இரண்டுதானே என்று நான் சொன்னால், என்னைத் 'தமிழன்' என்ற அடையாளத்திலிருந்து விலக்கி வைத்து விடுவீர்கள். எதற்கு வம்பு?*

★✏★

★ சிந்தியா! காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் தங்களின் பிள்ளைகளின் காதலை ஏன் எதிர்க்கிறார்கள்?

ரெ.அசோக்குமார், டிக்கோயா.

*அதிலுள்ள ஏமாற்றத்தைத் தெரிந்து கொண்டதாலோ என்னவோ!*

★✏★

★ இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இப்போது தமிழ்ச் சேவைக்குப் பொறுப்பாகப் பெரும்பான்மையின அதிகாரிதான் இருக்கிறாராமே?

எம்.ஐ.எம். மிஹ்லார், குருநாகலை.

*இதெல்லாம் உடனே உங்கள் கவனத்தில் உறுத்தி விடுகிறது. ஆனால், இப்போதும் தமிழ்ச் சேவை அறிவிப்பாளர்களாகத் தமிழ், முஸ்லிம் இனத்தவர்களையே அனுமதித்திருக்கிறார்கள் என்ற கருணை உங்கள் கவனத்தில் படுவதேயில்லை.*

★✏★

★ ராஜீவ் காந்திக்கு ஏற்பட்ட துன்பியல் நிகழ்வு ஜெயலலிதாவுக்கும் ஏற்படுமா?

அ.அன்பரசன், சுன்னாகம்.

*முதலில் நீங்கள் கவனமாக இருங்கள்!*

# மன்னாதி மன்னன்

124

## இந்திரஜாலம் கற்றவனுக்கு மன்னரின் பாராட்டு

குதிரை வீரனின் உடல் சிதையில் எரிந்து கொண்டிருந்தபோது அவருடைய மனைவி எத்தகைய முன்னெச்சரிக்கையுமில்லாமல் அந்தத் தீயினுள் குதித்து மாண்டு போனாள். எதுவுமே செய்ய முடியாத இரண்டுங் கெட்டான் நிலையில் விக்கிரமாதித்த மன்னன் நின்றிருந்தார்.

இச் சம்பவம் நடைபெற்று அரை நாழிகை கூடக் கழியுமுன்னர் அதே குதிரை வீரன் வேறொரு புறத்திலிருந்து அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுடைய உடலின் பல இடங்களில் காயங்கள் பட்டு உடைகளில் இரத்தக் கறைகள் படிந்திருந்தன. அந்த வீரனை உயிருடன் கண்ட மன்னரும் ஏனையோரும் ஆச்சரியப்பட்டனர். சற்று முன்னர் குதிரை வீரர்களுடன் போரிட்டு மாண்டதாக அறியப்பட்டு, அந்த உடல் வீரனுடையதேயென நம்பி அவ்வுடல் சிதையில் ஏற்றப்பட்டுத் தீயில் வெந்து சாம்பலானது.

அவ் வீரனுடைய மனைவியும் தன் கணவனுடன் உடன் கட்டை ஏறி உயிர் துறந்தமை நடைபெற்று முடிந்த வேளையில், மாண்டு போனதாகக் கருதப்பட்ட குதிரை வீரன் இப்பொழுது உயிருடன் வந்திருக்கிறான்.

உயிருடன் மீண்ட வீரன் நேராக மன்னர் இருக்குமிடம் சென்று பாதம் தொட்டு வணங்கி "மன்னர் மன்னவரே! தங்களைக் கொல்வதற்காக வந்த குதிரை வீரர்கள் அனைவரையும் நான் தனியனாக நின்று வெட்டிச் சாய்த்துவிட்டு இதோ வந்திருக்கிறேன். தங்களிடம் நான் அடைக்கலம் தந்து விட்டுச் சென்ற என் மனைவி எங்கே? அவளை நான் உடனே பார்க்க வேண்டும்," என்று கேட்டுக் கொண்டான்.

அடுத்தடுத்து, ஒன்றன் பின் ஒன்றாக நடந்த சம்பவங்களால் அதிர்ச்சிக்குள்ளாகியிருந்த மன்னன் விக்கிரமாதித்தனுக்கு அந்த வீரன் வந்து கேட்டுக் கொண்ட வினா மேலும் அதிர்ச்சியைத் தந்தது. மன்னனிடம் அடைக்கலமாகத் தரப்பட்ட அவனுடைய மனைவி சிதையில் வீழ்ந்து எரிந்துபோய்விட்டதை அவனிடம் எவ்வாறு கூறுவது என்று தெரியாமல் தவித்தார். சற்று நேரம் பொறுத்து நடந்து முடிந்த சம்பவங்களை மன்னர் அந்த வீரனிடம் கூறினார். ஆனால் அவனோ மன்னர் கூறிய கதையை நம்ப மறுத்தான்.

அடைக்கலமாக விட்டு விட்டுப் போன தன்னுடைய மனைவியின் அழகில் மயங்கிய மன்னன் அவளை வேண்டுமென்றே மறைத்துவிட்டுத் தன்னிடம் பொய் கூறுவதாகக் குற்றஞ்சாட்டினான். மன்னர் விக்கிரமாதித்தன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் மன்னரை "பெண் பித்துப் பிடித்தவர்" என்று எத்தகைய தயக்கமுமின்றி வசை பாடினான். துணுக்குற்ற மன்னர், "வீரனே! நான் கூறியதெல்லாம் உண்மை. என்னிடம் நீ அடைக்கலம் தந்துவிட்டுப் போன உன் மனைவியின் உயிருக்காக இதோ என்னுடைய உயிரைத் தருகிறேன்" என்று கூறிய வண்ணம் மன்னர் தன்னுடைய கழுத்தை வெட்டுவதற்காக உடை வாளை உருவி எடுத்தார். கூர்மையான அவ்வாள் மன்னரின் கழுத்தைத் தொட்டதும் அதி பிரகாசமான ஒரு மின்னொளி தோன்றியது. அதே நொடியில் அந்தப் பகுதியில் அதுவரை நடைபெற்ற சம்பவங்களின் காட்சிகள் அனைத்தும் மறைந்தன. அத்தனை காட்சிகளும் வெறும் மாயாஜாலக் காட்சிகளாக மறைந்து போயின. அதே குதிரை வீரன் மன்னரைப் பார்க்க வந்திருந்த வேளையில் எத்தகைய ஆடை ஆபரணங்களுடன் காணப்பட்டானோ அதே போன்று, மன்னரை வணங்கியபடி காட்சியளித்தான்.

சம்பவம் எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த அமைச்சர் பட்டி, மன்னரை அணுகி, "அண்ணா! இந்த வீரன் உண்மையிலேயே இந்திரஜாலம், மந்திரஜாலம் ஆகிய கலைகளை நன்று கற்றுத் தேர்ச்சி பெற்றவன் என்பதைத் தற்போது நடந்து முடிந்த சம்பவங்கள் மூலம் தெளிவாகக் காட்டியிருக்கிறான். ஆகவே அவனைத் தாங்கள் முறையாகப் பாராட்டிப் பரிசில்கள் கொடுக்க வேண்டியது தங்கள் கடமையாகும்." என்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் பட்டியின் அறிவுரையைக் கேட்ட மன்னர் விக்கிரமாதித்தன் அந்த வீரனிடம், "வீரனே உன்னுடைய அற்புதத் திறமையை நான் பாராட்டுகிறேன். நாங்கள் எங்கள் ஒய்வு காலத்தை இன்றுடன் முடித்துக் கொண்டு நாளை உஜ்ஜயினி மாகாளிப் பட்டணம் போய்ச் சேர இருக்கிறோம். அதுவரை எங்களுடனேயே தங்கியிருந்து, எங்கள் பட்டணத்தை அடைந்ததும் மேலும் சிலகாலம் அரண்மனை விருந்தாளியாக இருந்து விட்டு எங்களுடைய பரிசில்களையும் விருதுகளையும் ஏற்றுக் கொண்டு உங்களூர் போய்ச் சேரலாம்," என்று தெரிவித்து வாழ்த்தினார்.

இந்தக் கதையை போஜ மன்னரிடம் கூறிய இருபத்தோராம் படிக்குக் காவல் இருந்த கனகரஞ்சிதவல்லிப் பதுமை "சாதாரண குடிமகனின் பழிச்சொல்லுக்கு அஞ்சிய எங்கள் மாமன்னன் விக்கிரமாதித்தன் அவர்களின் உன்னதமான பண்பில் ஒரு சிறு பகுதியாவது உம்மிடம் இருக்குமானால் நீர் தாராளமாக இவ்வரியாசனத்தில் ஏறி அமரலாம்." என்று கூறியது.

இக் கதையைக் கேட்ட போஜ மன்னர் களைப்படைந்திருந்தார். அங்கிருந்து வெளியேறித் தன் அரண்மனைக்குச் சென்று இரவைக் கழித்தார்.

அடுத்த நாள் அதிகாலை துயில் நீங்கப் பெற்ற போஜமன்னர் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பிரதானிகள் புடைசூழ அரியணை மண்டபத்தை அடைந்தார். அரியணைக்குரிய பூஜையை முடித்துக் கொண்டு பரிவாரங்கள் அனைவரையும் அனுப்பிவிட்டு அரியணை மீதிருந்த படிகளில் ஏறி இருபத்தோராம் அடியையும் தாண்டி இருபத்திரண்டாம் படியில் காலடி எடுத்து வைத்தார். அந்தப் படிக்குக் காவலாக இருந்த பங்கஜவல்லிப் பதுமை தனது வலது கையை நீட்டி போஜ மன்னர் மேலே செல்லாமல் தடுத்து நிறுத்தியது. ஏனைய பதுமைகளைப் போல் அல்லாமல் பங்கஜவல்லிப் பதுமை சற்றுக் கடுமையாக, "போஜ மன்னரே என்னுடைய சகோதரிகளான கீழ்ப் படிகளில் உள்ள பதுமைகள் கூறிய கதைகளைக் கேட்ட பின்னரும் உமது ஆசையை அடக்கிக் கொள்ள முடியாமல் துணிவுடன் மீண்டும் இவ்வரியணையில் ஏற முன்வந்திருக்கிறீர். உமக்கு வெட்கமே இல்லையா?" என்று கேட்டு மன்னரை இழிவாகப் பேசியது.

(மன்னன் வருவான்...)

இராஜகுமாரன்

## காதில பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



• நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி-

பாபா படம் வரத்தோட வந்து கொஞ்ச நாள் தியேட்டர்களில நிண்டு, சீக்கரமே திரும்பி இமய மலைக்குப் போயிட்டுது. ஆனாலும் பாருங்கோ, அந்த அதிசய வரங்களில ஒண்டையாவது தாங்கள் எடுக்க அரசியல் வாதிகள் என்ன பாடு படுறாங்க எண்டதப் பாக்கேக்க, ஒருவேளை எங்கட அரசியல் வாதிகளுக்கு அது கிடைச்சால் எப்பிடியிருக்குமெண்டு ஒரு கற்பனை ஓடிச்சுது.

முதலில ஜனாதிபதியில தொடங்கி ஒவ்வொருத்தராக் கேட்டுப்பாப்பம்.

<u>ஜனாதிபதி:</u> யோ்ஸ், வரமா? என்ர நிறைவேற்று அதிகாரங்களவிட பவர்புல்லான இன்னொரு விசயம் இருக்குதா? சேர்பிரைஸ்! வெரிகுட், இந்தப் பத்தொம்பதாவது திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றப் பக்கம் எட்டியும் பாக்கக் கூடாதெண்டுதான் உடன கேப்பன்.

<u>ரணில்:</u> ஒரேயொரு வரம்தான் மிச்சமாயிருக்கா? காத்தாடி வரவைக்கிறதெண்டும், நேரம் கேக்கிறதெண்டும் வீணாக்கிப்போட்டாரே ரஜனி, என்னட்டக் கேட்டிருந்தால் ஒண்டுக்கு பத்துக் காத்தாடியும் ஒரு நொன் ஸ்டொப் வோச்சும் வாங்கி கூரியரில அனுப்பியிருப்பனே. எனக்கு இங்க ஏகப்பட்ட சோலி தீர்க்க வேண்டிக் கிடக்கு. ஜனாதிபதியை ஓரங்கட்டுறதா, சமாதானப் பேச்சை தாக்காட்டுறதா, வெளிநாட்டு நிதிகளத் தேடித் திரியிறதா, எஞ்சியிருக்கிற மிச்ச சொச்ச அரச உடைமைகளையும் பிறைவேடைஸ் பண்ணித் தீக்கிறதா எதச் செய்யிறதெண்டே தெரியாமல் அந்தரப் பட்டுக்கொண்டிருக்கிறன். ஒரேயொரு வரத்தக் கொணந்து நீட்டினால் என்ன செய்யிறது? போய் ஒரு நாலைஞ்சு வரத்தையாவது ரஜனியிட்டக் கடனா கேட்டு வாங்கிக் கொண்டு வாரும் பாப்பம்.

<u>ஜே.வி.பி, வீரவன்ச:</u> புலிகளக் கொண்டு கொழும்பில ஒரு குண்டாவது வெடிக்கச் செய்யுங்கோ. அரசியலில நான் உச்சக் கட்டத்துக்கு ஏறிக் காட்டிறன்.

<u>ஹக்கீம்:</u> என்ர பேர்த் சேர்டிபிக்கட்டை மட்டக்களப்பில பிறந்ததாக்கித் தாங்கோ. உட்கட்சிப் பிரச்சினைக்கும் எதிர்க்கட்சிப் பிரச்சினைக்கும் உடனயே தீர்வுகண்டு காட்டிறன்.

<u>சம்பந்தர்:</u> வரமேதும் தர இருந்தால் எனக்கு ஒரு விஷயந்தான் வேணும். அது கண்டீரோ, நான் யாரோட என்ன பேசிறனெண்டது சுவருக்குக் கூடத் தெரியக் கூடாது. சுவருக்குத் தெரிஞ்சாலும் வன்னிக்குக் கடைசிவரை தெரியக் கூடாது. இந்தியன் எம்பஸிக்கயும் போய்வர வேணும், அமெரிக்க விருந்திலயும் கலந்து கொள்ள வேணும், ஜனாதிபதியின்ர இன நல்லிணக்க சபையிலயும் கலந்துகொண்டு அவவ வாழ்த்த வேணும். இங்கால ரணிலோடயும் பேசிக்கொண்டு வன்னிக்காரரோடயும் குளோஸா இருந்து காரியம் முடிக்க வேணும். எல்லாமே பரம ரகசியமா நடந்தேறுறதுக்கு வரந்தந்தால் போதும் நான் என்ர சாதுரியத்தால மிச்ச அலுவலப் பாத்துக் கொள்ளுவன்.

<u>ஆனந்த சங்கரி:</u> வரமா, அட கொண்டு வாங்கோ, கொண்டுவாங்கோ! வன்னிப்பக்கம் விஷயம் தெரியாதுதானே. உள்வீட்டுக் காரரையும் நம்பிச் சொல்லிப் போடாதேங்கோ. (குனிந்து காதுக்குள்ளே) தாடிக்கார முன்னாள் மேயர் பையன்..., ஆள்தான் அங்கால அண்டி விட்டுக்கொண்டு வாறார். ம். சரி விடும். வரம் ஷு வர்தானே? எனக்கடா தம்பி உந்த ஐக்கிய நாடுகள் சபையச் சீவியத்தில ஒருக்காத்தன்னும் பாத்திடுறதுக்கு ஆசை. வன்னிக்காரர் பெர்மிஷன் தரமாட்டினமாம். உம்மட வரத்தால வன்னிக்குத் தெரியாமல் என்ன ஐ.நாக்குப் போகப் பண்ணிட்டீரெண்டால் போதும். பிறவிப் பயன் கண்டதாயிருக்கும் கண்டீரே!

<u>சுரேஷ் பிரேமச்சந்திரன்:</u> உம்மட வரத்தால ஒண்ட மட்டும் செய்து தாரும் போதும். ஒண்டுமில்ல, என்ர கட்சிக் காரற்ர வன்னி எம்.பி சீற்ற எனக்கு மாத்தித் தந்தால் சரி. கூட ஒண்டுக்கும் ஆசைப்படேல்லை. மற்ற சின்னச் சின்ன ஆசைகள இப்போதைக்கு ரணிலிட்ட கேட்டு தாளா வாங்கிச் சமாளித்துக் கொள்ளுறன்.

<u>வரதராஜ பெருமாள்:</u> அஹ்ஹஹ்ஹா..! சுரேஷ் எம்.பி சீற்றிலயே குறியா நிக்கட்டும். அதுதான் நல்லது. எனக்கு கோட்டில இருக்கிற கட்சிப் பெயரை மட்டும் உம்மட வரத்தப் பாவிச்சு எங்கடதா தீர்ப்புச் சொல்ல வைச்சீடும், இப்போதைக்கு அது போதும்.

<u>சிறீகாந்தாரெலோ):</u> ஒரு தரம், ஒரே தரம் பாராளுமன்றக் கதிரையில இருந்துபாத்திட்டு திரும்பி வாறதுக்கு இந்தக் கூட்டுக் கட்சிக்காரர் வழிமறிச்சுப்போட்டாங்கள் தம்பிமாரே. கோட்டில நீதிபதிக்கு மைலோட் போட்டுக் கதைச்சே கூன்விழுந்து போன எனக்கு ஒருக்காத்தன்னும் சபாநாயகரைக் கைநீட்டிக் கதைக்க வாய்ப்பே வராதாவெண்டு தவியாத் தவிக்கிறன். உம்மட வரத்த அப்ளை பண்ணி ஒரு பை இலக்ஷன் வைச்சு என்னை எம்பியாக்கித்தாரும் பாப்பம். நான் வன்னியில பெமிஷன் வாங்கி பாராளுமன்றத்திலயே ரஜனிக்கு ஒரு பாராட்டுரை நடத்திக் காட்டுறன்.

<u>டக்ளஸ்:</u> வரம்.... ஹ ஹ ஹ ஹா! நான் விபூதியணியாத இந்து, சிலுவையணியாத கிறிஸ்தவன், தொப்பியணியாத முஸ்லீம். வாக்கைமட்டும் போடுங்கோ போதும். வரத்தை நான் நம்பிறதில்லை. அதைக் கையாலாகாதவை யாருக்கும் குடுங்கோ.

<u>சித்தார்த்தன்:</u> வரமா தம்பி. எல்லாரும் எப்படா எங்களப் பிழைபிடிப்பமெண்டு பாத்துக் கொண்டிருக்கினம். தப்பித் தவறியும் பிடிகுடுக்கிற மாதிரிப் பேசிப்போடாமப் பாத்துக்கொண்டால் சரி. நான் கணக்கா நகர்த்துவன் காயை.

<u>விநாயக மூர்த்தி:</u> வரமோ தம்பி? எதெண்டாலும் ஏகபிரதிநிதிகள் சொல்லுறபடி செய்யுங்கோ ராசா. உம்மட வரம் ஒரு தரத்தோட போயிடும். நான் நிரந்தரமா இருக்க வேணுமோ இல்லையோ? ஹிஹிஹி...ஹி.

<u>ரஜனி:</u> என்னப்பா இது. ஒரேயொரு வரத்த வைச்சு எல்லாரும் ஒத்தபடியா நல்லபடியா வாழுவாங்கண்ணு பார்த்தேன். இவங்க என்னடான்னா ஆளையாள் ஏமாத்தி அரசியல் நடத்த நினைக்கிறாங்க! கண்ணா நா இவுங்க ஒருத்தருக்கும் வரம் குடுக்கப் போறதில்ல. கதம் கதம். முடிஞ்சது முடிஞ்சு போச்சு! காதிலபூ. இந்தா நீதான் பொருத்தமான ஆள். நீயே வைச்சுக்க. ஒனக்கு என்ன வரம் வேணும் சொல்லு.

<u>கா. பூ:</u> உங்கட எல்லாற்ற காதிலயும் பூ வைக்கிறதுக்கு வரம் தாங்க. அதுவே போதும்!

யாவும் கலப்படமற்ற கற்பனை

## இந்தவாரம் உங்கள் பலன்

06.10.2002 தொடங்கி 12.10.2002வரை

### சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

கன்னி–சூரியன், புதன், செவ்வாய், துலாம்– வெள்ளி, விருட்சிகம்–கேது, இடபம்–இராகு, மிதுனம் – சனி, கர்க்கடகம்–வியாழன்.

சந்திரன் கன்னி, துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் முயற்சிகளில் அவதானம் தேவை. பணக் கஷ்டம் உண்டு. வார இறுதியில் பெரியோர் உதவுவர். உத்தியோக நிலையில் மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். மாணவர்கள் எதையும் கவனமுடன் செய்தல் வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 1.

**இடபம்**

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் சிறப்பு, பண வரவு நன்மை. பெரியோர் உதவி உண்டு. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் உயர்வு பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 6.

**மிதுனம்**

(மிருகசீரிடத்துப் பின்னரை திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் மேன்மை. காரியானுகூலம். இனசன நன்மைக்கு இடமளிக்கும். உத்தியோகத்தர்கள் முன்னேற்றம் பெறுவர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 5.

**கர்க்கடகம்**

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழிலில் எதிர்ப்புக்கள், பண வரவு தாமதம், வீண் பழி கேட்டல். உத்தியோகத்தர்களுக்குத் திடீர் இடமாற்றம் உண்டு. மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி கிடைக்கும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும்.

அதிஸ்ட நாள்: திங்கள்.

அதிஸ்ட இல.: 4.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) இனசனப்பகை, செலவு மிகுதி, பண வரவு மந்தம். குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை. உத்தியோகத்தர்கள் மனக்கவலை கொள்வர். மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 2.

**கன்னி**

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) முயற்சிகளில் கவனமுடன் இருக்கவும். பணக் கஷ்டம் உண்டு. வெளியிடப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளுடன் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்குக் கல்வியில் சிறிது பிரச்சனையுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 7.

**துலாம்**

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) மனதில் சஞ்சலம் தோன்றும். கருமங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். பண வரவு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகளுக்கு இடமளிக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்த நிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 6.

**விருட்சிகம்**

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் சிரமம். பண வரவுத தடை. பெரியோர் உதவி. வார இறுதியில் தேக சுகம் பாதிப்பு. உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளால் தொல்லை. மாணவர்களுக்குக் கல்வியில் குழப்பநிலை தோன்றும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: செவ்வாய்.

அதிஸ்ட இல.: 4.

**தனு**

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) உறவினர் பகை. குடும்பத்தில் எதிர்பாராத பிரச்சனை, பண வரவில் தடங்கல் உண்டு. உத்தியோகத்தில் வீண் பிரச்சனைகளுக்கு இடமளிக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 5.

**மகரம்**

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) முயற்சிகளில் கூடிய கவனம் வேண்டும். பெரியோர் வீண் பகை கொள்வர். பண வரவு சுமாராக இருக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் மந்தநிலை காட்டும். உத்தியோகத்தர்கள் பதவிகளில் கவனமுடன் செயற்படுவது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: புதன்.

அதிஸ்ட இல.: 3.

**கும்பம்**

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழிலில் சிறிது பிரச்சனை. தொழிலாளர் பகை. பண வரவு தாமதம். வார இறுதியில் மன மகிழ்ச்சி. உத்தியோக ரீதியாக முன்னேற்றம். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வெள்ளி.

அதிஸ்ட இல.: 3.

**மீனம்**

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சிகளில் வீண் தடை, பாரிய நஷ்டம். பண வரவு மந்தம். மனக் கலக்கம். தேகாரோக்கியம் பாதிப்பு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் வீண் தொல்லை. மாணவர்களுக்குக் கல்வியில் கஷ்டம். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.

அதிஸ்ட நாள்: வியாழன்.

அதிஸ்ட இல.: 4.


ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


# வீடியோ கேம்



→ 'வீடியோ கேம்ஸ்' எனப்படும் சிறுவர்களுக்கான இலத்திரனியல் விளையாட்டுக்கள் நமது நாட்டிலும் கூட மிகப் பிரபலமானவை. மேலை நாடுகளில் இந்த விளையாட்டு உபகரணங்கள் இல்லாத வீடுகளே இல்லை என்று சொல்லும் அளவு பிரபலமானவை.

காட்டூன் வடிவில் உருவங்களை வடிவமைத்து அவற்றுக்கு புரோகிரேம்களை வரைந்து, விளையாடும் உயிருள்ள மனிதர்களைப் போல் மாற்றுகிறார்கள். கம்பியூட்டரிலோ, தொலைக்காட்சியிலோ இவற்றுடன் விளையாட ஆரம்பிக்கும் சிறுவர்களுக்கு இவற்றை இலகுவில் விட்டுப் பிரிய முடியாத அளவு ஈர்ப்பை இந்த விளையாட்டுக்கள் வழங்குகின்றன.

அமெரிக்க, ஜப்பான் நிறுவனங்களே அதிக அளவில் இத்தகைய வீடியோ கேம்களைத் தயாரிக்கின்றன.

அமெரிக்காவில் 1999ஆம் ஆண்டு விற்பனைக்கு விடப்பட்ட 'போக்மொன் யெலோங்' என்ற ஒரு வீடியோ கேம் 10 நாட்களுக்குள் ஒரு மில்லியன் பிரதிகள் விற்பனையாகியது.

படத்திலிருக்கும் 'கிரேஷ் லென்டிகூட்' அல்லது 'நோட்டி டோக்' என்ற வீடியோ கேம்தான் உலகிலேயே அதிக அளவு விற்பனையாகிய கேம் சிஸ்டம். சோனி நிறுவனம் தயாரித்த இது வெளிவந்த 48 மணி நேரத்துக்குள் 980 000 யுனிட்கள் விற்பனையாகின. மேற்கு நாடுகள் பலவற்றில் இத்தகைய இலக்ரோனிக் விளையாட்டுக்களுக் குச் சிறுவர்கள் அடிமையாவது குறித் துச் சமூகவியலாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331




# கோபக்காரர்

↓ அவுஸ்திரேலிய அணியின் கடைசித் துடுப்பாட்ட வீரராக இருந்த போதிலும் அந்த அணியில் மட்டுமன்றி உலகிலேயே முன்னணிப் பந்து வீச்சாளர்களுள் ஒருவராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர் க்ளைன் மெக்ராத். அவுஸ்திரேலிய அணி வசமுள்ள மிகச் சிறந்த வேகப் பந்து வீச்சாளர் இவர். எப்பொழுதும் முதல் பத்து ஓவர்களுக்குள் எதிரணித் துடுப்பாட்ட வீரர்களைக் கதிகலங்க வைக்கும் ஆற்றல் மெக்ராத்துக்கு இருக்கிறது. அவரது பந்தின் வேகம் போலவே கோபப்படுவதிலும் மிகவும் வேகமானவர். பல சந்தர்ப்பங்களில் துடுப்பாட்ட வீரர்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறார். இது பல அவுஸ்திரேலிய வீரர்களுக்கு வழக்கமான விடயம். என்றாலும் மெக்ராத்திடம் சற்று அதிகமாகவே காணப்படுகிறது. கொழும்பில் நடைபெற்ற ஐ.சி.சி. போட்டிகளில் குறிப்பிடத் தக்க அளவு திறமை காண்பிக்கத் தவறிய போதிலும் மெக்ராத் உலகின் மிகச் சிறந்த பந்து வீச்சாளர்களில் ஒருவர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆரம்ப ஓவர்களை எதிர்கொள்வதில் அதிகம் சங்கடப்படுவது யாருடைய பந்து வீச்சின் போது என்று ஒருமுறை சச்சின் டெண்டுல்காரிடம் நிருபர் ஒருவர் கேட்டபோது அவர் பளிச்செனக் கூறிய பதில் 'க்ளைன் மெக்ராத்'.

---



→ ஸ்ரீபன் ஸ்பில் பேக் என்ற அமெரிக்கத் திரைப்பட இயக்குநரின் புண்ணியத்தில் டைனோசர் என்றால் என்ன என்று உலகம் முழுவதிலும் உள்ள சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் தெரியும். பல தசாப்தங்களுக்கு முன்பே டைனோசர்களின் எலும்புக் கூடுகள் மற்றும் உடற்பாகங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டுபிடிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தாலும் 'ஜுராசிக் பாக்' திரைப்படம் வெளியானதன் பின்புதான் பலருக்கு டைனோசர்கள் என்றால் என்ன என்ற விடயம் தெரிய வந்தது. இன்றைக்கும் திரைப்படத்துக்கு அப்பால் டைனோசர் பற்றிய ஆராய்ச்சிகள் ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா நாடுகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. மத்திய ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் உள்ள காடுகளில் புதிய ஆராய்ச்சிகள் அமெரிக்க விஞ்ஞானிகளால் தொடங்கப்பட்டுள்ளன. டைனோசர்களின் பூர்வீகம் மற்றும் அவற்றின் வாழ்வியல் நிலைகள் குறித்த மேலும் விரிவான தகவல்கள் இந்த ஆராய்ச்சிகளில் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். வெப்ப வலயக் காடுகளில் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் டைனோசர்கள் வாழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படும் பகுதிகளில் அகழ்வாராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இவற்றில் புதிய உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு அல்லது டைனோசர்களின் மரபணுக்கள் கிடைக்கப் பெற்றால் ஜுராசிக் பாக் திரைப்படத்தில் பார்த்தது போன்ற டைனோசர்களை உருவாக்க முடியும் என சில ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவிக்கும் அதே வேளை டைனோசர்கள் வாழ்ந்ததாக நம்பப்படும் காலம் மிக மிக அதிகம் என்பதால் இனிமேல் அவற்றைப் புவியில் உருவாக்குவது சாத்தியம் இல்லை என வேறு சிலர் கூறுகின்றனர்.

## தேடல் தொடர்கிறது...



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், ... ஆம் இலக்கத்தில் ... (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஒக். 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.